Registered as a News Paper

# மன்னா


பொழிவு - 12
குவிப்பு - 01
பக்கங்கள்- 20
விலை ரூபா 30.00
ஜனவரி - 2009
(ISSN 1800-2641)

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/75/News/2008

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Pozhivaham, Manna Paper Office, No. 31/2, Hospital Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2251161/ 060-2233276, Fax No - 023-2251161, E. Mail : nesanmnr@gmail.com

## பொதுமக்கள் மீதான விமான, எறிகணைத் தாக்குதல்களை உடனே நிறுத்துங்கள்!



### யாழ் ஆயர் ஜனாதிபதியிடம் அவசர வேண்டுகோள்

**யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு எழுதியுள்ள அவசரக் கடிதத்தில் வன்னி தாக்குதல்களை உடனடியாக நிறுத்தி அப்பாவி மக்களை அழிவிலிருந்து காப்பாற்றும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இலங்கை அரச படைகளினால் வன்னியில் மேற்கொள்ளப்பட்டுவரும் எறிகணைத் தாக்குதல்கள் மற்றும் விமானக் குண்டு வீச்சுக்களினால் பரந்தன் - முல்லைத்தீவு ஏ 35 வீதி மற்றும் தர்மபுரத்திற்கும் புதுக்குடியிருப்புக்கும் இடைப்பட்ட பகுதியில் அடைக்கலம் தேடி உள்ள பொதுமக்கள் நாளாந்தம் கொல்லப்பட்டும் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டும் வருகின்றனர். வழமையாக ஆபத்துக் காலங்களில் ஆலயங்களும் கோவில்களும் அடைக்கலம் கொடுக்கும் இடங்களாக இருந்து வந்துள்ளன. பாதுகாப்புக்காக மக்கள் எங்கு செல்வதென்று தெரியாதிருக்கும் நிலையில் இவ்விடங்களுக்கு செல்லும்படியே கேட்கப்படுகின்றனர். பொதுமக்களுக்கு எதிரான இத்தாக்குதல்களை நிறுத்துமாறும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறும் ஆயர் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச திருத்தந்தையைச் சந்தித்தார்



கடந்த டிசம்பர் முதலாம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கள் உரோமாபுரி சென்றபோது வத்திக்கானில் திருத்தந்தை 16ம் ஆசிர்வாதப்பரைச் சந்தித்தார் அதனைத் தொடர்ந்து வத்திக்கான் செயலாளரான கர்தினால் தார்சிசியோ பேட்ரோனே மற்றும் பேராயர் [illegible] மெம்பர்ட் ஆகியோரையும் சந்தித்தார்.

இலங்கையின் தற்போதய நிலை பற்றி அங்கு கலந்துரையாடப்பட்டது. தற்போதைய யுத்த நிலையினால் அதிகளவு தாக்கத்திற்குள்ளாக்கப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும், நீதியானதும், நீடித்து நிற்கக்கூடியதுமான அரசியல் தீர்வை எட்டுவதற்கான உரையாடலை மேற்கொள்ளல் ஆகிய தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன.

கத்தோலிக்க திருச்சபை பூரண மத சுதந்திரத்தை அனுபவிக்கும் என்ற நம்பிக்கையும் அங்கு வெளியிடப்பட்டது. கத்தோலிக்க திருச்சபை தனது மதச்சான்றுகள், கல்வி, சுகாதாரம், பிறரன்புச் செயற்பாடுகள், பொது நன்மைக்காக உழைத்தல், ஒப்புரவு, அமைதிக்கான செயற்பாடுகளில் ஈடுபடுதல் மூலம் போதியளவு பங்களிப்பை நாட்டிற்கு வழங்க வேண்டும் என்ற கருத்துக்கள் அங்கு பரிமாறப்பட்டன.

## மன்னார் மறைமாவட்டத்திற்கு மூன்று புதிய குருக்கள்

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மூன்று அருட்சகோதரர்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 12ம் திகதி மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களால் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட உள்ளனர். (இவர்கள் பற்றிய விரிவான தகவல்கள் 9ம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளன)



அருட்சகோ. மில்ரன் தேவராஜா



அருட்சகோ. றஜனிகாந்



அருட்சகோ. கிறிஸ்ரி றூபன்

### வாழ்த்துகின்றோம் வரவேற்கின்றோம்!

பணிக்களத்தில் காலடி பதிக்கும் புதிய அருட்பணியாளர்களை மன்னா மிகுந்த மகிழ்ச்சியோடு இறையாசீர் வேண்டி வாழ்த்தி வரவேற்கின்றது.

## புதிய முகவரியில் மன்னா பத்திரிகைப் பணியகம்

கடந்த 5 வருடங்களுக்கு மேலாக மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் இயங்கிவந்த மன்னா பத்திரிகைப் பணியகம் இவ்வாண்டு ஜனவரி மாதம் 1ம் திகதியில் இருந்து புதிய பணியகத்திற்கு இடம் மாறியுள்ளது. எமது புதிய முகவரி, தொலைபேசி எண், தொலைநகல் எண், புதிய மின் அஞ்சல் முகவரி ஆகியவற்றைக் கீழே தருகின்றோம்.

**பொழிவகம்**
மன்னா பத்திரிகைப் பணி மையம்,
இல. 31/2, வைத்தியசாலை வீதி, மன்னார்.
தொலைபேசி 023-2251161 / 0602233276 தொலை நகல் 023 - 2251161

**POZHIVAHAM**
Manna Paper Office
No. 31/2, Hospital Road, Mannar.
Tel. 023 - 2251161 / 0602233276
Fax: 023 - 2251161
E.Mail : nesanmnr@gmail.com

நற்செய்தி அறிவிப்பு ஆண்டு - 2009

**சிறப்புத் திருவிழா**

புனித செபஸ்தியார் பேராலயம்
மன்னார், இலங்கை.





அருட்தந்தை.P.சேவியர் அடிகளார்


நற்செய்தி அறிவிப்பு ஆண்டு சிறப்புத் திருவிழாவிலே
மறையுரையாற்றி, இறைவார்த்தையின் ஒளியிலே
எம்மை இறைவழிக்கழைத்து செபவாழ்வை
ஆழப்படுத்திய அன்பிற்கும், பாசத்திற்குமுரிய
அருட்தந்தை.P.சேவியர் அடிகளார் (இந்தியா)
அவர்கட்கு எமது நன்றியையும்,
பாராட்டுக்களையும் தெரிவிப்பதுடன்
தங்களது இறைபணி தொடர
வாழ்த்தி நிற்கின்றோம்.



அருட்தந்தை.S.K.தேவராஜா
(பங்குத்தந்தை)

பேராலயக் குருக்கள்,
பங்குமக்கள், மன்னார் பங்கு,
மன்னார் மறை மாவட்டம், இலங்கை.

## இலங்கையில் இருந்து விடைபெறும் திருத்தந்தையின் இலங்கைக்கான தூதுவர்



கடந்த 2004ம் ஆண்டு தொடக்கம் இலங்கைக்கான திருத்தந்தையின் தூதுவராக கடமையாற்றிய பேராயர் கலாநிதி மாறியோ செனாரி ஆண்டகை அவர்கள் இலங்கைக்கான தமது பணியை நிறைவு செய்கின்றார். இவர் சிரியா நாட்டினுடைய திருத்தந்தையின் தூதுவராக புதிய பணிப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள இருக்கின்றார். பேராயர் அவர்களின் புதிய பணி சிறக்க மன்னா சார்பாக வாழ்த்துகிறோம், வழியனுப்புகிறோம்.

### உங்கள் உறவினர் நண்பர்களுக்கு மன்னாவை அறிமுகப்படுத்துங்கள்

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்

உங்கள் உறவினர் நண்பர்களுக்கு மன்னாவை அறிமுகம் செய்யுங்கள். உங்கள் உறவினர் அல்லது நண்பர்களின் பெயர் முகவரிகளை தெளிவாக எழுதி சந்தாப் பணத்தையும் எமக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் உறவினர் நண்பர்களின் வீடுதேடி மன்னா பறந்து செல்லும். சந்தா பணம் அனுப்புவதுபற்றிய விபரங்களை 19ம் பக்கத்தில் காணலாம்.

# மன்னா
## மனப்பொழிவு

சிறப்பு ஆசிரிய தலையங்கம்
- Guest Editorial

## வன்னியில் இடம்பெயரும் மக்களின் அவலங்கள்

வடக்கில் குறிப்பாக வன்னியில் அகதிகளாக்கப்பட்டுள்ள மூன்று இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் முகாங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சுமார் இரண்டாயிரம் கர்ப்பிணித் தாய்மார்கள் காணப்படுவதாகவும், ஆயிரக்கணக்கில் சிறுவர்களும் குழந்தைகளுமிருப்பதாக, குறிப்பிடத்தக்களவில் வயோதிபர்கள் காணப்படுவதாகவும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த மக்களுக்கு ஏதோ மூன்று வேளையும் சாப்பாடு கொடுத்துவிட்டால் போதும் என்ற நிலையில் அதிகாரிகள் செயற்பட்டுக்கொண்டிருப்பதாகவும் இவர்களுக்கான மருந்துகள், குடிநீர், ஒழுங்கான சாப்பாடு எதுவும் கிடைக்கவில்லையெனவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யுத்தத்தை மனித நேயமுள்ள எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அன்பு, கருணை, அகிம்சை எனச் சிந்திக்கும் யாருமே யுத்தத்தை விரும்பமாட்டார்கள். சகலரும் அமைதியாகவும், சமாதானமாகவும் இன்புற்றிருக்க வேண்டுமென்பதே மனிதாபிமானத்தின் பிரதான அம்சமாகும். அனைத்து மதங்களும்கூட சமாதான சகவாழ்வையே போதித்து நிற்கின்றன. இந்த நாட்டில் மக்கள் இலட்சக்கணக்கில் தாம் பிறந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டிருப்பது வேதனையளிக்கக் கூடியதாகும். அந்த மக்களை மறந்து ஆட்சியாளரது சிந்தனைகள் வேறு திசையில் போய்க் கொண்டிருக்குமானால் அது ஜனநாயகமும் மனிதாபிமானமும் மறைந்துபோகும் ஒரு நிலைமையைக் காட்டிநிற்கும் என்பதை எவராலும் மறுத்துரைக்க முடியாது.

வன்னியில் இன்று அகதிகளாக்கப்பட்டுள்ள மக்கள் இந்த நாட்டின் பிரஜைகள். இந்த மண்ணில் பிறந்தவர்கள். இவர்களின் ஒருவரேனும் பாதிக்கப்படுவதை அனுமதிக்கமுடியாது. அரசாங்கமானது நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையினதும் பிரதான தேவைகளான உணவு, உடை, உறைவிடம் என்கின்ற மூன்றையும் உறுதி செய்யவேண்டிய கடப்பாட்டை கொண்டிருக்கிறது. இன்று வன்னியிலிருந்து அகதிகளாகி இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமையை வாய்பொத்தி மௌனமாகப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. ஒரு நாட்டில் நல்லாட்சி மலர்வதற்கு அந்நாட்டு மக்கள் பசியிலிருந்து, நோயிலிருந்து மீட்சி பெற்ற சமூகமாக மாற்றம் காணப்பட வேண்டும். நாட்டின் எந்தவொரு பகுதியிலும் எந்தப்பிரிவு மக்களும் அவலத்துக்குள் தள்ளப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கடந்த காலங்களில் வடக்கிலிருந்தும், தெற்கிலிருந்தும் அகதிகளாக வெளியேறிய இலட்சக்கணக்கான மக்களுக்கு உள்ளூர் மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலுமிருந்து நூற்றுக்கணக்கான அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களும் பல்வேறு நாடுகளும் தொடர்ச்சியாக நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொடுத்து வந்தன. அப்போது அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான உதவிகள் கிட்டிவந்ததை மறுக்க முடியாது. சில குறைபாடுகள் காணப்பட்டபோதிலும்கூட ஏதோவொரு வகையில் அந்த மக்களுக்கு நிவாரண உதவிகள் கிட்டிக்கொண்டேயிருந்தன. அண்மைக்காலத்தில் அரசாங்கம் எடுத்த முடிவுக்கமைய அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களால் நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. இந்த முட்டுக்கட்டைகள் தடைவிதிப்புகளுக்கு அரசு பல்வேறு நியாயங்களைக் கற்பிக்கலாம்.

மூன்று இலட்சம் அப்பாவி மக்களின் வாழ்க்கையோடு யாரும் விளையாடிக்கொண்டிருக்க இயலாது. இன்றைய அவசரத்தேவை அந்த மக்களின் வாழ்வுப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். தொண்டு நிறுவனங்கள்மீது கட்டுப்பாடு விதித்த அரசு அதற்கு மாற்றீடாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஒழுங்கான நிவாரண உதவிகளை வழங்கி அவர்களது துன்பத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மனித உரிமைகளுக்கான பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பின் செயலாளரான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தலைமையில் ஒரு குழு வவுனியா, மன்னார் பகுதிகளில் அகதி முகாம்களில் தங்கியிருக்கும் வன்னியிலிருந்து வந்த மக்களை நேரில் சந்தித்து அவர்களது நலன்களை விசாரித்து உதவுவதற்கு தயாராகி அங்கு போவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைக் கோரியபோதிலும் அமைச்சு அனுமதி வழங்க மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துன்பத்துக்குள் சிக்கியிருக்கும் அப்பாவித் தமிழ் மக்களின் மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கும் அரசாங்கமானது இந்த விடயத்தில் நழுவல் போக்கில் செயற்பட்டு தவறான அர்த்தங்களைக் கற்பிக்க முனையக்கூடாது. வன்னியில் பாதிக்கப்பட்ட மக்களை வாழவைப்பதற்கான பொறுப்பை அரசாங்கம் சரிவர நிறைவேற்ற வேண்டுமென்ற அவசியத்தை உணர்ந்து செயற்பட முன்வரவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

நன்றி - தினக்குரல் 21.01.2009
ஆசிரிய தலையங்கம்



# வாசகர் எண்ணங்கள்





### சுமந்து வா மன்னா



மலர்கின்ற பூவாய்
விடிகின்ற பொழுதெல்லாம்
தவம் கிடந்தோம்.
மலர் மாலைகள் ஆயிரம்
கசங்கவே கண்டோம்.
மணம் வீசும் மலர் கண்டோம்
விழுகின்ற பொழுதெல்லாம்
எழுகின்ற நேரம் காத்துக்கிடந்தோம்.
எழுகின்ற கனவுகள் நிலைக்குமா
என்று ஏக்கம் கொண்டோம்.
சமாதானச் செய்தியை கொண்டுவர வேண்டுமென
மன்னாவே உனக்காக ஏங்கிக் கிடந்தோம்.
விடிகின்ற புதுவருடம்
சமாதானத்தைக் கொண்டுவரவேண்டுமென
குழந்தை யேசுவிடம் வேண்டுகிறோம்.

- அ. சித்திராளன், ஆத்திக்குளி, முருங்கன்.

### இணையற்ற மன்னா ஈர்த்தது உள்ளத்தை



அன்பு என்ற அரும் பொருளை
ஆர்வத்துடன் தேடித் திரிந்தபோது
இணையற்ற மன்னா பத்திரிகை
ஈர்த்தது எம் உள்ளங்களை!

உன்னை மாதம் ஒருமுறை காண
ஊக்கத்துடன் காத்திருக்கும் நான்
எப்போ மீண்டும் கையில் தவழ்வாய் என
ஏக்கமுடன் காத்திருக்கிறேன்.

ஐக்கியமாய் எம் மத்தியில் வருவாய்
ஒன்று இரண்டு விடயங்களை அல்ல
ஓராயிரம் விடயங்களை சுமந்துகொண்டு
அவ்விடம் இருந்து இவ்விடம் வருகின்றாய்.

- செ. ஜெசி, கல்மடுநகர், வட்டக்கச்சி

### படை நடவடிக்கை, வெள்ளப்பெருக்கால்
## வன்னியில் மூன்றரை இலட்சம் பேர் பாதிப்பு

வன்னியில் படை நடவடிக்கைகளாலும் வெள்ளப் பெருக்கினாலும் மூன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் லோரன்ஸ் கிறிஸ்ரி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில், இவ்விதம் இவை தொடருமானால் உலக உணவுத்திட்ட அதிகாரி அண்மையில் குறிப்பிட்டிருப் - பதைப்போல் வன்னியிலுள்ள மக்கள் சோமாலியா நிலைக்கு மாறிக்கொண்டிருப்பதைத் தடுக்க முடியாது.

படை நடவடிக்கைகளால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளும் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளும் வன்னி மக்கள் வாழ்வில் பெரும் அவலநிலையை ஏற்படுத்தியுள்ளன. படையினரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் பெருமளவு பயிர்நிலங்கள் கைவிடப்பட்டுள்ள நிலையில் புதிதாக பயிர் செய்யப்பட்ட நிலங்களும் வெள்ளத்தால் அழிவடைந்துள்ளன. இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உலக உணவுத்திட்டத்தால் வழங்கப்படுகின்ற உணவும் மிகவும் குறைந்த அளவிலேயே வழங்கப்படுகின்றன. குழந்தைகளும் வளர்ந்தவர்களும் போசாக்கற்ற நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றார்கள்.

இடம்பெயர்ந்த மக்கள் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் பின்னர் பாரிய சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்கொண்டு வருகின்றனர். தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நீண்ட காலத்திற்குப் பின்னர் வன்னியில் மலேரியா மீண்டும் பரவ ஆரம்பித்துள்ளது. மலேரியா நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் மலத்தியோன் போன்ற மருந்துகளை எடுத்துவரவும் படையினர் தடுத்து வருகின்றனர். மருத்துவமனைகளில் மருந்துகளில்லை. இவை எல்லாம் சேர்ந்து எமது மக்களை சோமாலியா நிலைக்குக் கொண்டு செல்லும் நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.

அரசாங்கம் உணவையும், மக்களுக்கான அத்தியாவசியத் தேவைகளையும் ஆயுதமாகப் பயன்படுத்துகின்றது. இந்த அபாயத்தை எமது புலம்பெயர்ந்த மக்களதும் இந்தியத் தமிழகத்தினதும் பங்களிப்புகளுடன்தான் தடுத்து நிறுத்த முடியும் எனவும் அவர் கூறினார்.



வன்னியில் விமானத் தாக்குதலுக்கு அஞ்சி குழந்தையுடன் தரையில் பதுங்கியிருக்கும் இளம் தாய்.



வன்னியில் மழை வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளாகிய இடம்பெயர் முகாம்கள்

## வங்காலையில் கவிதை நூல் வெளியீட்டு விழா

வங்காலையைச் சேர்ந்த செல்வன் எஸ். பி. ஆன் வரேஸ் சொய்சாவின் 'சருகும் சுடுதீயும்' என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த ஜனவரி மாதம் 18ம் திகதி வங்காலை புனித ஆனாள் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் மன்னா ஆசிரியர் அருட்பணியாளர் தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு. க. பேனாட் அவர்களும் சிறப்பு விருந்தினராக வங்காலைப் பாடசாலையின் முதல்வர் அருட் சகோதரர் செ. கி. விஜயதாசன் அவர்களும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வின்போது ஆசியுரையினை வங்காலைப் பங்குத்தந்தை அருட்பணியாளர் ஞானப்பிரகாசம் அவர்கள் வழங்கினார். நூலிற்கான அறிமுகவுரையை பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலயப் பகுதித் தலைவர் திரு. சபா. அதிரதன் வழங்கினார். நூலிற்கான ஆய்வுரையினை வவுனியா வடக்கு கல்வி வலய ஆசிரிய நிலைய முகாமையாளர் திரு. சு. ஜெயச்சந்திரன் வழங்கினார்.

இந்நூலுக்கான வெளியீட்டுரையை அகில இலங்கை இளங்கோ கழக அமைப்பாளரும் பெருந்தலைவரும் மன்/ புனித ஆனாள் மத்திய மகாவித்தியாலயத்தின் ஆசிரியருமான திரு. பரா ரதீஸ் அவர்கள் வழங்கினார். செல்வன் வரேஸ் அவர்கள் இந்நூலை வெளியிட இவரே உற்சாகமும் ஊக்கமும் வழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் உரையாற்றிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு. பேனாட் அவர்கள் இளம் படைப்பாளிகள் ஊக்கமளிக்கப்பட்டு அவர்களுடைய முயற்சிகளுக்கு களம் அமைத்துக்கொடுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

செல்வன் வரேஸ் அவர்கள் வங்காலையைச் சேர்ந்த திரு. திருமதி ச. சென்பீற்றர் போல் சோசை தம்பதிகளின் இரண்டாவது மகனாவார். இவருடைய இலக்கிய ஆக்க முயற்சிகள் தொடர மன்னா வாசகர் சார்பாக வாழ்த்துகிறோம்.




நூலின் அட்டைப்படம்



நூலாசிரியர் வரேஸ்



நூல்வெளியீட்டு விழாவின்போது தமிழ் நேசன் அடிகளார் தலைமையுரையாற்றுவதையும், வங்காலைப் பங்குத்தந்தை ஏ. ஞானப்பிரகாசம் அடிகளார் ஆசியுரை வழங்குவதையும் காணலாம்.

# இலங்கையில் உள்ள தமிழ் மக்களை இறைவனால் மட்டுமே காப்பாற்ற முடியும்!

## வன்னி நிலமைகள் குறித்து மன்னார் ஆயர் கவலை



இலங்கைவாழ் தமிழ் மக்களை இனி அந்தக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். இனிமேல் சர்வதேச சமூகத்தை நம்பிப் பயனில்லை. தன்னார்வ அமைப்புக்களும், உலக நாடுகளும், சமாதான அமைப்புக்களும் தமிழ் மக்கள்மீது கரிசனை காட்டும் என நம்பியிருந்தும் பலனில்லை. இதிலிருந்து நாம் மீட்சிபெற முடியாதா? கடைசியில் அனைவரும் கைவிட்ட நிலையில் இறுதியில் அந்த இறைவனிடம்தான் கையேந்துகின்றோம். அவரை மட்டும்தான் நம்ப வேண்டும். அவர்தான் எமது இரட்சகர் என மன்னார் மறைமாவட்ட இராயப்பு யோசேப்பு ஆண்டகை தெரிவித்தார்.

மன்னாரில் சர்வமத அமைப்பினால் நடத்தப்பட்ட நத்தார் தின கிறிஸ்து பிறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். மதத்தலைவர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஆயர் அவர்கள் மேலும் கூறுகையில், வன்னி மக்களின் அவலங்களைக் கண்கொண்டு பார்க்க முடியாதுள்ளது. அங்கு தினமும் குழந்தைகள் உயிரிழக்கின்றனர். உண்ண உணவின்றித் தவிக்கின்றனர். இந்த நிலைமைகள் என்றுதான் தீருமோ? என்றார்.

மன்னார் சர்வமத அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் மன்னார் ஆயர், இந்துமத குருக்கள் சிறி மனோகர சர்மா, மௌலவி அஸிம், மெதடிஸ்த அருட்பணியாளர் அருள்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வினை மன்னார் சர்வமத அமைப்பின் இயக்குனர் அருட்தந்தை பெனோ அடிகளார் ஏற்பாடு செய்திருந்தார்.

## கோமரசன் குளம் பங்கில் புதிய ஆலயத் திறப்பு விழா

கடந்த டிசம்பர் மாதம் 20ம் திகதி அன்று கோமரசன்குளம் புனித பரலோக மாதா ஆலயத் திறப்பு விழா பங்குத்தந்தை அருட்பணியாளர் சகாயநாதன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது. மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் புதிய ஆலயத்தை ஆசீர்வதித்து திறந்துவைத்து திருப்பலி நிறைவேற்றினார்.

மாவட்ட அரச அதிபர் திருமதி பி. எம். எஸ். சாள்ஸ், பாடசாலை அதிபர் கே. தனபாலசிங்கம், உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். எஸ். ஜெயரட்ணம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

ஆலயக் கட்டிட நிர்மாணப் பணியாளர் திரு. கே. தவராசா ஆயரினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பெருமளவிலான இறைமக்கள் இந்த வைபவத்தில் கலந்து சிறப்பித்தனர்.

பல்வேறு தரப்பினரின் நிதி உதவியோடு பங்கு மக்களின் சிரமதானப் பணிகள் இந்த ஆலயத்தைக் கட்டி முடிக்க மிகப்பெரும் உதவியாக இருந்ததென பங்குத்தந்தை குறிப்பிட்டு பங்கு மக்களின் முயற்சியைப் பாராட்டினார்.

## முத். யோசவ்வாஸ் அடிகளின் 300வது ஆண்டு நினைவுக் கொண்டாட்டங்களுக்கான ஆயத்தங்கள்

ஆசாரத்துக்குரிய யோசவ்வாஸ் அடிகளாரின் விண்ணகப் பிறப்பின் 3வது நூற்றாண்டு நிறைவு 2011ம் ஆண்டில் இடம்பெறவுள்ளது.

எனவே அதற்கான ஆயத்தங்களில் ஈடுபடுவதற்காக தேசிய யோசவ்வாஸ் நிலையச் செயலகத்தினால் ஒழுங்குபண்ணப்பட்ட ஒன்றுகூடல் அதன் தலைவர் மேதகு ஆயர் வியான்னி பெர்னாண்டோ தலைமையில் பொறலை லங்காறாமவில் இடம்பெற்றது. எட்டு மறைமாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டு விரிவான செயற் திட்டங்களை ஆராய்ந்தனர்.

புனிதர் பட்ட நிகழ்வுக்கான உதவிப் பொறுப்பாளர் அருட்பணி. அலெக்ஸ் திசாநாயக்கா இந்தச் செயற்திட்டங்கள் பற்றி தனது அறிக்கையில் கூறியுள்ளதாவது, "இலங்கை அப்போஸ்தலரது விரைவான புனித பட்ட நிகழ்வுக்காக மக்கள் அனைவரும் செபத்தில் ஈடுபடவேண்டும். இவரது பரிந்துபேசுதலால் பெற்றுக்கொள்ளப்பட்ட நலன்களின் அறிக்கையை உதவிப் பொறுப்பாளர், ஆயர் இல்லம், இல. 873 பெரதேயா றோட், கண்டி என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும். இலங்கை கத்தோலிக்கரின் விசுவாசத்திற்காக ஆசாரத்துக்குரிய யோசவாஸ் அடிகளாருக்கு இலங்கைத் திருச்சபை நன்றி கூற வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.



முத். யோசேவ்வாஸ் அடிகள்

## உயர்கல்வியை நிறைவு செய்துகொண்டு எம். ஜெயபாலன் அடிகளார் நாடு திரும்பினார்



மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் எம். ஜெயபாலன் அடிகளார் தனது இரண்டு வருட உயர்கல்வியை இங்கிலாந்து நாட்டில் நிறைவுசெய்துகொண்டு கடந்த டிசம்பர் மாதம் நாடு திரும்பினார்.

இங்கிலாந்து நாட்டில் உள்ள கென்ற் என்ற மாகாணத்தில் புனித அன்சலம் சபையில் (St. Anselem Institution) ஆற்றுப்படுத்தலில் டிப்ளோமா கற்கை நெறியையும், பின்னர் இலண்டன் பல்கலைக்கழகத்தில் "சமயங்களின் உளவியல்" (Psychology of Religion) என்ற இரண்டு வருட கற்கை நெறியை ஒரு வருடத்தில் நிறைவுசெய்து கலைமாணி (M.A) பட்டத்தையும் பெற்றுள்ளார்.

அருட்பணி. ஜெயபாலன் அடிகளார் 1995ம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். மடு, மன்னார் பேராலயம் ஆகிய இடங்களில் உதவிப் பங்குத்தந்தையாகவும் பின்னர் விடத்தல்தீவில் 5 வருடங்கள் (1997 - 2001) பங்குத்தந்தையாகவும் சிறப்பாகப் பணியாற்றினார். அதனைத் தொடர்ந்து 5 வருடங்கள் (2001-2006) மன்னார் மறைமாவட்ட ஆயருடைய செயலராகவும் பணியாற்றினார். இதன் பின்னர்தான் தனது உயர்கல்விக்காக வெளிநாடு சென்றார். தற்போது மன்னார் மறைமாவட்டத்-தின் மறைக்கல்வி நிலைய இயக்குனராகப் பொறுப்பேற்றுள்ளார்.

## விடத்தல்தீவின் முன்னாள் பங்குத்தந்தை அருட்ணி. நீ. பீற்றர் அடிகள் காலமானார்

விடத்தல்தீவின் முன்னாள் பங்குத்தந்தை அருட்பணியாளர் நீ. பீற்றர் அடிகளார் கடந்த 09.09.2008ல் இத்தாலியில் இறைபதமடைந்தார்.

இவர் சில்லாலையின் 20வது குருமணி என்பது குறிப்பிடத்தக்கது. தமது அருட்பணி வாழ்வை தலங்கம், றாஜகிரிய, ஊர்காவற்றுறை, விடத்தல்தீவு ஆகிய பங்குகளில் வாழ்ந்தார். விடத்தல்தீவிலுள்ள பெரியமடு என்னும் இடத்தில் கிறிஸ்து அரசர் ஆலயத்தை தனது அயராத முயற்சியால் கட்டிமுடித்தார். தொடர்ந்து கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயம், புனித லூசியா பேராலயம், நீர்கொழும்பு புனித செபஸ்ரியார் ஆலயம் ஆகிய பணித்தளங்களில் தமது அருட்பணியை ஆற்றினார். அதன் பின்னர் தமது புனித பிரான்சிஸ்கு சபையின் தலைமைப் பீடமாகிய இத்தாலியிலுள்ள அசிசி பட்டினத்திலுள்ள பேராலயத்தில் அருட்பணியாற்றி, நோயின் காரணமாக ஓய்வுபெற்ற நிலையில் அங்கு காலமானார். இவரைக் "கயித்துப்பீற்றர்" என்று குருக்கள் செல்லமாக அழைப்பார்கள்.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

## அமரர் மேரி பஸ்ரியன் அடிகளாரின் 24வது நினைவு தினம்



1985ஆம் ஆண்டு வங்காலையில் இலங்கை இராணுவத்தால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட வங்காலைப் பங்குத்தந்தை அமரர் மேரி பஸ்ரியன் அடிகளாரின் 24வது நினைவு தினம் கடந்த 06.01.2009 அன்று வங்காலையில் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது.

அன்றைய தினம் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. அதைத்தொடர்ந்து அடிகளாரின் திரு உருவச்சிலைக்கு முன்னால் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன. வங்காலைப் பங்குத்தந்தை அருட்பணியாளர் ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் இந்த நிகழ்வுகளை சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

மேரி பஸ்ரியன் அடிகளார் படுகொலைசெய்யப்பட்டதற்கு கண்கண்ட சாட்சிகள் இருந்தும் அவர் இந்தியாவுக்கு படகு மூலம் தப்பிச்சென்றுவிட்டார் என அன்றைய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறியது குறிப்பிடத்தக்கது.

## மன்னார் மறைமாவட்டத்தில் எழுத்தூர் புதிய பங்காகப் பிரகடனம்

மன்னார் மறைமாவட்டத்தின் புனித செபஸ்தியார் பேராலயப் பங்கின் துணைப் பங்குகளான எழுத்தூர், பட்டித்தோட்டம், கீரி, தரவன்கோட்டை ஆகியவற்றை இணைத்து எழுத்தூர் பங்கு என்ற பெயரில் தனியான புதிய பங்கு பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 18ம் திகதி இந்தப் புதிய பங்கு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. குருமுதல்வர் அருட்பணியாளர் ஏ. விக்ரர் சோசை அடிகளார் அன்றைய நாளில் புதிய பங்கு உதயமாவதன் அறிவிப்பை எழுத்தூர் மரியன்னை ஆலயத்தில் வெளியிட்டார். புதிய பங்கின் முதல் பங்குத்தந்தையாக அருட்பணியாளர் மரியதாசன் அன்ரன் லியோன் அடிகளார் நியமிக்கப்-பட்டுள்ளார்.

எழுத்தூர் ஆலய வளாகத்தில் பங்குமனைக் கட்டிடம் கட்டப்பட்டு முடிவுறும் தறுவாயில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. புதிய பங்கின் பங்கு மக்களையும் புதிய பங்குத்தந்தை அன்ரன் அடிகளாரையும் மன்னா அன்பு நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்தி நிற்கின்றோம்.

## தமிழ்த் தேசியவாதியும் கவிஞருமான 'மாம்பழம் சுவாமி' இறைபதமடைந்தார்

தமிழ்த் தேசியவாதியும் கவிஞருமான 'மாம்பழம் சுவாமி' என அழைக்கப்படும் திரு. தேவதாசன் அன்ரனி கடந்த டிசம்பர் மாதம் 14ம் திகதி அமெரிக்க நியூஜேசியில் காலமானார். இலங்கையில் தமிழர்கள்மீதான வன்முறைகளை வெளிக்கொணர்ந்து வந்த இவர் இறக்கும்போது வயது 63 ஆகும்.

இலங்கையின் வடபகுதியில் கத்தோலிக்க குருவாகத் தமது பொதுவாழ்க்கையை தொடங்கிய இவர், தமிழ்க் கத்தோலிக்கர்கள் மத்தியில் இருந்துவந்த சாதித் தடைகளை மாற்றியமைக்கப் போராடினார். அத்துடன் தமிழ்க் கிறிஸ்தவர்கள் தமிழர்களின் முதன்மைப் பண்டிகையான தைப்பொங்கலைக் கொண்டாட வேண்டும் என்ற நடைமுறையையும் இவரே கொண்டுவந்தார்.

1977 ஆம் ஆண்டு மாம்பழம் சுவாமி, 'வளன்நகர்' என்ற நிலையத்தை மன்னாரில் ஆரம்பித்து இடம்பெயர்ந்த தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு அதில் புகலிடம் அளித்தார். இலங்கை அதிகாரிகளின் பிரச்சினை காரணமாக தமது குருநிலையை விட்டு அமெரிக்காவில் குடியேறினார். இந்த நிலையில் இவர் 'ஆலம் விழுதுகள்' "மாம்பூக்கள்" போன்ற பெயரில் தமிழர் விடுதலை வரலாறுகளை நூல்களாக எழுதினார். 'வெட்ட வெட்ட தழைக்கும்' என்ற பாடலையும் எழுதினார்.

'விடுதலையின் வாசலில்' என்ற இறுவெட்டை அண்மையில் வெளியிட்ட இவர், மற்றும் ஒரு நூலை எழுதிக்கொண்டிருக்கும் நிலையிலேயே மாரடைப்பால் காலமானார். கடந்த டிசம்பர் 7ம் திகதி நியுஜேசியில் இடம்பெற்ற தமிழ் நினைவு நாளில் பங்கேற்றமையே இவரின் இறுதி பொது நிகழ்வாக இருந்தது. இவரின் இறுதிக் கிரியைகள் டொரன்டோவில் நடைபெற்றது. அன்னாருக்கு மன்னார் மக்களின் ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலிகளை மன்னா வழியாகத் தெரிவிக்கின்றோம். அவருடைய ஆன்மா அமைதிபெறச் செபிக்கின்றோம்.

# மன்னார் மறைமாவட்ட செய்திகள்

## சமுதாயத்தின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும்

# கட்டிடக் கலைஞர்கள் நீங்களே!

### இளைஞர் கருத்தமர்வில் ஜேசுறாஜா அடிகளார்

"இன்றைய இளைஞர் நாளைய வளர்ந்தோர்" இன்றைய இளமைப் பருவத்தில் நல்லதொரு எதிர்காலத்தை மனதில் எழுப்பி தூர நோக்கோடு செயற்படுபவர் நாளைய சமூகத்தின் தலைவராகலாம் என்ற உண்மையை எடுத்தியம்பினார் மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணியாளர் பி. ஜேசுறாஜா அடிகளார்.

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் கடந்த 13-12-2008 அன்று பங்கு இளைஞர்களுக்கென மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவினால் நெறிப்படுத்தப்பட்ட முழு நாட் கருத்தமர்வின் ஆரம்ப உரையின்போதே அருட்தந்தை அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "இளமைப் பருவம் விலைமதிப்பற்ற பொன்னான பருவம். இப்பருவத்தில் ஒரு நிமிடத்தையேனும் வீணாக்காது நற்பண்புகளைக் கற்று நல்லுருவாக்கம் பெறவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். 'மனித விழுமியங்களும் தலைமைத்துவமும்' என்ற தலைப்பில் இடம்பெற்ற கருத்தமர்வை வவுனியா கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் திரு. சுவர்னராஜ் அவர்கள் முன்னின்று நடத்தினார். (தொடர்ச்சி 14ம் பக்கம்)



அருட்பணியாளர்
பி. ஜேசுறாஜா அடிகளார்

### விவிலியம் மற்றும் மறைபரப்புப் பணிகளுக்கு தனி ஆணைக்குழு

மன்னார் மறைமாவட்டத்தில் மறைக்கல்வி நிலையத்தோடு இணைந்திருந்த விவிலியம் மற்றும் மறைபரப்புப் பணிகளுக்கான ஆணைக்குழுக்கள் புதிய வருடத்தில் இருந்து தனியாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றின் புதிய இயக்குனராக அருட்பணியாளர் ஸ்ரனி அன்ரனி (அ.ம.தி) அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 5 வருடங்களாக மறைக்கல்வி நிலைய இயக்குனராக இருந்த அருட்பணியாளர் நேசன் அடிகளாரின் கீழ் இருந்த மறைக்கல்வி, கல்வி, விவிலியம், மறைபரப்புப்பணி, தன்னார்வ இறைவார்த்தைப்பணி, மன்னாபத்திரிகைப் பணி ஆகிய 6 பணிகள் தற்போது மூன்றாகப் பிரிக்கப்பட்டு மறைக்கல்வி, கல்வி, தன்னார்வப் பணி என்பவற்றிற்கு அருட்பணியாளர் எம். ஜெயபாலன் அவர்களும், விவிலியம், மறைபரப்புப் பணிகளுக்கு அருட்பணியாளர் ஸ்ரனி அன்ரனி அவர்களும் நியமிக்கப் - பட்டுள்ளனர். மன்னா பத்திரிகைப் பணியை அருட்பணியாளர் நேசன் அடிகளார் தொடர்ந்து ஆற்றுகின்றார்.

### மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர், குடும்பம் மற்றும் உளவளத்துணை நிலையத்தினால் நடாத்தப்படும்

## 2009ம் ஆண்டிற்கான திருமண ஆயத்த வகுப்புக்கள்

மன்னார். முருங்கன். மடு மறைக்கோட்டங்கள்

| மாதம் | திகதி |
|---|---|
| தை | 17 - 18 |
| மாசி | 14 - 15 |
| சித்திரை | 18 - 19 |
| வைகாசி | 16 - 17 |
| ஆனி | 20 - 21 |
| ஆடி | 18 - 19 |
| ஆவணி | 15 - 16 |
| புரட்டாதி | 19 - 20 |
| ஐப்பசி | 17 - 18 |
| கார்த்திகை | 14 - 15 |
| மார்கழி | 12 - 13 |

வவுனியா மறைக்கோட்டம்

| மாதம் | திகதி |
|---|---|
| தை | 10 - 11 |
| சித்திரை | 11 - 12 |
| ஆனி | 13 - 14 |
| ஆவணி | 08 - 09 |
| ஐப்பசி | 10 - 11 |
| மார்கழி | 12 - 13 |





### திருமண ஆயத்த வகுப்புகள் பற்றிய

## முக்கியமான ஒழுங்குகள்

1. திருமண ஆயத்த வகுப்புகள் மன்னாரில் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது சனி மற்றும் ஞாயிறு தினங்களில் மன்னார் பொதுநிலையினர் குடும்பம் மற்றும் உளவளப்பணி நிலையத்திலும், வவுனியாவில் ஒன்றுவிட்ட ஒரு மாதம் இரண்டாவது சனி மற்றும் ஞாயிறு தினங்களில் இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலய வளவில் அமைந்துள்ள மறைக்கோட்ட மேய்ப்புப்பணி மண்டபத்திலும் இடம்பெறும். (சில வகுப்புகள் தேவையைப் பொறுத்து மாற்றியமைக்கப்படும்)

2. திருமண ஆயத்த வகுப்புகள் குறிக்கப்பட்ட திகதியில் சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நடைபெறும்.

3. ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8:30 மணி தொடக்கம் மாலை 3:45 மணி வரை நடைபெறும். உரிய நேரத்திற்கு வந்து, வகுப்பு முடியும் வரை அனைவரும் இவ்வகுப்புகளில் முழுமையாகப் பங்கேற்க வேண்டும்.

4. தூர இடத்திலிருந்து வருகின்றவர்கள் போக்குவரத்து வசதியின்மை, ஏனைய எதிர்பாராத தடங்கல்கள், தூரம் போன்ற காரணங்களால் கடந்த காலங்களில் உரிய நேரத்திற்கும் முழுமையாகவும் வகுப்புக்களில் கலந்துகொண்டு பயனடைய முடியாத ஒரு சூழ்நிலை உருவாகியிருந்தது. எனவே இதனைக் கருத்திற்கொண்டு 2009ம் ஆண்டு திருமண ஆயத்த வகுப்புகளில் முழுமையாகக் கலந்து உச்சப் பயனை அடையும் நல் நோக்கத்திற்காகத் தூர இடங்களிலிருந்து வருகின்றவர்கள் மன்னாரில் / வவுனியாவில் தங்கியிருந்து இவ்வகுப்புக்களில் கலந்து கொள்ளுமாறு ஆலோசனை வழங்குகின்றோம்.

5. திருமண அருட்சாதனம் பெறத் திட்டமிட்டிருப்போர் கடைசி நேரம் வரை காத்திருக்காமல் வசதி கிடைக்கும்போது முன்னதாகவே இவ்வகுப்புக்களில் பங்குபற்றிப் பயனடைந்துகொள்ளுங்கள்.

6. திருமண ஆயத்த வகுப்புகளில் பங்குபற்றுவோர் வகுப்புகளில் முழுமையாகப் பங்குபற்றி சிறந்த பயனை அடையும் நோக்கத்தோடு அந்நாட்களில் வேறு ஏதாவது நிகழ்ச்சித்திட்டங்களை, வேறு செயற்பாடுகளை (உதாரணம் : திருணமப்பதிவு, பொன் உருக்க கடைக்குச் செல்வது போன்றவற்றை) தவிர்த்துக்கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் - கொள்ளுகிறோம்.

7. திருமண ஆயத்த வகுப்புகளில் பங்கு பற்றுவோர், விவிலியம், குறிப்புக்கொப்பி, பேனா என்பனவற்றைக் கொண்டுவரவும்.

8. இரண்டு நாள் ஆயத்த வகுப்பில் முழுமையாகப் பங்குபற்றுகின்றவர்களுக்கு மாத்திரமே எமது நிலையத்தால் - சான்றிதழ் வழங்கப்படும்.

9. திருமண ஆயத்த வகுப்பிற்கு வருகின்றவர்கள் பங்குத்தந்தையைச் சந்தித்து அவருடைய கடிதத்தைப் பெற்று வருமாறு அன்போடு கேட்டுக்கொள்ளுகிறோம்.

10. திருமண அருட்சாதனம் பெற உத்தேசித்திருப்பவர்களும், அவர்களின் பெற்றோர்கள் அல்லது பொறுப்பானவர்களும் தங்களது பங்குத்தந்தையை நேர காலத்தோடு சந்தித்து, உரையாடி அவருடைய ஆலோசனை -களையும், வழிகாட்டுதல்களையும் பெற்றுக் - கொள்வதை நாம் விரும்புகின்றோம்.

11. கத்தோலிக்க திருமண அருட்சாதனம் பெற உள்ள தடைகள், விதிவிலக்கு அல்லது கத்தோலிக்க திருச்சபையின் திருமண அருட்சாதனம் பற்றிய சட்ட ஆலோசனைகளைப் பெற விரும்புவோர் தங்கள் பங்குத்தந்தையூடாக ஆயர் இல்லத்தில் உள்ள மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. அ. விக்ரர் சோசை (Vicar General) அவர்களையோ, அல்லது புனிதசெபஸ்தியார் பேராலயத்தில் உள்ள மறைமாவட்ட சட்ட முதன்மைக் குருவாகிய (Judicial Vicar) அருட்பணி ச. தேவராஜா கொடுதோர் அவர்களையோ, அல்லது குடும்பப்பணி இயக்குனர் அருட்பணி. கி. அந்தோனிதாஸ் டலிமா அவர்களையோ தொடர்புகொண்டு ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

*- அருட்பணி. கி. அந்தோனிதாஸ் டலிமா இயக்குனர், தூய யோசவாஸ் பொதுநிலையினர் குடும்பம், உளவளத்துணை நிலையம், மன்னார்.*

## நெற்றிக்கண் ... நெற்றிக்கண் ...

### சமூகச் சீர்கேடுகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் பகுதி

# மின்சாரச் சீர்கேடு அது மன்னாரின் சாபக்கேடு!

**மக்கள் காதர்**

நூறு ஆண்டுகளுக்கு முன்னரே மன்னாருக்கு மின்சாரம் வந்துவிட்டது. அதுவும் ஆங்கிலேயர் மன்னாரை ஆண்டபோது மன்னார் பட்டினத்தைத் தலைநகராக்கி உடனடியாக இலவசமாகவே மின்சாரத்தை வழங்கினார்கள். பிரித்தானியா - விலிருந்து கொண்டுவரப்பட்ட இராட்சத மின்பிரபாக்கிகள் மூலம் இங்கு நாள் முழுவதும் மின்சாரம் வழங்கப்பட்டது. சகல வீடுகளிலும் முதலில் இலவசமாகவும் பின்னர் குறைந்த கட்டணத்திலும் மின்சாரம் வழங்கப்பட்டது தெருவெல்லாம் மின் கம்பம் அமைத்துப் பிரகாசமான மெர்குரி விளக்குகளைப் பொருத்தினர். மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினர்.


அது அந்தக் காலம்! இப்போது மன்னார் இருளில் மூழ்கிக் கிடக்கிறது. இது இந்தக் காலம். தற்போது அனேகமாக மாவட்டம் முழுவதும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.. மலைநாட்டிலி- ருந்து நீர்வலு மின்சாரம் சகல கிராமங்களையும் சென்றடைகின்றது. இதனால் மின்சாரம் மன்னார் மக்களின் அத்தியாவசியத் தேவையாகிவிட்டது. தற்போது கிராமங்களில்கூட அரிக்கன் லாம்புகள் இல்லை, குப்பி லாம்புகள் இல்லை, விறகு அடுப்புகள் இல்லை, துலாக் கிணறுகள் இல்லை, குளிக்க குளங்கள் இல்லை, பிரயாணம் செய்ய மாட்டு வண்டில்கள் இல்லை, காற்று வாங்க மரங்கள் இல்லை என்ற நிலையாகிவிட்டது. இப்போது எல்லாவற்றிற்கும் மின்சாரமே பயன்படுத்தப்படுகின்றது. அந்த அளவிற்கு மின்சாரம் எம்மை அடிமையாக்கிவிட்டது, அல்லது நாம் மின்சாரத்திற்கு அடிமையாகி - விட்டோம்.

இந்த நிலையில் மின்சார வெட்டு ஏற்பட்டால் மக்கள் என்ன செய்வர்? இருளையும், நுளம்புகள் மற்றும் கள்வர்களின் தொல்லை - யையும் எதிர்கொள்கின்றனர். மாலையானதும் வெளிக்கதவை மூடிக்கொண்டு ஓய்ந்து கிடக்கின்றனர். இவர்கள் கள்வர்களிடம் தப்பினாலும் இந்த நுளம்புக் கொலைஞரிட - மிருந்து தப்ப முடியாதே! இவையெல்லாம் மின்சாரத்தை மக்கள் மையப்படுத்தியதன் சாபக்கேடு போலும்.

முன்பு மன்னார் கிராம மக்கள் மின்சாரமின்றி சந்தோசமாக வாழ்ந்தார்கள். இப்போது மின்சாரத்துடன் மல்லுக்கட்டி மாழ்கிறார்கள். அந்த அளவிற்கு மன்னாரில் மின்சார விநியோகம் வலுவிழந்து சீர்கேடடைந்துள்ளது.

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

## அருட்பணியாளர் ஒல்பன் றாஜசிங்கம் (அமதி) அடிகளார் மீண்டும் மன்னார் மறைமாவட்டத்தில் பணி



கடந்த 20 வருடங்களுக்கு மேலாக மன்னார் மறைமாவட்டத்தில் கஸ்ரமான காலப்பகுதிகளில் அரும்பணியாற்றிய அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணியாளர் ஒல்பன் ராஜசிங்கம் அடிகளார் 10 வருட இடைவேளைக்குப் பின்னர் மீண்டும் மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்ற வந்துள்ளார். இவரை மன்னார் மறைமாவட்டம் நன்றியோடு வரவேற்று நிற்கின்றது. இவர் கடந்த ஜனவரி மாதம் 18ம் திகதி வஞ்சியன் குளப் பங்குத்தந்தையாக பணிப்பொறுப்பை ஏற்றுள்ளார்.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

## மன்னார் மறைமாவட்டத்தின் திருவழிபாட்டு நாட்காட்டி

**ஜனவரி மாதம்**

01 - இறைவனின் அன்னை தூய கன்னி மரியாள்
05 - இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி பேராயர் மேதகு மாறியோ செனாரி அவர்களின் பிறந்த தினம்.
18 - கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் (18 -25).
20 - தூய செபஸ்தியார் திருவிழா - மன்னார் பேராலயம், கட்டைக்காடு.
24 - மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 28 ஆண்டுகள் நிறைவு. (1981) காலை 7.30 மணிக்கு தோட்டவெளி மறைசாட்சிகள் ஆலயத்தில் கூட்டுத் திருப்பலி.
25 - திருப்பாலர் சபைத் தினம், தூய சின்னப்பர் திருவிழா - பூலார் குடியிருப்பு
29 - சலேசியன் அருட்தந்தையர்களின் விழா

**பெப்ரவரி மாதம்**

02 - தூய மரியன்னை திருவிழா - மடுத்திருப்பதி, மன்னார் மரியன்னை ஆலயம், அரிப்பு, பாலைக்குழி, காத்தான்குளம், துள்ளுகுடியிருப்பு
04 - இலங்கை மாதா பெருவிழா கண்டி அம்பிட்டிய தேசிய குருமட விழா
11 - தூய லூர்து அன்னை திருவிழா மாந்தை யாத்திரை ஸ்தலம்
22 - தூய இராயப்பர் திருவிழா - கத்தாளம்பிட்டி
25 - திருநீற்றுப் புதன் - தவக்காலம் ஆரம்பம் - உண்ணா நோன்பும் மாமிசத் தவிர்ப்பும்

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்



# ஏழ்மைக்கான காரணங்களுக்கு திருச்சபை பதில் அளிக்க வேண்டும்

### இலங்கை கறிற்றாஸ் நிறுவனத்தின் 40வது ஆண்டு விழாவில் கண்டி ஆயரும் ஆயர் பேரவைத் தலைவருமான வியான்னி ஆண்டகை

ஏழ்மைக்கான அடையாளங்களுக்குப் பதில் கூறுவது மட்டும் போதாது அதற்கான காரணங்களுக்கும் பதில் அளிக்க வேண்டும் என இலங்கை கறிற்றாஸ் நிறுவனத்தின் 40வது ஆண்டு விழாவில் கலந்துகொண்ட கண்டி மறை மாவட்ட ஆயரும் இலங்கை ஆயர் பேரவைத் தலைவருமான மேதகு வியான்னி பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

"இதனாலேயே நீதி, அமைதிக்கான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் நாம் ஈடுபடுகின்றோம். எமது அயலாருக்குப் பணி புரிவதே நாம் எமது அழைப்புக்கு அளிக்கும் முக்கிய பதில். இதுவே நற்செய்தியின் மையம். நாம் இறைவனையும் அயலாரையும் அன்பு செய்ய வேண்டுமென்று இயேசு கூறினார். இதனாலேயே திருச்சபை ஏழைகள், விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டோர், விதவைகள், அனாதைகள் போன்றோர் மட்டில் அக்கறை காட்டுகின்றது. 2ம் வத்திக்கான் சங்கத்தின் பின்னர் இந்த விடயத்தில் எமக்குத் தெரிவு என்பது இல்லை. நாம் அர்ப்பணம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். கறிற்றாஸ் நிறுவனத்தின் பணி இதனையே அடிப்படையாகக் கொண்டுள்ளது என்றும் ஆயர் கூறினார்.



## இலங்கைத் திருச்சபை (Church of Sri Lanka) உருவாக பிரார்த்தனை

இலங்கையிலுள்ள எல்லாத் திருச்சபைகளும் ஒன்றுபட்டு 'இலங்கைத் திருச்சபை' என்ற பெயரில் ஒரே திருச்சபை உருவாக வேண்டுமென இறை வேண்டுதல் செய்யும் வழிபாடுகள் கடந்த நவம்பர் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. ஏழு திருச்சபைகள் இலங்கையின் வெவ்வேறு ஏழு இடங்களில் இவ்வழிபாடுகளை நடாத்தின.

அங்கிலிக்கன் திருச்சபை, தென் இந்தியத் திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, இரட்சணிய சேனை, டச் மறுமலர்ச்சி சபை, பிரஸ்பிற்றரல் சபை, பப்ரிஸ்ற் சபை ஆகிய ஏழு திருச்சபைகளுமே ஒன்றுகூடி இவ்வழிபாட்டை நடாத்தின.

யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வழிபாடு வட்டுக்கோட்டை தென் இந்தியத் திருச்சபை ஆலயத்தில் நடைபெற்றது. இதனை ஏற்பாடு செய்த அங்கிலிக்கன் சபைக் குரு அருட்பணி. ஸ்ரீபன் அடிகளார் கருத்துக் கூறுகையில், "திருச்சபைகளின் ஒன்றிப்பிற்கான முதற்படியே இச்செபவழிபாடு" என்று தெரிவித்தார். இச்செயற்பாடுகளில் கத்தோலிக்க திருச்சபை இணைந்துகொள்ளவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## அருட்தந்தை பேணியோலா குருத்துவ வாழ்வில் 65 ஆண்டுகள் நிறைவைக் காண்கிறார்

அருட்தந்தை பேணியோலா கடந்த நவம்பர் மாதம் 21ம் நாள் தனது குருத்துவ வாழ்வின் 65ம் ஆண்டு நிறைவைக் கொண்டாடினார்.

இவர் தனது 15வது வயதில் இயேசு சபையில் இணைந்து 1943ம் அண்டு காலி புனித மரியாள் பேராலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இத்தாலி நாட்டைச் சேர்ந்தவரான இவர் இலங்கையிலே பணிசெய்துகொண்டு இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை பற்றிய அரிய வரலாற்று நூல்களை வெளிக்கொணர்ந்துள்ளார். இவருக்கு "மன்னா" சார்பாக எமது வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.



*கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் கொழும்பில் நடைபெற்ற தேசிய கிறிஸ்தவ இலக்கிய விழாவில் தனது வெளியீட்டுப் பணிகளுக்கான விருதை கொழும்புப் பேராயரிடமிருந்து அடிகளார் பெற்றுக்கொள்கின்றார்.*

## கிறிஸ்மஸ் தின யுத்த நிறுத்தக் கோரிக்கையை அரச தரப்பு நிராகரித்தமை கவலையளிக்கிறது

### – மன்னார் ஆயர் –

போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரிடமும் கிறிஸ்து பிறப்பு பண்டிகைக் காலத்தில் ஒரு வாரம் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் என ஆயர்கள் கூட்டாக விடுத்திருந்த கோரிக்கைக்கு அரச தரப்பிலிருந்து நிராகரிப்புப் பதில் வந்துள்ளமை எமக்குக் கவலையை ஏற்படுத்தியுள்ளது என மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப்பு ஆண்டகை தெரிவித்தார்.

புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட பெரிய கோமரசன் குளம் பரலோக மாதா ஆலயத்தை வைபவ ரீதியாகத் திறந்து வைத்து மறையுரை ஆற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் பெரும் மனித அவலம் வன்னியில் நடைபெறுகின்றது எனக் கவலை வெளியிட்ட ஆயர், நாட்டில் நிரந்தர அமைதி தோன்ற தினமும் செபத்தில் ஈடுபடவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

ஆயர் தொடர்ந்து பேசுகையில், நாங்கள் சமாதானத்திற்காக உழைப்பவர்களாகவே உள்ளோம். யாவரும் மனிதர்கள் என்பதனையே நாம் வலியுறுத்தி வருகின்றோம். இறைவன் எங்களைத் தேடிவந்து எங்களைச் சந்திக்கின்ற விழாவான கிறிஸ்து பிறப்பு விழா உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்தக் காலத்தில் நாட்டில் பூரண அமைதி ஏற்பட வேண்டும் என்பதே எங்களுடைய விருப்பம் எனவும் ஆயர் குறிப்பிட்டார்.

## நிஷா சூறாவளியால் யாழ் திருச்சபைக்கு பலத்த சேதம்

நிஷா சூறாவளியாலும், கடும்மழை, வெள்ளத்தினாலும் யாழ். மரியன்னை பேராலயம், யாழ் ஆயர் இல்லம் உட்பட பல ஆலயங்கள், மடங்கள், பங்கு மனைகள், நிறுவனங்கள் சேதமடைந்துள்ளன. நாவாந்துறையில் மக்கள் குடியிருப்புக்கள் பல முற்றாக அழிந்தன.

சென்ற ஆண்டு நவம்பர் மாதம் 26ம் திகதி யாழ் நகரைத் தாக்கிய நிஷா சூறா - வளியினாலும், தொடர்ந்து நான்கு நாட்களாகப் பெய்த கடும் மழையினாலும் மரியன்னை பேராலயம் உட்பட பல ஆலயங்கள், பங்கு மனைகள், குருமடங்கள், கன்னியர் மடங்கள், கத்தோலிக்க நிறுவனங்கள் பாடசாலைகள் பலவும் வெகுவான பாதிப்புக்குள்ளாகின.

யாழ் மரியன்னை பேராலயத்தின் அஸ்பெஸ்ரர் கூரைத்தகடுகள் தூக்கி வீசப்பட்டு பேராலயம் பலத்த சேதத்துக்குள்ளாகியது. பேராலய வளவுக்குள் நின்ற மரங்கள் பல முறிந்து வீழ்ந்தன. ஆயர் இல்லத்திலும் பல மரங்கள் விழுந்து கட்டடங்கள் சேதமுற்றன.

சென் பற்றிக்ஸ் கல்லூரிப் பிராந்தியம் முழுவதும் வெள்ளக்காடாக காட்சியளித்ததோடு, அங்கும் மதில்கள் வீழ்ந்தும், மரங்கள் முறிந்தும் பல அழிவுகள் ஏற்பட்டன. கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் புதிய கட்டடத்தின் கூரைத்தகடுகள் பறந்தும், மதில்கள், மரங்கள் வீழ்ந்தும் சேதங்கள் உண்டாயின. கறிற்றாஸ் கியூடெக் நிறுவன அலுவலகங்களுக்குள் வெள்ளம் புகுந்ததால் கணனிகள், மின்பிறப்பாக்கிகள் போன்றவை சேதமாயின. இவை தவிர யாழ் குடாநாட்டின் பெரும்பாலான ஆலயங்கள், பங்கு மனைகள், குருமடங்கள், கன்னியர் மடங்கள், கத்தோலிக்க நிறுவனங்கள் பாடசாலைகள், மக்கள் குடியிருப்புக்கள் போன்றவை பலத்த சேதத்துக்குள்ளாயின.

நாவாந்துறை பகுதியில் மக்கள் குடியிருப்புக்களில் மழை நீர் புகுந்ததால் பல வீடுகள் அழிந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## தூய்மையும் எளிமையும் ஆழமான விசுவாசமும் கொண்டு வாழ்ந்தவர் கருதினால் தோமஸ் கூறே

### 20ம் ஆண்டு நினைவு நாளில் கொழும்புப் பேராயர் புகழாரம்

இலங்கையின் முதலாவது கருதினால் தோமஸ் கூறே ஆண்டகையின் இறப்பின் 20ம் ஆண்டு நினைவுநாள் திருப்பலி அண்மையில் தேவத்தை இலங்கை நாயகி பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டபோது மறையுரையாற்றிய கொழும்புப் பேராயர் பேரருட்திரு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் கருதினாலுடைய எளிமையான ஆழமான விசுவாச வாழ்வினால் கொழும்பு மறைமாவட்டம் முழுவதிலும் தூய்மையின் நறுமணம் வீசியது என்ற புகழாரம் சூட்டினார்.

இரண்டாவது உலகப் போரின்போது இலங்கையை அழிவிலிருந்து காப்பாற்றுமாறு பேராயர் ஜீன் மாறி மாசன் ஆண்டகை மரியன்னையிடம் மன்றாடி, தனது மன்றாட்டு கேட்கப்பட்டதால் மரியன்னைக்கு ஒரு பேராலயம் அமைப்பதாக கொடுத்த வாக்குறுதியை கருதினால் கூறே தேவத்தையில் நிறைவேற்றினார். இங்கு அமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான இலங்கை நாயகி பேராலயம் மரியன்னைக்கு அளிக்கப்பட்ட நன்றிக் காணிக்கையாகும் எனவும் பேராயர் குறிப்பிட்டார்.



கருதினால் தோமஸ் கூறே ஆண்டகை

## கத்தோலிக்க குருவுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம்

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து இத்தாலியில் வசிக்கும் மக்களுக்கு ஆன்மீகப்பணியாற்றி வரும் அருட்தந்தை நெவில் ஜோ பெரேரா அடிகளார் "மருத்துவத்துறைக்கான சர்வதேச பல்கலைக்கழகத்துடன் இணைந்த" Medicina Alternativa என்னும் துறையினால் கௌரவ கலாநிதிப் பட்டம் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். மனிதர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் மட்டிலான இவரது அர்ப்பணிப்புள்ள சேவைக்காக இந்தக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) இடம்பெற்றது.

## கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களுக்காக பெத்தலகேமில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள்

கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களுக்காக இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பிடமாகக் கருதப்படும் பெத்தலகேமின் மாங்கெர் சதுக்கத்தில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடினர். இவர்களுக்கான பாதுகாப்பை வழங்கும் நடவடிக்கைகளில் பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூட் அப்பாஸின் படையினர் ஈடுபட்டிருந்தனர். இதேவேளை பெத்லகேமுக்கு வருவதற்கு காஸாவை சேர்ந்த 900 பேர் இஸ்ரேலிடம் விண்ணப்பித்திருந்ததாகவும் ஆனால் 300 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்ட - தாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஆயர்களின் கோரிக்கை நிராகரிப்புக்கு அங்கிலிக்கன் திருச்சபைத் தலைவர்கள் கவலை

நத்தார் மற்றும் புதுவருட பண்டிகை காலத்தில் போர் நிறுத்தம் மேற்கொள்ளுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்தமை குறித்து அங்கிலிக்கன் திருச்சபைத் தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

"இது உண்மையில் ஏமாற்றம் அளிக்கிறது. எமது கோரிக்கையை அரசாங்கம் தீவிரமாக கருத்திற்கொள்ளாமை கவலைக்குரியது" என குருநாகல் மறைமாவட்டதிற்கான அங்கிலிக்கன் ஆயர் குமார இலங்கசிங்க தெரிவித்ததாக இணையத்தளமொன்று செய்தி வெளி - யிட்டுள்ளது.

நத்தார் மற்றும் புதுவருட காலத்தில் போர் நிறுத்தமொன்றை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்திடமும் தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு மறைமாவட்ட ஆயர் துலிப் டி சிகோராவும், குருநாகல் மறைமாவட்ட ஆயர் குமார இலங்கசிங்கவும் இணைந்து கோரிக்கையை யாழ், மன்னார், அநுராதபுர, மறைமாவட்டங்களுக்கான கத்தோலிக்க ஆயர்களும் விடுத்திருந்தனர்.

ஆனால் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்தால் மாத்திரமே அரசாங்கம் போர் நிறுத்தம் செய்யும் என தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.



# சிறுவர் பொழிவு



## அன்பளிப்பு

செ. யூலியட், யாழ்ப்பாணம்

நத்தார்த் தினத்தை முன்னிட்டு துணிகள் வாங்குவதற்காக புடவையகம் நோக்கி சென்றுகொண்டிருந்தேன். செல்லும் வழியில் எனது நண்பி டிலுஷாவையும் காண நேர்ந்தது. கிழிந்த உடையுடனும், சோகம் ததும்பும் முகத்துடனும் என் எதிரே வந்து நின்று தங்களின் குடும்பத்திற்கு ஏற்பட்ட துயரத்தைக் கூறினாள். "ஒருநாள் இரவு வாகனத்தில் வந்த சிலர் பணம், உடமைகள் மற்றும் விலைமதிப்புக்குரிய பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு அப்பாவையும் பலவந்தமாக அழைத்துச்சென்றார்கள். இன்னும் விடவில்லை. பல தடவைகள் அவர்களிடம் சென்று கேட்டபோது, நாளை விடுகின்றோம், நாளை விடுகின்றோம் என்று கூறினார்கள். இப்போது தாங்கள் பிடிக்கவில்லை என்றே கூறிவிட்டார்கள்." என்றாள்.

மிகவும் செல்வச்செழிப்புடன் வாழ்ந்தவர்கள் இப்போது தந்தையையும் இழந்து, உடமைகளையும் இழந்து வாழ்வதறியாது தவிக்கின்றார்கள். தன்னுடைய இல்லத்திற்கு வந்து தங்களின் நிலைமையைப் பார்க்குமாறு அவள் என்னை அழைத்தாள்.

நண்பியின் அழைத்தலுக்கு சம்மதித்த நான், மூன்று இறாத்தல் பாணும், வாழைப்பழமும், ஒரு கிலோ பிஸ்கட்டும் வாங்கிக்கொண்டு அவளின் இல்லம் நோக்கிச் சென்றேன். தாய் மிகவும் மனவேதனையுடன் காணப்பட்டார். மற்றைய மூன்று சகோதரங்களும் நான் கொண்டுசென்ற சிறு பொதியை மிக உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். தாயாரிடம் அச்சிறிய உணவுப் பொதியைக் கொடுத்தவுடன் அதனைத் தனது நான்கு பிள்ளைகளுக்கும் பகிர்ந்துகொடுத்து தானும் சாப்பிட்டார். பிஸ்கட்டை காலை உணவிற்கு வைத்துச் சாப்பிடுங்கள் என்று கூறினார்.



இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த என் கண்களில் நீர்த்துளிகள் மல்கின. அவர்களின் இல்லத்தில் இருந்தவாறே சிந்திக்க -லானேன். "இவர்களைப்போல எத்தனை, எத்தனை ஏழைகள், அனாதைகள், கைவிடப்பட்டோர் இருப்பார்கள். அவர்களுக்கு நம்மாலான சிறிய உதவிகளைச் செய்தால் பிறக்கவிருக்கும் பாலக யேசு எங்களுடைய இல்லங்களிலும், உள்ளங்களிலும் நிச்சயமாகப் பிறப்பார். பெற்றோர் எனக்கு உடைகள், மற்றும் ஆடம்பரப் பொருட்களை வாங்கத் தந்த பணத்தில் ஏழைகள் அனாதைகளுக்கு உதவி செய்ய வேண்டும். நிலையில்லாத பொருட்களை வாங்கி பணத்தை விணாக்குவதைவிட ஒருசில ஏழைக் குடும்பங்களுக்கு அப்பணத்தைக் கொடுத்து பாலக யேசு பிறக்கிற தினத்திலாவது அவர்கள் வயிராற உண்டு, மகிழ்ந்து இருக்க வேண்டும்" என்று என் மனதில் திட்டம் போட்டேன்.

எனது இல்லத்திற்கு சென்றதும் பெற்றோரிடம் எனது முடிவைக் கூறினேன். அவர்களும் நான் செய்யப்போகின்ற அன்பளிப்பை நினைத்துப் பெருமைப்பட்டார்கள். நான் இம்முறை நத்தார் பண்டிகைக்கு அணியப் போகும் புதிய உடைதான் நான் அளித்த அந்தச் சிறிய அன்பளிப்பு.

## மெல்லச் சிரிங்க



**கண்ணன்:** நான் தினமும் காலை 9.00 மணிக்கு வேலைக்குச் செல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். ஆனால் முடியவில்லை.
**அருண்:** ஏன் முடியவில்லை?
**கண்ணன்:** எனக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை....

.....................

**மணி** : என்ன சுந்தரம், தலையில் ஏதோ அடிபட்டு ரொம்ப வீங்கியிருக்கு.
சுந்தரம்: என்ர மனைவி, "இனிமேல் நான் உங்களுக்கு அடிக்கமாட்டேன்" என்று கையில் இருந்த உலக்கையால் அடித்து சத்தியம் பண்ணினாள்.

.....................

**பேத்தி** : ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாதுதானே?
**பாட்டி** : ஆமா
**பேத்தி**: அப்ப நீங்க எப்படி வளைஞ்சீங்க?

.....................

ஆசிரியர்: பட்டம் பறக்கிறது. இது என்ன காலம்?
**மாணவன்:** இது காற்றடிக்கும் காலம் சேர்!

.....................

ஒருவர் : டாக்டர்...... எனக்கு வர வர வலது காது கேட்குதில்லை.
டாக்டர்: என்னப்பா சொல்றா? எதுவானாலும் என் இடது காதில சொல்லு!

*யேசுதாசன் ஆன்மேரி - யோசவாஸ் நகர், தோட்டவெளி.*

மகன் நாயை இழுத்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தான்.
**தந்தை** : "இந்தக் கழுதையோட எங்கே சுத்திவிட்டு வாறா"
**மகன்** : அப்பா! நல்லாப் பாருங்க இது கழுதை இல்ல நாய்.
**தந்தை** : நான் உன்னோட எதுவும் பேசவில்லை. இந்த நாயிடம்தான் பேசினேன்.

*இ. மிதுசன். புதுக்கமம், உயிலங்குளம்*

**அப்பா** : மகனே ஆறும், ஆறும் சேர்ந்தால் என்ன வரும்?
**மகன்** : இதுகூட தெரியாதா அப்பா வெள்ளம்தான் வரும்.

.....................

**சதீஸ்** : நீ ஏன் மீன் சாப்பிடுவதில்லை?
**அஜித்** : முள்ளுக் குத்தும் என்பதால்.
**சதீஸ்** : அப்ப செருப்புப் போட்டுக்கொண்டு சாப்பிடு.

.....................

டிறோமி : பஸ் ஏன் பஸ் தரிப்பிடத்தில் நிற்கின்றது
சஞ்சு : அதற்கு உட்காரத் தெரியாது அதனால்தான் நிற்கிறது

*ம. காமலின் சௌமியா குருஸ், முத்தரிப்புத்துறை*

## பொன்மொழிகள்

- உன் நண்பனை இரகசியமாகத் திருத்து. வெளிப்படையாகப் புகழ்.
- நெருப்பை நீ மறைக்க முடியும். ஆனால் உன் வாழ்வில் நடந்த துன்பம் என்னும் புகையை நீ என்ன செய்யப்போகின்றாய்?
- தூக்கம் மிகப்பெரிய திருடன். ஏனென்றால் அது ஒருவனுடைய வாழ்வில் சரி பாதியைத் திருடுகின்றது.
- தீயோர் உறவைவிட தனிமை மேலானது.
- செருப்பில்லை என முனங்கிக்கொண்டிருந்தேன். காலில்லாதவரைக் காணும்வரை.

**- பி. ஜோவ் பிரைவின் துரம், புனித அந்தோனியார் வீதி, தாழ்வுபாடு, மன்னார்.**

## வாழ்க்கையில் தோல்வி என்றால் ....

**வாழ்க்கையில் தோல்வி என்றால் நீங்கள் தோற்றவர் என்று பொருள் அல்ல. இதைக் கொஞ்சம் படித்துப் பாருங்கள்.**

தோல்வி என்றால் ...................
நீங்கள் எதையும் சாதிக்கவில்லை என்று அர்த்தமாகாது.
சில பாடங்களைப் படித்துள்ளீர்கள் என்றே அர்த்தமாகும்.

தோல்வி என்றால் .............
நீங்கள் அவமானப்பட்டதாக நினைக்க வேண்டாம்.
முயன்று பார்க்கும் துணிவு இருப்பதாக நினைத்துக்கொள்ளுங்கள்.

தோல்வி என்றால் .................
உங்களிடம் சரக்கு இல்லை என்று பொருள் அல்ல.
வேறு உத்திகளைக் கையாள வேண்டிய அவசியத்தை உணர்ந்துவிட்டீர்கள் என்று பொருள்.

தோல்வி என்றால் ................
நீங்கள் முயன்றது உங்களால் அடைய முடியாத பொருள் அல்ல.
அடையக் கொஞ்சம் காலதாமதம் என்று பொருள்.

தோல்வி என்றால்..................
வாழ்க்கையில் நாம் எல்லாவற்றையும் இழந்துவிட்டோம் என்பதல்ல. எதிர்காலத்தில் சாதிக்கப்போகும் காரியங்களில் எடுத்து வைக்கும் காலடிகளை நிதானமாக, அவதானமாக வை என உணர்த்துவதாகும்.

தோல்வி என்றால் ...........
கடவுள் உங்களைக் கைவிட்டார் என்று அர்த்தமாகாது. உங்களுக்கு வேறு நல்ல எதிர்காலத்தை நிர்ணயம் செய்து வைக்கிறார் என்றே அர்த்தமாகும்.

நம்பிக்கை என்பது திடமானதாக இருக்குமானால், மனம் தளராது இருப்பீர்களானால் வெற்றி நிச்சயம். எனவே துவண்டு விடாதீர்கள். நம்பிக்கையுடன் தளர்ச்சி இன்றி முயற்சியில் ஈடுபடுங்கள். வெற்றி உங்கள் கையில்.

ய. சகாயராஜ் இல. 89, முதலியார் குளம், செட்டிகுளம்.

## அறிஞர்களின் அமுத மொழிகள்



ஜவகர்லால் நேரு

- தாமதங்களுக்கான சமாதானங்கள் எனக்கு வேண்டியதில்லை. நான் விரும்புவது செயல் நிறைவேற்றமே.
*- ஜவகர்லால் நேரு.*

- கல்விக்கு அழகைக் கொடுப்பது தீமையிலிருந்து விலகிக்கொள்ளும் பொறுமை ஆகும்.
*- சாக்ரடீஸ்.*

- நட்புக்கொள்ளும் விடயத்தில் அவசரப்படாதீர்கள். நிதானமாக இருங்கள். நட்புக்கொண்டபின் அந்த நட்பு நிலைத்து நிற்க வழிதேடுங்கள்.
*- சாக்ரடீஸ்*

- வீழ்வது வெட்கமல்ல, வீழ்ந்தே கிடப்பதுதான் வெட்கமானது.
*- சீனப்பழமொழி*

- இருள் இருள் என்று சொல்லிக்கொண்டு சும்மா இருப்பதைவிட ஒரு சிறிய மெழுகுவர்த்தியை ஏற்ற முயற்சி செய்யுங்கள்.
*- கன்பூசியஸ்*

*தொகுப்பு : ஜெயாபலாஜி, முருங்கன்.*

# கவிதைப் பூக்கள்

### மலரட்டும் புதிய ஆண்டு



புதிய ஆண்டே வா! பூத்துக் குலுங்க வா!
பழைய ஆண்டில் பரமனின் வழிநடத்தலை
மறவேன் என்றும் என் உள்ளத்திலே!
மலரும் ஆண்டிலும் துணைபுரிவார்
மனநிறைவோடு அணைத்திடுவார்.
பழைய ஆண்டு விடைபெறட்டும்
புதிய ஆண்டு புலர்ந்திடட்டும்
பயந்திட வேண்டாம் என் மனமே
பரமன் இயேசு நடத்திடுவார்!

*அ. லவ்சாயினி*
*இல. 05. முதலியார் குளம், செட்டிகுளம்.*

### சமாதானமே வருக!



வருக வருக சமாதானமே
தருக தருக நிம்மதியை
வளமுடன் அனைவரும் வாழ்ந்திடவே
சீக்கிரம் வருக சமாதானமே!

அமைதியற்ற உலகினிலே
அமைதியை அளித்திடவும்
அகமகிழ்வைத் தந்திடவும்
சீக்கிரம் வருக சமாதானமே.

சாதி, மத, பேதம் நீங்கிடவும்
படுகொலைகள் நீங்கிடவும்
பாலியல் வன்முறை ஒழிந்திடவும்
சீக்கிரம் வருக சமாதானமே!



கோவில்கள் இரத்தக்கறையிலிருந்து விடுபடவும்
மக்கள் அகதிகளாவது நிறுத்தப்படவும்
மக்கள் நிம்மதியாய் வாழ்ந்திடவும்
சீக்கிரம் வருக சமாதானமே!

இறைவன் தந்த சமாதானமே
இகமதில் மக்கள் இன்புறவே
சிறுவர் நாம் அழைக்கின்றோம்
சீக்கிரம் வருக சமாதானமே!

*எஸ். மேரி டிபோட்*
*- நொச்சிக்குளம், உயிலங்குளம்.*

### கல்வியே கருத்தனம்



கல்வியைக் கற்றுவரும் பிள்ளை
பாரினில் உயர்ந்து வரும் முல்லை
கள்ளத்தில் செலவிட்ட நாளை - எண்ணி
பிற்காலத்தில் கவலை தரும் மூளை.

வருவதில்லை கல்வி தானாய்
அது வந்துவிட்டால் இனித்திடும் தேனாய்.
கொடுப்பதால் ஊறிடும் நீர் ஊற்றாய்
அதைப் பெறுவதால் வளர்ந்திடும் அறிவு ஊற்றாய்.



கல்வியே முகத்திற்கு அழகு
கனிவாய் நீயும் பேசிப்பழகு
செல்வம் எப்போதும் பழுது
அது சென்றுவிடும் உன்னைத் தொழுது.

*ஒ. சுதர்சன் - தரம் 12,*
*மன்/ நானாட்டான் ம. வி.*

### சமாதானப் பாதையிலே...!



இறைவன் படைப்பில் என்றும் ஏற்றமும்
இறக்கமும் இல்லை.
எல்லோருக்கும் பொதுமை தரும் இரத்தம்
என்றும் சிவப்பு நிறம்.
அசுத்தமில்லாத வேற்றுமையால் அழிந்து
நிற்கும் சமாதானம்
உள்ளத்தில் சமாதானம் இருந்தால்
உணர்விலும் சமாதானம் தோன்றும்.
உறவிலே சமாதானம் இருந்தால் உலகிலே
சகலதும் ஓங்கும்.

*யூ. இக்னேசியஸ் பறுனாந்து,*
*தரம் 10 - முத்தரிப்புத்துறை.*

### தற்கால நிலை......



அவலக்குரல் ஒன்று கேட்கிறது
யாரென்று தெரியாது
இளைஞனின் உயிர்
ஈவு இரக்கமின்றிப் பறிக்கப்படுகின்றது!

கட்டிய தன் கணவனைக்
காணவே இல்லை என்று
கிறுக்குப் பிடித்தபடி ஒரு பெண்
கீசிக்கொண்டு அலைகிறாள்.

பள்ளிக்குச் சென்ற பிள்ளை
பார்வைக்கு அழகானவள்
பிணமாய்க் கிடக்கிறாள் என்று
பீறிட்டு அழுகிறாள் ஒரு தாய்!

*செ. மேரிஜெசில்டா - கல்மடுநகர், வட்டக்கச்சி*

# உலகத் திருச்சபைச் செய்திகள்

## அதிகளவு இரக்கத்துடனும் நீதியுடனும் வாழ்வதற்கும் உலக சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அகிம்சை வழி அத்தியவசியமானது

### தீபாவளிச் செய்தியில் சர்வமத உரையாடலுக்கான திருப்பேராயம்

அகிம்சை வழியைக் கைக்கொள்ளும்படி இந்து கத்தோலிக்க மதத்தலைவர்களுக்கு வத்திக்கான் அழைப்பு விடுத்துள்ளது. அதிகளவு இரக்கத்துடனும் நீதியுடனும் வாழ்வதற்கும் உலக சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அகிம்சை வழி அத்தியவசியமானது. கிறிஸ்தவர்களதும், இந்து மதத்தலைவர்களதும் அடிப்படையான நம்பிக்கை அகிம்சையே என்று அது தனது தீபாவளி வாழ்த்தில் தெரிவித்துள்ளது.

இச்செய்தியானது உலகளாவிய ரீதியில் அனைத்து இந்து மத மக்களுக்கும் சர்வமத உரையாடலுக்கான திருப்பேராயத்தினால் அனுப்பப்பட்டது. "இந்தியாவில் அதிகளவான இந்துக்கள் கத்தோலிக்கருடன் அமைதியுடனும் இணக்கப்பாட்டுடனும் வாழவே விரும்புகின்றனர்" என்று மொன்சினோர் அன்று வைசாணு கூறினார். "நாம் இதனை முற்றாக நம்புகின்றோம். இந்தியாவிலுள்ள இந்துக்களின் நல்மனதை நாம் அறிவோம். அதனாலேயே அவர்களின் இந்த மாபெரும் விழாவின்போது நாம் அவர்களுக்கு இந்தச் செய்தியை அனுப்புகின்றோம். எமது மதிப்புக்குரிய மதங்களுடன் இணைந்து அகிம்சை வழிக்கான பொதுவான அர்ப்பணத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்" என்றும் அவர் கூறினார்.

இந்தச் செய்தி போதியளவு விரிவாகக் கூறப்படாவினும் ஒரிசாவில் நடந்த வன்செயல்களின் பின்புலத்திலேயே எழுதப்பட்டுள்ளது. ஓகஸ்ட் இறுதி வாரத்தில் தொடங்கி ஏழு வாரங்களாக நடைபெற்ற இந்த வன்செயல்களில் குறைந்தது 59 பேர் பலியாகியுள்ளனர். 50,000ற்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்துள்ளனர். ஏறக்குறைய 100 ஆலயங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

சர்வமத உரையாடலுக்கான வத்திக்கான் அலுவலகம் கடந்த 16 வருடங்களாக இந்து மத மக்களுக்குத் தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றது. இச்செய்தியானது வத்திக்கான் தூதராலயம் மற்றும் ஆயர் மன்றங்கள் ஊடாக உலகெங்கும் அனுப்பப்பட்டது.



## மும்பைத் தாக்குதல்கள்!
### திருத்தந்தை கவலை

திருத்தந்தை 16ம் பெனடிக்ற் இந்தியாவின் மும்பை நகரில் அண்மையில் நிகழ்ந்த தாக்குதல்கள் மனித மாண்பைச் சிதறடித்த நிகழ்வு என்று வன்மையாகக் கண்டித்ததோடு தனது கவலையையும் வெளியிட்டார்.

மும்பைப் பேராயர் கருதினால் ஒஸ்வோல்ட் கிராசியாஸ் ஆண்டகைக்கு அனுப்பிவைத்த செய்தியில் மேற்கண்டவாறு கூறிய திருத்தந்தை இவ்வன்முறையால் உயிரிழந்தவர்களின், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தனது அனுதாபங்களையும், கரிசனையையும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

உயிரிழந்தவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காகவும் திருத்தந்தை செபித்தார். வன்முறைகளுக்கு எதிர் வன்முறைகள் செய்யாமல் சாந்தகுணத்தோடு அவற்றை எதிர்கொள்ளுவதன் மூலமே வன்முறையைத் தோற்கடிக்க முடியும் என்றும் அவர் மும்பை நகர மக்களுக்கு அறிவுரை வழங்கினார்.

அண்மையில் முஸ்ஸிம் தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படுவோரினால் மும்பை நகரில் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளால் வெளிநாட்டவர்கள் உட்பட 182 பேர் கொல்லப்பட்டதும் 300க்கும் அதிகமானவர்கள் காயமடைந்ததும் தெரிந்ததே.

## கிறிஸ்தவர்களும் இந்துக்களும் ஒன்றிணைந்து அகிம்சை வழிக்கு ஆதரவு நல்க வேண்டும்

### வத்திக்கான் சர்வமத உரையாடலுக்கான திருப்பேராயத்தின் இந்துமத சகோதரர்களுக்கான தீபாவளிச் செய்தியின் முழுமையான வடிவம்

அன்பான இந்து மத நண்பர்களே!

1. ஒளியின் விழாவான தீபாவளி விழாவைக் கொண்டாடுவதற்கு நீங்கள் ஆயத்தப்படும் இவ்வேளையில் சர்வமத உரையாடலுக்கான திருப்பேராயத்தின் பெயரால் உங்களுக்கும் உங்கள் சமூகத்தினருக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

2. வழமையாக இந்த விழாவின்போது எமது ஒரு பொதுவான அக்கறைப்பற்றி நாம் பகிர்ந்து கொள்வதுண்டு. எனவே இன்றைய சமுதாயத்தில் நாம் எவ்வாறு ஒத்திசைவுடன் வாழலாம் என்பதையும் தீபாவளி விழா எமக்கு உணர்த்தும் உண்மை ஒளி நம்பிக்கை ஆகியவற்றிக்கு நாம் எவ்வாறு ஒன்றிணைந்து சான்றுபகர முடியும் என்பதையும் கவனத்தில் கொள்வோம். சமுதாயத்தில் ஏற்படும் முரண்பாடுகளுக்கு மதங்களே காரணம் என்று குற்றம் சாட்டப்படும்பொழுது மதத்தை திறமையாகக் கையாளும் நிலை அதன் அடிப்படையான நம்பிக்கைகளுக்கு முரண்பாடானதாகக் காணப்படுகிறது. இந்த முரண்பாடுகளே பல்வேறுபட்ட வன்செயல்களுக்கு இட்டுச் செல்கின்றன என்பது எமக்குத் தெரியும்.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

## புனித அல்போன்சாவின் நினைவுச் சின்னங்கள் புகைவண்டியில் ஆன்மீகச் சுற்றுப் பயணம்

தென் ஆசியாவின் முதற் புனிதையான புனித அல்போன்சாவின் புனித பொருட்கள் மற்றும் திருச்சொரூபம் போன்றவற்றை பெற்றுக் கொள்வதற்காக நூற்றுக்கணக்கான குருக்கள், துறவிகள் மற்றும் 500 கத்தோலிக்கர் இணைந்து புதுடில்லி புகையிரத மேடையில் காத்திருந்தனர்.

புதுடில்லி மறைமாவட்டத்தின் 42 பங்குகளுக் கூடாக தனது 25 நாள் ஆன்மீகப் பயணத்தைத் தொடர்ந்த புகைவண்டி, ஒக்டோபர் 23ம் நாள் நிசாமுடின் புகையிரத நிலையத்தை வந்தடைந்தது. நவம்பர் 16ம் நாள் நடைபெற்ற மாபெரும் செபவழிபாடு இதன் உச்சக்கட்டமாய் அமைந்தது.

புதுடில்லியில் அமைந்துள்ள சீரோ மலபார் சடங்கு முறையிலான ஆலயத்தில் நினைவுச் சின்னம் வைக்கப்பட்டது. புனித அல்போன்சா சீரோ



மலபார் திருச்சபையைச் சேர்ந்தவர். இந்தியாவின் 16 மில்லியன் கத்தோலிக்கரில் 3.5 மில்லியன் மக்கள் சீரோ மலபார் திருச்சபையைச் சேர்ந்தவர்கள்.

## வத்திக்கானுக்கு ஆஸ்திரியாவிலிருந்து கிறிஸ்மஸ் மரம்

### தூய பவுலின் ஆண்டைச் சிறப்பிக்கும் முகமாக இவ்வாண்டு இன்னொரு மரம

வத்திக்கான் தூய பேதுரு பேராலய முன்றலில் நடப்படுகின்ற பாரிய கிறிஸ்மஸ் மரம் ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு நாடுகளிலிருந்தே தருவிக்கப்படுகின்றது. இவ்வருடம் இந்த மரத்தை வழங்கும் சந்தர்ப்பம் ஆஸ்திரியா நாட்டுக்கு வழங்கப்பட்டது.

வழமையாக ஒரு மரமே தருவிக்கப்படும். ஆனால் இவ்வாண்டு தூய பவுலின் ஆண்டைச் சிறப்பிக்கும் முகமாக இரண்டு மரங்கள் கொண்டுவரப்பட்டன. அவற்றில் ஒன்று பவுல் பேராலய முன்றலில் நடப்பட்டது.

தூய பவுல் பேராலய முன்றலில் நடப்பட்ட மரம் 82 அடி, உய்ரம் கொண்டதாயினும் அது வத்திக்கான் தூய பேதுரு பேராலய முன்றலில் நடப்பட்ட மரத்தைவிட உயரத்தில் சிறிது குறைவாகவே இருந்தது.

## கத்தோலிக்க குருத்துவம் பற்றிய அனைத்துலக மாநாடு

### இலங்கையின் பிரதிநிதியாக யாழ் குருமுதல்வர் யஸ்ரின் அடிகளார்

ஆசிய ஆயர் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட கத்தோலிக்க குருத்துவம் பற்றிய அனைத்துலக மாநாடு சென்ற நவம்பர் மாதம் 17ம் திகதி முதல் 22ம் திகதி வரை தாய்லாந்து நாட்டின் அசம்சன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

*"கத்தோலிக்க குருத்துவம் - நவீன உலகின் சவால்"* என்ற தலைப்பில் நடைபெற்ற இம்மாநாட்டில் உலகின் 10 நாடுகளிலிருந்து 80 பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள் இலங்கையின் பிரதிநிதியாக இம்மாநாட்டில் பங்குபற்றினார்.



## இந்தியாவில் குருவானவரின் படுகொலைக்கு எதிர்ப்பு




கடந்த ஓகஸ்ட் மாதம் 16ம் திகதி அன்று தனது பணித்தளத்தில் இருந்து திரும்பிக்கொண்டிருந்த அமலமரிக் கார்மேல் சபைக் குருவானவர் (Carmelite of Mary Immaculate Priest) அருட்பணியாளர் தோமஸ் பாண்டிபள்ளி அவர்கள் இந்தியாவின் கைதரபாத்தில் இந்துத் தீவிரவாதிகளால் மிகக்கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டு படுகொலைசெய்யப்பட்டார். அவருடைய கைகளையும் கால்களையும் முறித்து, கண்களைப் பிடுங்கி, தடிகளால் கடுமையாக அடித்துக் கொலைசெய்யப்பட்டார். இக்குருவானவர் கொலைசெய்யப்பட்ட நினைவு நாளில் குருக்கள், துறவியர், இறைமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## உலகிற்கு நம்பிக்கை அளிப்பதே திருச்சபையின் பணி

### திருவருகைக்காலச் செய்தியில் திருத்தந்தை

திருவருகைக் காலம் நம்பிக்கையின் காலமாகும். இக்காலத்தில் திருச்சபை தனக்கும் உலகுக்கும் நம்பிக்கையின் சின்னமாகத் திகழ வேண்டும் என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ற் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, திருச்சபை-யின் எல்லா செயற்பாடுகளும் நம்பிக்கையையே அடிப்படையாகக் கொண்டவை. இத்திருவருகைக் காலத்தில் இறைவன் ஆழமான செபத்தின் வழியாகத் தன்னை சந்திக்குமாறு அழைப்பு விடுக்கின்றார். 142ம் 143ம் திருப்பாடல்களை நாம் செபிக்கும்போது நம்பிக்கையின் ஒளியை அனுபவிக்கின்றோம்.

142ம் திருப்பாடலின்படி ஆபத்திலிருக்கும் ஒருவரின் கூக்குரல்போலவே திருச்சபையும் தன்னைச் சூழவுள்ள தீமையிலிருந்தும், தூய்மைக்கு எதிராக எழும் சவால்களிலிருந்தும் தன்னைக் காக்கும்படியாக நம்பிக்கையோடு இறைவனை நோக்கிக் குரல் எழுப்புகின்றது. 143ம் திருப்பாடலின் ஆசிரியரை கிறிஸ்துவாக அடையாளம் கண்டு அவருடைய இரண்டாம் வருகை எமக்கெல்லாம் விடுதலை அளிக்கும் என்ற நம்பிக்கையில் நாம் துணிவுடன் அனைத்து சவால்களையும் எதிர்கொள்ள வேண்டும் என்று கூறினார். நாம் போலியான நம்பிக்கைகொண்டு, தவறான வழிகளில் செல்லாமல் என்றுமே எமக்கு ஏமாற்றம் அளிக்காமல் எல்லா மனித வர்க்கத்தையும் விடுதலை வாழ்விற்குள் இட்டுச்செல்லும் கிறிஸ்துவின் மீட்பிலே நம்பிக்கை கொள்ள இக்காலம் எம்மை நெறிப்படுத்த பரிசுத்த கன்னிமரியாளின் துணையை நாடவேண்டும் என்றும் திருத்தந்தை கேட்டுக்கொண்டார்.



# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### புது உலகம் படைத்திடுவோம்



வன்முறை வந்து வாட்டியதால்
வளங்கள் இழந்து வாழ்வினிலே
பன்முறை நாமும் பயந்தோடி
பதுங்கு குழிகள் தான்தேடி
மண்ணை இழந்தும் அகதிகளாய்
மானிலம் எங்கும் அலைகின்ற
புண்செயல் நீங்கப் புவியினிலே
புலரட்டும் புதுயுகம் இம்மண்ணில்.

நாட்டில் நடக்கும் யுத்தத்தால்
நாசச் செயல்கள் மலிந்தின்று
காட்டில் வாழும் விலங்கைப்போல்
காணும் மனிதர் யாவருமே
போட்டி போட்டுத் தமக்குள்ளே
பொல்லாப் பகைமை கொள்கின்ற
கேட்டில் இருந்தும் புறப்பட்டு
காண்போம் புதுயுகம் இம்மண்ணில்.

பாட்டும் பண்ணும் ஒலிக்கின்ற
பைந்தமிழ் மண்ணின் மீதினிலே
வேட்டுச் சத்தம் கேட்பதனால்
வேதனை கொண்டு எல்லோரும்
வாட்டும் வறுமைச் சிறைக்குள்ளே
வாழ்க்கை கழிக்கும் வகைமாற்ற
பூட்டை உடைத்துப் புறப்படுவோம்
புதிய ஆண்டில் கால் பதிப்போம்



நித்தம் இங்கு நடக்கின்ற
நீசச் செயல்கள் தான்கண்டு
சித்தம் நோகப் பலரின்று
சீவியம் தேடிச் சிதறுண்டு
செத்துப் பிழைத்து வாழ்கின்ற
செயல்கள் இனியும் இல்லாத
புத்தம் புதிய புவிகாண
புறப்படுவோம் புதுப்படையாக!

இல்லம் தோறும் எல்லோரும்
இன்பம் கொண்டு வாழ்ந்திடவும்
உள்ளம் மகிழும் வகையினிலே
உலகோர் அன்பால் இணைந்திடவும்
துள்ளித் திரியும் பாலகரும்
துயரே இன்றி வாழ்ந்திடவும்
புது யுக்ம் இங்கே நாம் காண்போம்.

நித்திரை விட்டு நிம்மதியாய்
நிறை மனதுடனே எழுந்தெங்கும்
பத்திரமாகச் சென்றே நாம்
பயணம் செய்து பிழைத்திடவும்
வித்தைகள் பலவும் கற்றிங்கு
விரைந்து வாழ்வில் உயர்ந்திடவும்
மலரும் மணமும் போலிங்கு
மனதால் இணைந்து மகிழ்வுடனே
பலரும் வாழும் புது உலகம்
படைக்க வருக புத்தாண்டில்.


*ச. கயசினி (சஞ்சு)*
*முதலைகுத்தி, உயிலங்குளம்.*

### ஒளியை நோக்கி

மனுக்குலத்தின் பாவத்திற்கு
மௌன அஞ்சலி செலுத்த
மனுவுருவெடுத்தார் எம் மைந்தன்.
அமைதியெனும் ஆசீரை அகிலமதில் பொழிய
உதித்தார் எம் இறைவன் மனிதனாய்.
இருளின் ஆதிக்கம் இழுத்தெடுத்த வேளையும்
சுட்டெரிக்கும் சூரியனாய் தீமைகளை எரித்து
தீபத்தின் திரியானார் எம் இறைவன்.

தவழ்ந்துவரும் தென்றல் காற்று
தரணியில் செய்தி சொல்ல
ஒளிர்ந்தார், மிளிர்ந்தார் எம் பாலன்!
வைகறைப் பொழுதின் வசந்தம்போல
வைக்கோல் புல்லினை மெத்தையாக்கி
அமைதியில் தூங்குகிறார் எம் பாலன்.

மாடுகள் தாழ்பணிந்து
மகிழ்வுகொண்ட நந்நாள் அது!
வானம் இசை இசைத்து மேகமது முத்தமிட
தாழ்மையே வடிவாகத்
தூங்குகிறார் எம் பாலன்!




மழைக்காலத் தூறல்கள்
சாறல்களாய் மாறியது.
மலைகளும் குன்றுகளும்
தாழ்பணிந்து வணங்கின!
துள்ளித்திரியும் ஐந்தறிவும்
ஆனந்தம் கொண்டே ஆடியது.
பறவைகளின் ரீங்காரம்
பண்ணிசையாய் எழுந்தது.

புற்களின் பனித்துளிகள்
புஷ்பராகம் இசைத்தன!
ஆறுகள் அலைமோதி ஆரவாரமிட்டது
ஆதவனுக்கு அறைகூவல் விட்டபடி
ஒளியின் மைந்தனாய் பிறந்தார் இயேசு.



புல்லினமே புள்ளினமே
துள்ளி ஓடும் விலங்கினமே
தித்திக்கும் தேனைப்போல
தெவிட்டாத தென்றல்போல
தேடி வந்த இறைவனைப் பாராயோ?
பாலாறுபோல அருளாறு பொழிகிறது
பரமனின் அருள் மழையில்
நனைந்திட வாரீரோ!

*நெல்சன் சோபா,*
*சிறுத்தோப்பு, பேசாலை.*



## சிறுகதை

### இறைவார்த்தை செயற்படத் தொடங்குகிறது

ப. ஜே. ரொ. திலீப்குமார்
எமில்நகர், மன்னார்.



டேவிட்டும் போல்ராஜும் ஒரே தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள். இருவரும் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு படிப்பார்கள். டேவிட் அல்லது போல்தான் தவணை இறுதியில் முதலிடம் பெற்றிருப்பார்கள் என்று வகுப்பே கூறும் அளவிற்கு நன்றாகப் படிப்பார்கள்.

பாடசாலையில் நடைபெறும் போட்டிகள் அனைத்திலும் இருவரும் தவறாது கலந்துகொள்வர். ஆனால் டேவிட் முதல் மூன்று இடங்களுக்குள் வந்துவிடுவான். போல் "டேவிட்டை ஒருமுறைகூட என்னால் ஏன்தான் முந்த முடியவில்லையோ" என போட்டி முடிவு அறிவிக்கப்படும்போது தன்னையே நொந்து கொள்வான்.

டேவிட் பெறும் அழகிய கேடயங்கள், பதக்கங்களைக் காணும்போதெல்லாம் டேவிட்மீது போலுக்கு ஆத்திரமும், வெறுப்பும் அதிகமாகும். இதன் காரணமாகவோ என்னவோ டேவிட்டுடன் பழகுவதை அவன் தவிர்த்துக்கொண்டான். வகுப்பில் தவிர்க்கமுடியாத சந்தர்ப்பத்தில் மட்டும் அவனுடன் கதைப்பான். மற்றும்படி டேவிட்டை அணுகுவதே இல்லை.

டேவிட் ஏனைய மாணவர்களுடன் சகஜமாகப் பழகுவான். மற்றய மாணவர்களின் திறமைகளைப் பாராட்டும்போது, "நன்றாக நடிக்கிறான் வெள்ளையன்" என்று டேவிட்டை போல் திட்டித்தீர்த்து விடுவான். ஒருவன் மற்றவன்மேல் குறைகாண வேண்டும் என்றால் பலநூறு விடயங்களில் குறை கண்டறியலாம். இதற்கு போல் விதிவிலக்கல்ல. மனதுக்குள் வெறுப்பை வளர்த்து வந்தான்.

ஒருமுறை மாவட்ட மட்ட ஓவியப் போட்டி நடைபெற்றது. டேவிட் முதலிடம் பெற்றதோடு வெற்றிச் சின்னத்தினையும் வென்றான். அச் சின்னத்தைப் பார்த்து அனைவரும் அவனை வாழ்த்தினர். போல் வழக்கம்போல் தலைமறைவாகிவிட்டான்.

"டேய் போல் நீ சரியான அதிஸ்ரம் கெட்டவன். அவனுக்கும் உனக்கும் ஏணி வைத்தால்கூட எட்டாது. அவன் எல்லாத்திலேயும் கெட்டிக்காரன், நீயோ வெறும் புத்தகப் பூச்சி, ஒரு கேடயமாவது எடுத்திருக்கிறாயா?" என்று பலவாறு தன்னைத் திட்டித்தீர்த்துக்கொண்டு முகவாட்டத்துடன் வீடு சென்றான். அவனால் ஒழுங்காகச் சாப்பிட முடியவில்லை, சகோதரரோடு விளையாட முடியவில்லை, சொல்லப்போனால் அவன் அவனாகவே இல்லை.

அவனுடைய தாய் இவன் வாட்டத்தைக் கண்டு பலவாறு கேள்விமேல் கேள்வி கேட்டும் அவனிடமிருந்து ஒழுங்கான பதில் வராமையால் "இவனோட நின்டாச் சரிவ்ராது, இரவைக்கு சாப்பிட ஏதாவது செய்யவேணும்" என்றபடி குசினியை நோக்கி நடந்தாள் மேரி.

அவன் தாய் மேரி தினமும் பைபிள் வாசிப்பாள். "மனசு பாரமாயிருந்தா இந்த இறைவார்த்தையை வாசித்ததும் மனசுக்கு ஒரு ஆறுதலாக இருக்கும்" என்று அவனுடைய தாய் சொல்வது அவனுக்கு திடீரென ஞாபகத்திற்கு வரவே, பைபிளை எடுத்து தன் நெஞ்சோடு அணைத்தான். கண்களை மூடிக்கொண்டு திறந்தான். அவனுடைய கை படர்ந்து நின்ற பக்கத்தை நோக்கினான்.

அச்செய்தி அவ்ன் கண்களுடாகப் பாய்ந்து மூளையில் ஆணி அறைந்தாற்போல் இருந்தது. தாலந்து உவமையின் இறையியல் உண்மையை அவன் அறிந்தானோ என்னவோ, அவ்வார்த்தைகள் அவனுக்காகவே எழுதப்பட்டதாக உணர்ந்தான். தான் ஐந்து தாலந்து பெற்றவனா, இரண்டு தாலந்து பெற்றவனா ஒரு தாலந்து பெற்றவனா என்று சிந்தித்தான்.

"நான் ஒரு தாலந்து பெற்றவனல்ல, ஒரு தாலந்தைப் பெற்றவன்போல் எனக்கு இறைவன் தந்த திறமைகளை வளர்க்காமல் இருக்கமாட்டேன்" என திடசங்கற்பம் பூண்டான். "என்னுடைய திறமைகளை, ஐந்து, இரண்டு தாலந்து பெற்றவர்களைப்போல் வளர்த்துக் - கொள்வேன்." என உறுதியெடுத்தான். என்னுடைய மனத்துயரை அறிந்து இறைவன் இந்த இறைவார்த்தை மூலம் என்னோடு பேசினார் என நம்பினான். உளப்பூரிப்படைந்தான். விவிலியம் வாசிப்பதைத் தன் நாளாந்த வாழ்வாக்கினான்.

அடுத்து நடைபெறவிருந்த பேச்சுப் போட்டிக்காகத் தன்னை நன்றாக ஆயத்தப்படுத்தியதோடு இறைவனின் துணையுடன் முதலிடம் பெறுவேன் என்ற மனத்துணிவுடன் பங்குபற்றினான். இதில் நடுவர்கள் வியக்கும் வண்ணம் பேசி முதலிடம் பெற்றான். டேவிட் இரண்டாம் இடம் பெற்றான். போலிற்கு பதக்கம் கிடைத்தது. அவனை அனைவரும் பாராட்டினர். தனக்கு முதலிடம் பெற்றுத்தந்த இறைவனுக்கு அன்று முழுவதும் புகழ்ந்து நன்றி கூறினான். இதற்கிடையில் போல் பெற்ற பதக்கத்தையும் சான்றிதழையும் பார்த்துவிட்டு அவனை வெகுவாகப் பாராட்டினான் டேவிட். போலுடைய முயற்சிக்கு இறைவன் நற்பயன் கொடுத்தார் என இறைவனை அவன் வாழ்த்தினான்.

டேவிட்டின் நல்ல மனதை அப்போதுதான் போல் அனுபவ வாயிலாகப் புரிந்துகொண்டான். இப்படிப்பட்ட நல்ல பையனுடன், மனக்கசப்புடன் இருந்த தன்னை நினைக்க அவனுக்கு வெட்கமாக இருந்தது. டேவிட்டை ஆரத்தழுவி மன்னிப்புக் கேட்க உள்ளம் துடித்தது. போல் எதிர்பார்க்காதவாறு டேவிட் அவனைத் தழுவிக்கொண்டான். போலினுடைய கண்கள் கண்ணீரால் குளமாக, அன்றோடு அவனுடைய வெறுப்புணர்வும் வெளியேறியது. இருவரும் இணைபிரியாத நண்பர்களாயினர். போலின் வாழ்க்கையில் மெல்ல மெல்ல இறைவார்த்தை செயற்படத் தொடங்கியது.

## துளிப்பா

**நட்பு**
நானிலம் செழித்து நல்லவராய் வாழ
நண்பர்கள் தரும் அழைப்பு.

**அன்பு**
அலைமோதும் மனதிற்கு அச்சாணியாய்
நிலைத்திருக்கும் அசையாத ஆலமரம்.



**சிரிப்பு**
காலமெல்லாம் இன்பமுடன் வாழ
இறைவன் அளித்த கொடை.

**தவிப்பு**
தாங்க முடியாத வேளையிலும்
தன்னாலியன்ற பணிசெய்ய தாகத்தோடு இருப்பது

**அழைப்பு**
ஆண்டவரின் அருள்நெறியை அனைவருக்கும்
எடுத்துக்கூற அவர் கொடுக்கும் குரல்.

**உறவும் பிரிவும்**
மொட்டவிழ்ந்து மணம் பரப்புவது உறவெனில்
தொட்டதும் முள்ளாய்க் குத்துவது பிரிவு.



*செ. ஜெசி,*
*இல. C. 8 மடுகோவில், மடு.*



**கண்ணீர்**
சோகச் சுமைகளைச் சொல்ல
யாருமின்றித் தவிக்கும்
பெண்ணுக்கு இலவச ஓடம்!

**பெற்றோர்**
உயிர் கொடுத்து உருக்கொடுத்து
உலகில் உயர வைக்கும் உத்தமர்கள்.

**கவிதை**
உள்ளத்து உணர்வுகளை உலகிற்குச்
சொல்லிவிட பேனாத் தாயால் பிரசவிக்கப்பட்ட
பேசும் குழந்தை.

**புன்னகை**
நாளை உதிர்வது தெரியாமல்
இன்று மலர்கிற மொட்டுக்கள்.

*அ. சிமில்டா (றோகினி)*
*பொன்தீவுகண்டல், அளவக்கை.*



**குடும்பம்**
அன்பே உயிர்நாடியாய் அரிய மனித உறவுகளால்
உருவாக்கப்பெற்ற கட்டமைப்பு



**கல்வி**
மூளைக்குத் தகவல் தருவதல்ல
இதயத்தைச் செம்மைப்படுத்துவது.

**பூக்கள்**
இறைவனால் இந்த உலகம்
எவ்வளவு அன்பு செய்யப்படுகிறது
என்பதற்கான அடையாளங்கள்!

*- ஜெயா பாலாஜி,*
*முருங்கன்*

**உள்ளம்**
நினைவுகள் வாழும் ஆலயம்

**விடிவு**
தேடலின் முடிவு

**மரணம்**
உறவுகளை உலுக்கும் ஒப்பற்ற பிரிவு
'சிறகுடைந்த இளஞ்சிட்டு',
தோட்டவெளி.

### வாழ்க்கையில் வெற்றி பெற சில வழிகள்

- வரட்டு கௌரவம் வாழ்க்கைக்கு உதவாதது முரட்டுப் பிடிவாதம் முன்னேற உதவாதது.



- இலட்சியம் இல்லாத மனித வாழ்வு ஆழ்கடலில் துடுப்பில்லாத படகு போலாகும்.
- வாழ்க்கையில் வெற்றிபெற இலக்கை நோக்கி தொடர்ச்சியாகச் செயற்பட வேண்டும்.
- ஆர்வம் என்பது எப்போதோ தோன்றுவதாக இல்லாமல் தொடர்ச்சியாக இருத்தல் வேண்டும்.
- அன்பு கொள்ளாதவன் கடவுளை அறியாதவன். ஏனென்றால் அன்பே கடவுள்.

ம. காமலின் சௌமியா குருஸ்
முத்தரிப்புத்துறை,

## புனித பவுல் ஆண்டு மற்றும் நற்செய்தி அறிவிப்பு ஆண்டு சிறப்புக் கட்டுரை

# நற்செய்தியின் தூதன் நான்

- அருள்பணியாளர் அ. பீட்டர் அபீர் -

பயணங்கள் பலவகை! தொழில் பயணம், வியாபாரப் பயணம், உல்லாசப் பயணம் மனிதரையும் நாடுகளையும் பார்வையிடும் பயணம், ஆராய்ச்சிப் பயணம்! இப்படியாக மனிதர் தம் வாழ்வில் மேற்கொள்ளும் பயணங்கள் பலதரப்பட்டன!

"கடவுள் என்னை அழைத்தவுடன் நான் உடனே அரேபியா சென்றேன்" என்று வாக்குமூலம் தந்தார் புனித பவுல் (கலா1:17) அது ஒரு நற்செய்திப் பயணம்.

நற்செய்தியில் பணி செய்வதே அவரது நோக்கம். அதுவும் கடவுளுக்கு அவர் செலுத்திய ஆன்மீக வழிபாடு என்பதும் நமக்குப் புரிகிறது (உரோ 15:16).

இருப்பினும் தனது அழைத்தலில் உள்ள இறை நோக்கத்தை நன்கு புரிந்துகொண்ட பவுல் அந்த நோக்கத்தினால் உந்தப்பட்டுக் கூறுகிறார்: "நற்செய்தியை அறிவிப்பவனாகவும் திருத்தூதனாகவும், போதகனாகவும் நான் ஏற்படுத்தப்பட்டுள்ளேன்" (2கொரி 1:11) அதற்கு ஏற்ப அவர் தனது வாழ்வில் நற்செய்தி அறிவிப்பதில் முழு மூச்சாக செயற்பட்டார்.

## மூன்றுவித நற்செய்திப் பணி

### I. வாழ்வே ஒரு பாடநூல்

நற்செய்தி அறிவித்தலின் முதல் நிலையாக திருத்தூதர்களின் வாழ்க்கை முறையை முதலில் எடுத்தியம்புகிறார் லூக்கா. உதாரணமாக பேதுருவின் முதல் பேருரை, பாடுகள் சமயத்தில் அச்சம் நிறைந்தவராய் மூன்று முறை இயேசுவை மறுதலித்த பேதுரு (மாற் 14:66-72), தூய ஆவியைப் பெற்றுக்கொண்ட பின்பு (திப 2:1-4) "நீங்கள் சட்டம் அறியாதார் மூலம் அவரை சிலுவையில் அறைந்து கொன்றீர்கள். ஆனால் அவரைக் கடவுள் மரண வேதனையினின்று விடுவித்து உயிர்த்தெழச் செய்தார். இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள்" என்று எருசலேம் வாழ் யூதர்களுக்கு மிகவும் துணிவுடன் எடுத்துரைத்தார். (திப 2:23-24;திப 3:15).

இதே துணிவை நாம் வேறு பல இடங்களிலும் காண்கிறோம் (திப 3:6; 5: 41). திருச்சபையின் முதல் மறைசாட்சிகளாகக் கருதப்படும் ஸ்தேவான் (திப 7:51) யாக்கோபு (திப 12:1) போன்றோரும் தங்களது உயிரையே கையளித்து இயேசுவுக்கு சான்று பகர்ந்து, நற்செய்தி விரைவில் பரவக் காரணமாயி-ருந்தனர்.

இவர்களைப் போன்றே புனித பவுல் தனது வாழ்க்கை என்னும் பாடத்தைக் கற்றுத் தந்து கிறிஸ்துவின் நற்செய்தியைப் பறைசாற்றினார் என்பதை மறுக்கவியலாது. "இன்றும் என்றும், வாழ்விலும் சாவிலும் முழுத் துணிவுடன் கிறிஸ்துவை என் உடலில் பெருமைப் படுத்துவேன்" என்றும், "நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே; நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே" என்றும் அவர் பிலிப்பியருக்கு எழுத முடிந்ததென்றால் (பிலி.1:20-21) அந்தக் கிறிஸ்துவை அவர் மற்றவர்க்கு எடுத்துரைக்கும் முன் தான் அக் கிறிஸ்துவோடு எப்படி ஐக்கியமாயிருக்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறார்.

கிறிஸ்துவின் உயிர்ப்பைப் பற்றிய போதனைதான் அன்றைய திருச்சபையின் முதன்மையான போதனையாக அமைந்தது. அதைப்பற்றி எழுதும்போது, "நான் பெற்றுக்கொண்டதும் முதன்மையானது எனக் கருதி உங்களிடம் ஒப்படைத்ததும் இதுவே" என்று கூறி அந்த உயிர்ப்பின் செய்தியில் நம்பிக்கை கொண்ட பிறகே மற்றவர்க்கும் போதிக்கச் சென்றதை பவுல் வெளிப்படுத்துகிறார் (1கொரி 15:3).

பவுலின் மடல்களின் ஒவ்வொரு வார்த்தையும் அவர் எப்படி தனது வாழ்க்கையினால் கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்தார் என்று தெளிவாக எடுத்துரைக்கும். "கிறிஸ்து இயேசு என்னை ஆட்கொண்டதற்கான நோக்கம் நிறைவேறுவதற்காகத் தொடர்ந்து ஓடுகிறேன்" என்று ஆரம்பத்தில் கூறியவர் (பிலி 3:120), "என் ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்." என்று அவர் தனது வாழ்வின் இறுதியில் கூறினார் (2 திமொ 4:7).

இந்த வார்த்தைக்ளில் அவரது சொந்த ஆன்மீக வளர்ச்சியும், அந்த அவரது ஆன்மீக வாழ்வு மக்களுக்கு எப்படி முதல் பாடமாக அமைந்தது என்பதும் தெளிவாகிறது.

நற்செய்திப் பணியாளராக ஒருவர் அழைக்கப்படும்போது அந்த நற்செய்திக்கு உரியவராக அவர் மாற வேண்டும். அப்போதுதான் அவரது பணிகள் சிறக்கும் என்பதற்கும் புனித பவுல் மிகச் சிறந்த உதாரணம். •

### II. பயணங்கள் பல

கடவுளின் வார்த்தையைப் பரவச் செய்ய, அதனால் கடவுளின் திருச்சபையைக் கட்டிக்காக்க அன்றைய இளந்திருச்சபையில் பலருடைய பணிகள் பற்றிப் பேசப்பட்டாலும் "பிற இனத்தாரின் திருத்தூதர்" என்று அழைக்கப்பட்டதற்கேற்ப அப்பணியை திட்டமிட்டுச் செயலாற்றிய புனித பவுலின் பயணங்கள் பற்றி மட்டுமே புதிய ஏற்பாடு மிகவும் தெளிவுறத் தருகிறது.

தான் மேற்கொண்ட நற்செய்திப் பயணங்கள் பற்றி பவுல் அதிகம் குறிப்பிடவில்லை. எனினும், "நான் உங்களிடையே வரும்போது என் அதிகாரத்தைப் பயன்படுத்தி உங்களிடம் கண்டிப்பாய் நடந்துகொள்ளவில்லை" (2 கொரி 13:10) என்ற வார்த்தையிலும், "திருமுழுக்குக் கொடுப்பதற்கு அல்ல; நற்செய்தியை அறிவிக்கவே கிறிஸ்து என்னை அனுப்பினார்" என்று அவர் கூறுவதிலிருந்தும் (1 கொரி 1:17) புனித பவுல் கொரிந்து நகருக்குப் பயணம் செய்து போதித்தது நமக்குத் தெளிவாகப் புரிகிறது.

"மேலும் நான் உங்களுக்கு அறிவித்த நற்செய்தி மனிதரிடமிருந்து வந்ததல்ல" என்று கலாத்தியருக்கு எழுதுவதிலிருந்து அம் - மக்களிடையே பவுல் பணி ஆற்றியதும் தெரிய வருகிறது (கலா 1:11).

இவை யாவற்றையும்விட, தனது அயரா நற் செய்திப் பணி பற்றி கொரிந்தியருக்கு எழுதும்போது, "பயணங்கள் பல செய்தேன்" என்று கூறி, (2 கொரி 11: 26) அவற்றில் தான் அடைந்த இடர்பாடுகள் யாவற்றையும் எடுத்தியம்பும் பவுலின் வார்த்தைகளைப் படிக்கும்போது கிறிஸ்துவின்மேல் அவருக்கிருந்த ஈடுபாடும், அதனால் அவர் ஆற்றிய நற்செய்திப் பணிகளும் நம் கண்முன்னே நிற்கின்றன. "தான் முன்பு ஒழிக்க முயன்ற விசுவாசத்தை இப்பொழுது நற்செய்தியாக அறிவிக்கின்றேன்" என்று பவுல் பற்றி எருசலேம் வாழ் யூதக் கிறிஸ்தவர்கள் பேசிக்கொள்ளும் வகையில் (கலா 1:23) பணிவாழ்வில் மாபெரும் திருப்புமுனையைக் கண்ட பவுல், அப்பணியை ஆற்ற சிரியா, சிலிசியா (சிறிய ஆசியப் பகுதி) பகுதிகளுக்குச் சென்றார் (கலா 1:21).

பவுலின் நற்செய்திப் பயணங்களை புனித லூக்கா முறையாக எழுதி, அவர் மூன்று நற்செய்திப் பயணங்களை கிரேக்க நாடுகளுக்கும், நான்காவது பயணமாக உரோமைக்கும் பயணம் சென்றதை பல விவரங்களுடன் திருத்தூதர் பணிகள் என்ற தனது நூலில் தருகிறார். இத்துடன், உரோமையிலிருந்து ஸ்பெயினுக்கும் தான் பயணம் செய்ய விரும்பியதை பவுல் உரோமையருக்குக் குறிப்பிடுகிறார். (உரோ 15: 28).

### III. எழுத்தில் இறைவாக்குப் பணி

இயேசுக் கிறிஸ்துவின் நற்செய்தியை எடுத்துரைக்கத் தனது வாழ்வையே நற்செய்திப் பாடமாக்கிய பவுல், பயணங்கள் பல செய்து, தழும்புகள் பல ஏற்று (கலா 6:17) அதனால் ஆயிரக்கணக்கான மக்களை கிறிஸ்துவின்பால் ஒன்று சேர்த்த பவுல், தனது எழுத்துக்களால் கோடிக் கணக்கான மக்களை இயேசுவின் சீடர்களாக கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக உருவாக்கி வருகிறார். மக்களின் தேவைகளை உணர்ந்து, தலத் திருச்சபையில் நிலவிய குழப்பங்களைக் களையவும் அவர்களை நேரிய கிறிஸ்தவர்களாக உருவாக்கவும், கி.பி. 52 முதல் 65 வரையில் 13 மடல்களை எழுதினார். அவரது திருமுகங்கள் வெறும் அறிவுரைகள் மட்டுமல்ல, கிறிஸ்துவின் மறையுண்மைகளை விளக்கும் கண்ணாடிகள்.

"நான் மிகுந்த வேதனையோடும், மனக் கவலையோடும், கலங்கிய கண்ணோடும் அதை உங்களுக்கு எழுதினேன்"என்று கொரிந்தியருக்கு பவுல் எழுதிய வரிகளைக் காணும்போது (2 கொரி 2:4) திருச்சபைமேல் அவருக்கிருந்த ஆழ்ந்த ஈடுபாடு வெளிப்படுகிறது. மடல்கள் மூலமாக அவர் எப்படி நற்செய்திப் பணி ஆற்றினார் என்பதும் புரிகிறது. அவரது மடல்களை நாம் மேலெழுந்தவாரியாகப் படித்தாலே நமக்கு ஓர் எண்ணம் புரியும்.

அவர் அம்மக்களுக்கு ஒரு நற்செய்தி - யாளராகவும், பாசமுள்ள தந்தையாகவும், கண்டிக்கும் ஆசானாகவும், புரிந்துகொள்ளும் சகோதரனாகவும் திகழ்ந்தார் என்பது மட்டுமல்ல. எல்லாவற்றிற்கும் மேலாக, ஓர் ஆன்மீகவாதியாகத் திகழ்ந்து, மனிதரை இயேசுவிடம் அழைத்துச் செல்லும் பாலமாகத் திகழ்ந்தார் என்பதில் ஐயமில்லை.

திருமுழுக்கினால் நாம் ஒவ்வொருவரும் பெற்றுள்ள கடமை, கிறிஸ்து என்னும் நற்செய்தியை அடுத்தவருக்கு அறிவிப்பது. இம்மேலான கடமையை நாம் பவுலின் பாதையில் செய்திட முற்படுவோம்.

## புதிய குருக்களின் வாழ்வு

### ஓர் பார்வை

### அருட்சகோ. மில்ரன் தேவராஜா

அருட்சகோதரர் மில்ரன் தேவராஜா (நியூட்டன்) நானாட்டான் பங்கு கட்டைக்காடு கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி. மத்தேசுப்பிள்ளை சூசைரெட்ணம் மற்றும் செபஸ்ரியாம்பிள்ளை போசியம்மா தம்பதிகளின் புதல்வனாக 13.07.1978ல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மன்/சூரியகட்டைக்காடு றோ. க. த.பாடசாலையிலும் முருங்கன் மகா வித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவுசெய்தார்.

அருட்பணியாளர் பெப்பி சோசை அடிகளாரினால் அழைத்தல் ஊக்கம் பெற்று 1995ம் ஆண்டு மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தில் தனது குருத்துவ உருவாக்கல் பயணத்தை ஆரம்பித்தார்

பின்னர் களுத்துறையில் உள்ள ஆரம்ப மெய்யியல் பயிற்சியகத்தில் பயிற்சி பெற்ற இவர், கண்டி தேசிய மெய்யியல் கல்லூரியில் மெய்யியல் கல்வியைக் கற்று மெய்யியல் - மாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். யாழ் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியைக் கற்ற இவர் 2 வருடங்களின் பின்னர் நாட்டின் போர்ச்சூழலால் ஏற்பட்ட போக்குவரத்து நெருக்கடி காரணமாக யாழ்ப்பாணத்தில் தனது இறையியல் கல்வியை தொடர முடியாத சூழ்நிலையில் தனது இறுதி 2 வருட இறையியல் கல்வியை கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் கற்று தனது இறையியல்மாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

பேசாலை, தாழ்வுபாடு ஆகிய இடங்களில் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப்பலியை 15.02.2009 (ஞாயிற்றுக்கிழமை) அன்று கட்டைக்காடு புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

### அருட்சகோ. அருளப்பு றஜனிகாந்

அருட்சகோதரர் றஜனிகாந் விடத்தல்தீவு பங்கு விடத்தல்தீவு கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி. கிறித்தோ அருளப்பு மற்றும் அருளப்பு மேரிராணி தம்பதிகளின் புதல்வனாக 16.09.1978ல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மன்/விடத்தல்தீவு றோ.க. த.க.பாடசாலையிலும் உயர்தரக் கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவுசெய்தார்.

அருட்பணியாளர் எம். ஜெயபாலன் அடிகளாரினால் அழைத்தல் ஊக்கம் பெற்று 1998ம் ஆண்டு மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தில் தனது குருத்துவ உருவாக்கல் பயணத்தை ஆரம்பித்தார்

பின்னர் களுத்துறையில் உள்ள ஆரம்ப மெய்யியல் பயிற்சியகத்தில் பயிற்சி பெற்ற இவர், கண்டி தேசிய மெய்யியல் கல்லூரியில் மெய்யியல் கல்வியைக் கற்று மெய்யியல் - மாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். யாழ் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியைக் கற்ற இவர் 2 வருடங்களின் பின்னர் நாட்டின் போர்ச்சூழலால் ஏற்பட்ட போக்குவரத்து நெருக்கடி காரணமாக யாழ்ப்பாணத்தில் தனது இறையியல் கல்வியை தொடர முடியாத சூழ்நிலையில் தனது இறுதி 2 வருட இறையியல் கல்வியை கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் கற்று தனது இறையியல்மாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

மன்னார், செட்டிகுளம், பேசாலை ஆகிய இடங்களில் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப்பலியை 16.02.2009 (திங்கள் கிழமை) அன்று தோட்டவெளி, தூய யோசவ்வாஸ் நகர் ஆலயத்தில் ஒப்புக் கொடுப்பார்.

### அருட்சகோ. கிறிஸ்ரி றூபன்

அருட்சகோதரர் கிறிஸ்ரி றூபன் பெனாண்டோ முத்தரிப்புத்துறைப் பங்கு முத்தரிப்புத்துறைக் கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி. செபஸ்ரியான் அருளப்பு பெனாண்டோ மற்றும் சூசையப்பு அந்தோனியாள் லெம்பேட் தம்பதிகளின் புதல்வனாக 07.12.1979ல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை அரிப்புத்துறை மன்/மரியாள் பாடசாலையிலும் உயர்தரக் கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவுசெய்தார்.

அருட்பணியாளர் எஸ். ஸ்ரீபன்றாஜ் அடிகளாரினால் அழைத்தல் ஊக்கம் பெற்று 1996ம் ஆண்டு மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தில் தனது குருத்துவ உருவாக்கல் பயணததை ஆரம்பித்தார்.

← தொடர்ச்சி

### அருட்பணியாளர் ஒல்பன் ....

4ம் பக்கத் தொடர்ச்சி

1974ம் ஆண்டு முருங்கன் - உயிலங்குளப் பங்கின் உதவிப்பங்குத்தந்தையாக மன்னாரில் தனது பணிவாழ்வைத் தொடங்கிய இவர், இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி (1975 -1976), அரிப்புத்துறை (1976 - 1980), வவுனியா (1981-1984), தலைமன்னார் - பேசாலை (1984 -1987), பள்ளிமுனை (1887-1996), தாழ்வுபாடு (1996-1997), வாழ்வுதயம் (1985-1996) ஆகிய பணித்தளங்களில் சிறப்பாகப் பணியாற்றினார்.

அதன் பின்னர் அமலமரித் தியாகிகள் சபையின் நிதியாளராக நியமனம் பெற்று மறைமாவட்டத்திலிருந்து சென்றார். பின்னர் திருமலை - மட்டுநகர் மறைமாவட்டத்தின் பாலையூற்று என்ற லூர்து அன்னைத் திருத்தலத்தில் பங்குத்தந்தையாக அரும்பணியாற்றினார் (2002 -2007). தற்போது மீண்டும் மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்ற வருகை தந்துள்ளார்.

### விடத்தல்தீவின் முன்னாள் ....

3ம் பக்கத் தொடர்ச்சி

பீற்றர் அடிகளார் 1932 வைகாசித் திங்கள் 28ம் நாள் நீக்கிலாப்பிள்ளை - எலிசபெத் என்பவர்களுக்கு நான்காவது மகனாகச் சில்லாலையில் பிறந்தார். தமது ஆரம்பக் கல்வியை சில்லாலையிலும் உயர்தரக் கல்வியை இளவாலையிலும் கற்று, தொடர்ந்து அரசாங்க லிகிதராகக் கடமையாற்றினார்.

ஆரம்பத்தில் நோயாளியாக இருந்த இவர், தனது நோயிலிருந்து விடுபட்டால் நல்லதொரு குருவாகி கிறிஸ்துவின் பணியை ஆற்றுவேன் என்று உறுதிபூண்டார். தனது நோயினின்று முற்றிலும் குணம் அடைந்தபின் மாத்தளையில் உள்ள புனித அசிசியார் குருத்துவக் கல்லூரியில் தன்னை இணைத்துக்கொண்டார். 17.02.1981ல் தனது 49வது வயதில் கோட்டை ஜயவர்த்தனபுரத்திலுள்ள தலங்கம் என்ற இடத்திலுள்ள புனித மரியாள் ஆலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவருடைய ஆன்மா இறைவனில் அமைதி காண்பதாக!

### அருட்சகோ. கிறிஸ்ரி .....

(தொடர்ச்சி)

பின்னர் களுத்துறையில் உள்ள ஆரம்ப மெய்யியல் பயிற்சியகத்தில் பயிற்சி பெற்ற இவர், கண்டி தேசிய மெய்யியல் கல்லூரியில் மெய்யியல் கல்வியைக் கற்று மெய்யியல் - மாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். யாழ் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியைக் கற்ற இவர் 2 வருடங்களின் பின்னர் நாட்டின் போர்ச்சூழலால் ஏற்பட்ட போக்குவரத்து நெருக்கடி காரணமாக யாழ்ப்பாணத்தில் தனது இறையியல் கல்வியை தொடர முடியாத சூழ்நிலையில் தனது இறுதி 2 வருட இறையியல் கல்வியை கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் கற்று தனது இறையியல்மாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். தாழ்வுபாடு, மன்னார் ஆகிய இடங்களில் தனது திருத் - தொண்டர் பணியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப்பலியை 14.02.2009 (சனிக்கிழமை) அன்று கொவ்வங்குளம் தூய தொம்மையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

# மாணவர் பக்கம்







## 2008ம் ஆண்டு நடைபெற்ற உயர்தர பரீட்சை வினாவிடை

## கிறிஸ்தவம்

2008ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையின் கிறிஸ்தவ பாட முதலாம் வினாத்தாளின் 2வது பகுதி வினாக்களும் விடைகளும் இங்கு தரப்படுகின்றன.

இங்கு வழங்கப்படும் விடைகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவைப் பிரிவினரால் தயாரிக்கப்பட்டவையாகும். இது விடைத்தாள் பரீட்சிகர்களின் பயன்பாட்டிற்காகத் தயாரிக்கப்பட்டது. இதனை வகுப்பறைக் கற்பித்தலின் துணைச் சாதனமாகக் கொள்ள முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பகுதி -11

**வினா 2.** *தொடக்க நூலின் எழுத்தாளர் அதன் முதல் பதினொரு அதிகாரங்களிலும் முன்வைத்துள்ள கதைகள் நான்கின் மூலமும் இன்றைய கிறிஸ்தவனுக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிகாட்டுதலை உறுதிப்படுத்த, அவ் ஒவ்வொரு கதையிலிருந்தும் பெற்றுக்கொள்ளக் - கூடிய செய்திகள் ஐந்து வீதம் எழுதுக.*

**விடை 2. I.** ஆதாம் ஏவாளின் கதையிலிருந்து பெறறுக்கொள்ளக்கூடிய செய்திகள் :

அ) தீய சக்திகளுடன் தொடர்பு வைத்திருப்பின் அழிவு உண்டாகும்.

ஆ) மனிதன் தனது வரையறைகளை அறிந்து செயற்பட வேண்டும்.

இ) இலௌகீக செல்வங்களுக்காக சத்திய விசுவாசத்தை புறக்கணித்தல் கூடாது.

உ) வேலை செய்தல் மனிதனின் கடமை.

*(இத்தகைய கருத்துக்களிருப்பின் 5 புள்ளிகள் வழங்குக)*

**II.** காயீனும் ஆபேலும் தொடர்பான கதையிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய செய்திகள் :

அ) சுத்த கருத்துடனே செய்யும் செயல்கள் மட்டுமே உத்தமமானவை ஆகும்.

ஆ) தனக்குத் தானே நேர்மையாக இருக்க வேண்டும்.

இ) சுயநலம் உடையோராக இருத்தல்கூடாது.

ஈ.) தனது சகோதரர்கள்மீது தனக்குக் கடமை உண்டு.

உ.) நல்ல மனச்சான்று உடையோராக வாழ வேண்டும்.

*(இத்தகைய கருத்துக்களிருப்பின் 5 புள்ளிகள் வழங்குக)*

**III.** நோவாவும் பெருவெள்ளமும் தொடர்பான கதையிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய செய்திகள் :

அ). கலாச்சார வளர்ச்சி என்பது பாவத்தின் வளர்ச்சியல்ல.

ஆ). தீயசக்திகள் நீண்டகாலம் நிலைக்கக்கூடியதல்ல.

இ). பொது நன்மைக்காகத் தனக்குக் கொடுக்கப்படும் கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

ஈ). இறைத்திட்டத்தை மாற்ற மனிதனால் முடியாது.

உ). இயற்கை அனர்த்தங்கள் ஊடாகவும் இறைவல்லமை வெளிப்படுத்தப்படுகிறது.

ஊ) இறை அன்பு நித்தியத்திற்கும் நிலைத்திருக்கும்.

*(இத்தகைய கருத்துக்களிருப்பின் 5 புள்ளிகள் வழங்குக)*

**IV.** பாபேல் கோபுரம் தொடர்பான கதையிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய செய்திகள் :

அ) மனிதன் தன் ஆற்றல்கள்ால் அனைத்தும் முடியுமென நினைப்பது தவறு.

ஆ) இறைத் திட்டத்திற்கு மேலாக மனிதனால் செயற்பட முடியாது.

இ) நல்ல குறிக்கோளுடன் மனிதன் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

ஈ) மொழி வேறுபாடுகளை மனித ஒற்றுமைக்குத் தடையாக ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது.

உ) இறைவனின் படைப்பாகிய மனிதன் இறைவனோடு ஒன்றுபட்டு இருத்தல் வேண்டும்.

*(இத்தகைய கருத்துக்களிருப்பின் புள்ளிகள் 5 வழங்குக)*

**வினா 3.** *அ. வாழ்வின் கடினமான அனுபவங்கள் மூலம் இஸ்ராயேல் மக்கள் இறைவனின் அன்பை அனுபவித்து அறிந்தனர் என்பதை விடுதலைப் பயணத்தின்படி 125 சொற்கள் அளவில் விவரிக்குக. உமது விடையில் உதாரணங்கள் ஐந்து உள்ளடக்கப்பட வேண்டும்.*

**விடை I.** எகிப்திய அடிமைத்தனத்தில் துன்பங்களை அனுபவிக்க விடாது, இஸ்ராயேல் மக்களின் கூக்குரலுக்குச் செவிமடுத்து அவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொள்ளல்.

II. செங்கடல் ஓரத்தில் எகிப்தியப் படைகளை அழித்து செங்கடலைக் கடக்க உதவுதல்.

III. பாலை நிலத்தில் பருக நீர் இல்லாதபோது பாறையிலிருந்த நீரூற்று புறப்படச் செய்தல்.

IV. உண்ண உணவு இல்லாதபோது மன்னாவையும், காடைகளையும் உணவாகப் பெறச் செய்தல்.

V. அமலேக்கியரோடு போரிட்டபோது அதில் வெற்றி பெறச் செய்தல். *(இத்தகைய உதாரணங்கள் முன்வைத்திருப்பின் 10*

**வினா ஆ.** *இறைவனின் திட்டம் உடனடியாக நிறை - வேறுவதில்லை என்பதை மோசேயின் வாழ்க்கையை உதாரணமாக வைத்து 20 வரிகள் அளவில் விளக்குக.*

விடை (ஆ) பார்வோனின் ஆணையிலிருந்து குழந்தை மோசே காப்பாற்றப்படுதல், பார்வோன் அரண்மனையில் வளருதல், அவ்விடம் அவர் பெற்ற கல்வி அறிவும் அனுபவங்களும், எகிப்தியன் ஒருவனை அடித்துக் கொன்ற பின்னர் மிதியான் நாட்டுக்குத் தப்பி ஓடல், அவ்விடம் வழியில் பெற்ற அனுபவங்கள், மந்தை மேய்ப்பவராக இடம்பெற்ற அவரது வாழ்க்கை, மோசே ஒரு மீட்பராக அழைப்புப் பெறுதல், அவரின் பணி, இவை யாவும் மோசேயின் வாழ்க்கையில் 12 வருட அளவு காலத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சிகளாகும். இறைவனின் திட்டங்கள் உடனடியாக சடுதியாக நிறைவேறுபவை அல்ல.

*(20 வரிகள் அளவில் விபரித்து இருப்பின் 10 புள்ளிகள் வழங்குக)*

**வினா 4.** *பின்வரும் ஒவ்வொரு இறைவாக்கு உரைகளும் தொடர்பான விளக்கத்தை 21ஆம் நூற்றாண்டின் மக்களுக்குப் பொருந்தக்கூடியதாக முன்வைக்குக. ஒவ்வொரு விளக்கமும் 50 சொற்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.*

**அ.** "என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்பேன். அதை அவர்களது இதயத்தில் எழுதிவைப்பேன்" (எரேமியா 31: 33)

**ஆ.** "நீங்கள் ஒழுங்கீனமாகக் கொண்டாடும் அமவாசை, ஓய்வுநாள் வழிபாட்டுக் கூட்டங்களை நான் சகிக்க மாட்டேன்" (எசாயா 1:13).

**இ.** "நான் உங்களுக்குள் உயிர்மூச்சு புகச் செய்வேன். நீங்கள் உயிர் பெறுவீர்கள்." (எசக்கியேல் 37: 5)

**ஈ.** "அவர் வேற்றினத்தாருக்கு அமைதியை அறிவிப்பார்." (செக்கரியா 9: 10)

**விடை**

**4.(அ)** இன்று மனிதன் சட்டத்தைத்தேடி வெளி உலகத்திற்குச் செல்ல வேண்டியதில்லை. அது தனக்குள்ளேயே உள்ளது. அதுதான் அவனது மனச்சான்று. ஒவ்வொருவரும் தமது மனச்சான்றை விழிப்பாக வைத்திருத்தல் வேண்டும். உயிருள்ளதாகப் பேண வேண்டும். தான் செய்யும் சட்ட விரோதமான செயல்களுக்குத் தானே வகை சொல்ல வேண்டும். "தந்தையர் புளித்திராட்சை சாப்பிடும்போது பற்கள் கூசுவது பிள்ளைகளுக்கு" என ஓர் பழமொழி கூறியபோதும் சாப்பிட்டவருக்கே என்பது விளங்கிக்கொள்ள வேண்டும்.

**4.(ஆ)** வெளிப்பகட்டு, அலங்காரங்களை வைத்து அனைத்தையும் மதிப்பிடும் யுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மனிதனின் பெறுமதியை மதிப்பிட முடிவது அவனது ஆன்மீகத்தன்மைக்கு இயையவேயாகும். ஆயினும் வெளிப்பகட்டுக்கு இன்று அனைத்தும் அடிமையாகியுள்ளது. ஆன்மீகத்தன்மை அழிந்து செல்கிறது. நமது ஆலய விழாக்கள் நடைபெறுவது வினோதக் காட்சிகள் போலாகும். ஞாயிறு திருப்பலியில் பங்குபற்ற வருவது ஆடை அலங்காரக் கண்காட்சி இடம்பெறும் நிகழ்ச்சிக்குப் போவதற்குப் போலாகும். சமயக் கூட்டங்கள் அதிகார ஆசை கொண்டவர்களின் போட்டி போடும் இடமாகும். சுத்த கருத்துடையோர் அருகி வருகின்றனர். இத்தகைய செயல்கள் இறைவன் முன்னிலையில் செல்லுபடியாகாத காசு போலாகும். பெறுமதி எதுவுமே இல்லாதது.

**4.(இ)** இன்று முழு மனித சமுதாயமும் மயானம் போன்று விளங்குகின்றது. மனிதனுக்குள் மானிட மதிப்பீடுகள் அழிந்துபோய் விட்டன. மிகுதியாக இருப்பது தீமையும், சுயநலமும், இழிவான தன்மையின் எலும்புகள் மட்டுமே. இத்தகைய சமுதாயம் புத்துயிர் பெறவேண்டும். மூச்சு மட்டுமன்றி அவர்களுக்கு வாழ்வும் தேவை. வாழ்வு என்பது ஆன்மீக நிலையாகும். கடவுள் மறுப்புக் கொள்கை விக்கிரக வழிபாடு என்பவற்றால் தவறான பாதையில் போய்க்கொண்டிருக்கும் மனிதன் புதுவாழ்வைப் பெற இறைவார்த்தையின் ஊடாகச் சக்தியைப் பெறவேண்டும்.

**4. (ஈ)** கிறிஸ்துநாதரை அறிமுகம் செய்திருப்பது சமாதான தேவனாக. இன்று கிறிஸ்துவின் செய்தியை உலகிற்கு வெளிப்படுத்த வேண்டியவர்கள் கிறிஸ்தவர்களாகும். சமாதான தூதர்களாக வேண்டியவர்கள் கிறிஸ்தவர்களாகும். இனங்களுக்கு அல்லது மக்கள் குழுக்களுக்கு இடையில் வேற்றுமையை உருவாக்கக்கூடிய தடைகளை அகற்றுவதும் கிறிஸ்தவர்களின் கடமையாகும். கிறிஸ்து இவைகளை அகற்றியது தனது வாழ்க்கைத் தியாகத்தின் மூலமாகும். இன்று நமது நாட்டுக் கிறிஸ்தவர்கள் சொல்லால் மட்டுமன்றி வாழ்க்கை முன்மாதிரிகையாலும் தாம் சமாதான தூதர்களென மற்றவர்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

*(ஒவ்வொரு பிரிவுக்கும் தரப்பட்டுள்ள கருத்துக்களுக்கேற்ற விடயம் முன்வைக்கப்பட்டிருப்பின் ஒரு பிரிவுக்கு 05 புள்ளிகள் வீதம் 5 X4 = 20)*

**வினா 5.** *திருமுழுக்கு யோவான் இயேசுவின் வழியை ஆயத்தம் செய்த முறையை முன்மாதிரிகையாகக் கொண்டு, இயேசுவின் இரண்டாம் வருகைக்கு நாட்டை ஆயத்தம் செய்யும் பொறுப்பினை நீர் எவ்வாறு நிறைவேற்றுவீர் என்பதனைப் பின்வரும் விடயங்களுக்கமைய 250 சொற்கள் அளவில் விவரிக்குக.*

அ. அரசியல் துறையில்

ஆ. வர்த்தகத் துறையில்

இ. கல்வித் துறையில்

ஈ. சமூக சேவைத் துறையில்

**விடை 5. (அ)** அரசியல் துறையில்

அரசியல்வாதிகள் நாட்டுக்குப் பணி புரிவோராக இருப்பதே அன்றிப் பணிவிடை பெறுவோராக இருத்தல் கூடாது. சுயபெருமைக்காகவும் தற்பெருமைக்காகவும் ஊர் அறியப் பறைச்சாற்றிச் செய்வது பணியல்ல என்பதை மனத்திலிருத்தல். நாடு அல்லது தனது தேசம் தனக்கு என்ன செய்கிறது என்று என எதிர்பார்க்காமல் நாட்டுக்காக தான் எதைச் செய்யலாம் என்பதில் கவனம் செலுத்துதல். அரசியலை தனக்கும் தன் சுற்றத்தார் உறவினர்களின் எதிர்காலம் வளம்பெறப் பயன்படுத்திக்கொள்ளாதிருத்தல். பொது மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தி அரசியல் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பது இறைவனின் திட்டப்படியாகும் என்பதால், தான் செயற்பட வேண்டியது இறைசட்டத்திற்கும், சமுதாய சம்பிரதாயங்களுக்கும் ஏற்றபடியாகும்.

**5. (ஆ)** வர்த்தகத்துறையில்:

வியாபாரி சமுதாயப் பணி புரிபவனாகும். அவனது வியாபாரம் தன்னலம் கொண்டதும், செல்வத்தைப் பெருக்கி இலாபத்தை மட்டும் எதிர்பார்க்கும் செயலாக இருத்தல் கூடாது. தனது ஊழியர்களுக்குரிய உரிமைகளை வழங்கி அவர்களுடன் நீதியான முறையில் நடந்துகொள்ளுதல். வேண்டும். தனது ஊழியர்களை அடிமைகளாகக் கருதாது தனது வர்த்தகத்தில் பங்காளிகளாக மதித்தல் வேண்டும். தனது பொருள் உற்பத்திச் சாலைகள் பொதுமக்களைச் சூறையாடும் இடங்களாக அன்றி மக்கள் வாழ்வை அபிவிருத்தி செய்யும் நிலையங்களாக வேண்டும். ஊழியனும் வியாபாரத்தின் வளர்ச்சிக்கும் நிலைத்திருத்தலுக்கும் பொறுப்புடன் செயற்படவேண்டும்.

**5. (இ)** கல்வித் துறையில்

ஒரு பிள்ளையை நல்வழி நடத்துதல் ஒரு பரம்பரையையே வழிநடத்துதலுக்கு ஒப்பாகும். ஆசிரியர், தந்தையர், தாய்மாரின் உயர்ந்த பணி அதுவாகும். ஒருவரின் துன்மாதிரிகையால் ஒரு பிள்ளை தவறான பாதையில் செல்வது பெரியதொரு அழிவாகும். பாடசாலை மட்டுமல்ல வீடும் கல்விக்கு உதவும் ஓர் இடமாகும். பெற்றோர் தம் பிள்ளைகள் பற்றி விழிப்பாயிருத்தல் வேண்டும். நாட்டின் எதிர்காலம் பிள்ளைகளாகும். பெற்றோர் இதுபற்றி விழிப்புணர்வு பெறவேண்டும். கல்வியானது தர வேறுபாடு, மொழி வேறுபாடு என்பவற்றுக்கு இடமளித்தல் கூடாது. அரசாங்கங்கள் நீதியான முறையில் எல்லாச் சிறார்களுக்கும் ஒளிமயமான எதிர்காலம் உருவாக கல்விக்கான கதவுகளைத் திறந்து கொடுத்தல் வேண்டும். இயேசு, "ஆசிரியரும் குருவுமாகிய நான் ...." என வசனித்த இறை மகனை முன்மாதிரிகையாகக் கொள்ள வேண்டும்.

**5. (ஈ)** சமூக சேவைத்துறையில்

சமூகசேவை சுய இலாபம் கருதி அல்லது சுய கௌரவம், புகழ் பெற்றுக்கொள்ள ஈடுபடுவதாக இருத்தல் கூடாது. அனைவரும் தத்தமது ஆற்றலுக்கு ஏற்ப மற்றவர்களுக்குச் சேவை புரியக் கடமைப்பட்டுள்ளனர். தனது கட்சி, இனம், குலம் எனப் பாராது பொது நன்மை கருதி சமூக சேவையாளர் செயற்பட வேண்டும். பெலவீனரை உயர்த்துவதும் ஆதரவற்றோருக்கு உதவுவதும் தமது குறிக்கோளாக இருக்க வேண்டும். ஆன்மாவைச் சார்ந்த இரக்கச் செயல்கள், உடலைச் சார்ந்த இரக்கச் செயல்கள் ஊடாகப் புரியும் சமூக சேவை மிக உயர்ந்ததாகும்.

*(ஒவ்வொரு பகுதிக்கும் தரப்பட்டுள்ள கருத்துக்கள் பொருத்தமானதாயின் ஒரு பகுதிக்கு 5 புள்ளிகள் வீதம் (4X5 =20)*

**வினா 6. (அ.)** இயேசு யூத இனத்தாருக்கு மட்டுமன்றி முழு உலக மக்களுக்குமே மீட்பராயிருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டப் புனித லூக்கா தனது நற்செய்தியை எழுதியுள்ளார் என்பதை 125 சொற்கள் அளவில் விளக்குக. உமது விடையை உறுதிப்படுத்த உதாரணங்கள் ஐந்தேனும் உள்ளடக்கப்பட வேண்டும்.

*(ஆ.) யூத மக்கள் ஏழு என்ற இலக்கத்தை வளமான அடையாளமாக மதித்தனர் என்பதை விளக்கி, யோவான் நற்செய்திலிருந்து அதற்கான சான்றினை முன்வைக்குக.*

**விடை 5. (அ.)** இயேசுவின் மூதாதையர் பட்டியலை ஆதாம் வரைக்கும் எடுத்துக் கூறுதல், வேற்றினத்தார் துன்பப்பட்டோர் மட்டில் காண்பித்த விசேட கவனம். வேற்றினத்தாரின் நற்பண்புகளை எடுத்துக் கூறுதல். நல்ல சமாரியன் உவமையின் மூலம் தரப்பட்ட செய்தி. நூற்றுவதலைவனைப் புகழ்தல். கனானேய பெண்ணின் விசுவாசத்தைப் பாராட்டுதல்.

(இத்தகைய உதாரணங்களுடன் விடை எழுதியிருப்பின் 10 புள்ளிகள் வழங்கவும்)

**5. (ஆ).** வாரத்தின் ஏழாம் நாளை ஓய்வு நாளாகச் செலவிடுதல், பாஸ்காவிற்கும் பெந்தகோஸ்தேக்கும் இடையில் ஏழு வாரங்களாகும். ஏழு வருடங்களுக்கு ஒரு முறை சபாத் வருடமாகும். சபாத் வருடம் ஏழுக்குப்பின் யூத வருடங்களாகும். பிரதான விழாக்களை ஏழு நாட்கள் கொண்டாடினர். பலிகளில் மிருகங்களின் இரத்தத்தை அல்லது நீரை ஏழு முறை தெளிப்பது முறையாகும். காணிக்கைப் பொருட்கள் ஏழு (எருமைகள் - செம்மறியாடுகள் - ஆடுகள் - புறாக்கள் - கோதுமை கொழுப்பு- திராட்சை இரசம், விளக்குத் தண்டின் திரிகள் ஏழு. யோவான் நற்செய்தி எண்ணிக்கைகளில் இலக்கம் ஏழைப் பின்பற்றியுள்ளது. "நானே" என்ற பதம் ஏழு முறை பயன்படுத்தப்படுகின்றது. புதுமைகள் ஏழு. இவ்வாறு ஏழுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருப்பது அது வளமான அடையாளம் என்பதனாலாகும். (இத்தகைய கருத்துக்களிருப்பின் 10 புள்ளிகள் வழங்கவும்)

(அடுத்த இதழில் தொடரும்)

# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்: அதிவந்தனைக்குரிய ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்: அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார்

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam,

Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk


## உள்ளம் உடைந்தோரை மீண்டும் உருப்பெறச் செய்யும் கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் உளவளப் பணிகள்



வளமையிலும் வாழத்தெரியும் "வறுமையிலும் வாழத்தெரியும்" என்பதற்கிணங்க எமது மக்களில் பெரும்பாலானோர் வாழப்பழகி விட்டார்கள் தொடர் இழப்புகளினாலும் இடப்பெயர்வினாலும் சலித்தாலும் மக்களின் மனம் பக்குவப்பட்டுள்ளது. இருந்தும் சிலர் இந்த இடப்பெயர்வு சூழ்நிலையினால் உள்ளம் உடைந்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எமது உளவளப்பணியும் இவர்களை மையப்படுத்தி -யதாக அமைந்துள்ளது. அவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான ஆற்றுப்படுத்தல்கள் மற்றும் வைத்தியசாலையுடன் தொடர்புபடுத்தி அவர்களை சாதாரண மனித வாழ்விற்கு இட்டுச்செல்வதே வாழ்வுதயத்தின் உளவளப்பிரிவின் செயற்பாடாகும்.

தொடர்ந்து இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் மாணவர்களுக்கான ஆளுமை வளர்ச்சிப் பயிற்சிப் பட்டறைகளும் நடைபெற்று வருகின்றன. கடந்த மாதங்களில் தாழ்வுபாடு பகுதியில் பெற்றோருக்கும் மாணவர்களுக்குமான கருத்தமர்வும் எருவிட்டானில் மாணவர்களுக்கான கருத்தமர்வும் நடைபெற்றன.

## தேசிய சமாதானச் செயற்திட்டம்
## National Peace Programme

"இப்பொழுதே என் கடவுளாகிய ஆண்டவர் என் எல்லைகள் எங்கும் அமைதி நிலவும்படி செய்திருக்கிறார். எனக்கு எதிரியுமில்லை, இடையூறுமில்லை"

(1 அரசர் 5: 4)

## "கிறிஸ்துவே உண்மையான சமாதானம்" வாழ்வுதயத்தின் சமாதானக் கருத்தமர்வுகளில் எதிரொலித்தவை!

கறிற்றாஸ் - வாழ்வுதய தேசிய சமாதான கல்வித்திட்டத்தின் கீழ் மன்னார் மறைக்கோட்ட மாணவர்களுக்கான தொடர் சமாதான கருத்தமர்வு ஏழாவது தடவையாக நடை பெற்றுள்ளது.

அத்துடன் வவுனியாக் கோட்டத்தில் பம்மைமடு, தாஸ்கோட்டம் வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கான கருத்தமர்வுகளும் நடைபெற்றன.

வஞ்சியன்குளப் பங்கின் நறுவிலிக்குளம் கிராமத்தில் தையல்பயிற்சி பெற்றுவந்த மாணவர்களுக்கான ஒருநாள் சமாதானக் கருத்தமர்வும் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது விவிலியத்தில் இருந்து, "கிறிஸ்துவே உண்மையான சமாதானம்" என்ற கருப்பொருளில் சிந்தனைகள் வழங்கப்பட்டன.

இன்று விஞ்ஞானத்தின் முதிர்ச்சியினால் உலகம் நிலைமாறிக்கொண்டிருக்கிறது. மனிதனை மனிதனே அழிக்கின்ற கொடிய போர் உலகம் முழுவதிலும் நடைபெறுகின்றது. மனிதத் தலைவர்களினால், நாட்டின் அரசர்களினால் சமாதானம் எட்டாக் கனியாகவுள்ள இன்றைய நிலையில் கிறிஸ்துவே அமைதியின் அரசர், அவரே உலக அமைதியின் ராஜாவாகவுள்ளார்.

இன்று உலகில் நடைபெறுகின்ற நிகழ்வுகள், போர்கள், மனித மாண்பின் சிதைவுகள் என்பன இன்று தீர்மானிக்கப்பட்டவையல்ல, இவை அனைத்தும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட விவிலியத்தில் குறிப்பிடப் பட்டவையின் வெளிப்பாடுகள் ஆகும். "போர் முழக்கங்களைக் கேட்கப்போகிறீர்கள்" போன்ற புதிய ஏற்பாட்டின் வார்த்தைகளுடாக காலங்களையும் நிகழ்வுகளையும் இறைவன் ஏற்கனவே நியமித்துள்ளார்.

எனவே எமது அன்றாட தனிப்பட்ட வாழ்விலும் குடும்ப வாழ்விலும் வாழ்க்கை மாற்றம் பெற்று உண்மையான அமைதியை உருவாக்க முயற்சிப்போம், செயற்படுவோம். இவ்வாறு தேசிய சமாதானப் பிரிவு இணைப்பாளரினால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இன்றைய மனித வாழ்வில் காணப்படுகின்ற முரண்பாடுகள் பிணக்குகள் என்பன தெளிவற்ற தொடர்பாடல்களினால் உருவாகின்றன. புரிந்துணர்வற்ற நிலைகள் மனிதர்களிடையே பிணக்குகளை கொணர்கின்றன. இதன் வெளிப்பாடுகளாக இரண்டு நபர்களிடையே காணப்படும் பிளவுகள் குழுக்களாக, கட்சிகளாக விஸ்தரிக்கப்பட்டு இன்று இனத்திற்கு இனம் எதிராக, நாடுகளுக்கு நாடுகள் எதிராக விஸ்தரிக்கப்பட்டு உலகமே அழிந்து கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் இதற்கான தீர்வுகளை பெரிய குழுக்களோ, அரசுகளோ ஏற்படுத்த முடியாது. எவ்வாறு பிரச்சினை தனி மனிதரிடத்திலே உருவாகின்றதோ அவ்வாறே அதற்கான தீர்வும் அவனது மனதிலேதான் உதயமாக வேண்டும். மனிதன் தனியாக வாழமுடியாதவன். அவன் சமூகமாக வாழவேண்டியவன். அவன் வாழும் சமூகத்திலே அவனது உறவுகளின் தன்மைகள் வேறுபட்டுள்ளது. சிலரோடு நெருக்கமான உறவும் சிலரோடு கடுமையான பகைமையும் கொண்டு மனிதன் வாழ்கின்றான்.

இதற்கான காரணங்களாக மற்றவர்களிடையே தன்னை வெளிப்படுத்தாத நிலையும், உறவுகளின் எல்லைகளை அறியாத நிலையும் காணப்படுகின்றன. இதன் வெளிப்பாடுகள் ஒட்டுமொத்த மனிதத்தையே சீரளித்து நிற்கின்றது. இதனை மாற்றியமைப்பது எவ்வாறு என்ற படிமுறை விளக்கங்களும் உயிரோட்டமான உறவுகளை ஏற்படுத்தும் நுட்பங்கள் பற்றியும் தேசிய சமாதானப்பிரிவு ஊக்குவிப்பாளர்களினால் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வுகளில் பங்குபற்றியவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், பொருள்களையோ பணத்தையோ மனிதனுக்குக் கொடுத்து அவர்களை மாசுபடுத்துவதைவிட வாழ்வின் விழுமியங்களை கற்றுகொடுப்பதனூடாக நல்மனித சமூகத்தை கட்டியெழுப்ப முடியும். அந்த வகையில் இந்த நிகழ்வுகள் மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளன. இவ்வாறான நிகழ்வுகளும் விழிப்பூட்டல்களும் அனைவரையும் சென்றடைய வேண்டும் எனவும் கருத்துத் தெரிவித்தனர்.




கடந்த 21.08.2008 அன்று மாணவர்களுக்கான 6வது தொடர்பயிற்சி வாழ்வுதய தொழில்பயிற்சி நிலையத்தில் நடைபெற்றபோது அமல உற்பவ மாதா சபையைச் சேர்ந்த அருட்சகோதரி றெஜினா மேரி அவர்கள் உரையாற்றுகின்றார்.

## வாழ்வுதயத்தின் கிராமிய விழிப்பூட்டல் பணி மக்களை ஆளுமையில் கட்டியெழுப்பும் உன்னத பணி
## அருட்பணி. செல்வநாதன் அடிகளார்

அண்மையில் வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் செயற்பாடுகளின் 2008ம் ஆண்டுக்கான ஆண்டிறுதி மாவட்ட மட்ட மீளாய்வு ஒன்றுக்கூடல் வவுனியா புனித அந்தோனியார் ஆலயக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே வவுனியா புனித அந்தோனியார் ஆலய உதவிப்பங்குத் தந்தை அருட்பணியாளர் செல்வநாதன் அடிகளார் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் பணி மூலம் கிராமங்களில் வாழும் மக்கள் சமூக, பொருளாதார, கலாச்சார, ஆன்மீகத் துறைகளில் விழிப்பூட்டம் பெற்று வருகின்றார்கள். இக்குழுக்களுக்கு கருத்தமர்வுகள், பயிற்சிப் பட்டறைகள் மூலம் விழிப்பூட்டியும் வருகின்றனர். வவுனியா மாவட்டத்திலும் இவ்விழிப்பூட்டல் செயற்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருவதை நான் அறிந்துள்ளேன் என்று கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், ஒவ்வொரு வருடமும் இக்குழுக்களுக்கான மீளாய்வினை மேற்கொள்வது சிறப்பான ஒரு விடயம். அத்தோடு புதிய ஆண்டுக்கான திட்டங்களையும் வரைந்து இத்திட்டத்தை வலுவடையச் செய்ய முடியும். எனவே இதில் பங்குகொள்ளும் கிராம ரீதியிலான குழுத் தலைவர்கள் இதன் முக்கியத் -துவத்தை உணர்ந்து செயற்படுவது நல்லது எனவும் கூறி தனது ஆசி உரையினை நிறைவு செய்தார்.



அருட்பணியாளர் செல்வநாதன்

இந்நிகழ்வில் வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் பிரிவு இணைப்பாளர் மற்றும் பிரதேச கள அலுவலர்கள், குழுத்தலைவர்கள் என 34 பேர் கலந்துகொண்டனர்.

இதேபோன்று ஆண்டு இறுதி மாவட்ட மட்ட மீளாய்வு மன்னார் மாவட்டத்தில் வாழ்வுதய தொழிற்பயிற்சி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இம்மீளாய்வினை கிராமிய விழிப்பூட்டல் பிரிவு இணைப்பாளரும் பிரதேச கள அலுவலர்களும் மேற்கொண்டனர். இதில் 45 பேர் கலந்துகொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



வவுனியா மாவட்ட மட்ட கிராமிய விழிப்பூட்டல் குழு உறுப்பினர்கள் 2008ம் ஆண்டு மீளாய்வில் கலந்துகொள்கின்றனர்.

இலக்கியத் தடாகம்



# விவிலியமும் தமிழ் இலக்கியமும்



ஒப்பீட்டுத் தொடர் 1.

- அருள் . செல்லத்துரை

*விவிலியத்தையும் தமிழ் இலக்கியத்தையும் ஒப்பிட்டு நோக்கும் இப்பகுதி வாசகர்களுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும் என நம்புகிறோம். ஒவ்வொரு மன்னா இதழிலும் ஒரு தலைப்பில் இந்த ஒப்பீடு அமைந்திருக்கும். விவிலியத்தை நன்கு கற்றவர்கள் தமிழ் இலக்கியங்களில் கடவுள், சமயம், உலகு, வாழ்வு, மனிதர் பற்றிக் காணக்கிடக்கின்ற உயர்ந்த கருத்துக்களைக் கற்றுத் தம் பார்வையையும் பண்பாட்டையும் இன்னும் விரிவாக்கிச் செம்மைப்படுத்த இப்பகுதி உதவும். அதுபோன்றே தமிழ் இலக்கியங்களில் புலமையுடையோர் கிறிஸ்தவப் பார்வைகளில் அறிமுகமும் ஆழமும் பெற்று வளமுற முடியும். இவ்வாறு உரையாடல்கள் தொடரவும், உறவுகள் ஆழப்படவும் ஒத்துழைப்புகள் பெருகவும் இத்தொடர் வழியாக வழிபிறக்கும் என நம்புகிறோம்.*

*உலகிலேயே மிகத் தொன்மையான மொழிகளைத் தாய் மொழிகளாகக்கொண்ட ஈரினத்தாரிடையே தொடர்பில்லாவிடத்தும் அன்பு நெறியை அடிப்படையாகக்கொண்ட இலக்கியச் சிந்தனைகள் ஒத்தவாறு மலர்ந்திருந்தன. வாழும் நிலத்தால், பேசும் மொழியால், மதத்தால், சூழும் பழக்கவழக்கங்களால், உணவால், நடை உடை மனை நாகரீகத்தால் வேறுபட்ட மக்களின் வாழ்வியல் களஞ்சியங்களான விவிலியத்திலும் தமிழ் இலக்கிய நூல்களிலும் (19ம் நூற்றாண்டு வரை) காணப்படும் ஒத்த பகுதிகளை நேருக்கு நேர் வைத்துப் பொருத்திக் காட்டுவதே இத்தொடரின் நோக்கம்.*

*இடப்பக்கங்களில் விவிலிய மேற்கோள்கள் வரிசை எண்ணிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. வலப்பக்கங்களில் அவற்றிற்குப் பொருத்தமான தமிழ் இலக்கிய மேற்கோள்கள் அதே வரிசை எண்களில் நேருக்கு நேர் கொடுக்கப்பட்டுள்ளன. ஆயினும் ஒன்றுக்குப் பல பொருத்தங்கள் அமைவதையும் காணலாம். இப்பகுதி ஆய்வாளர்களுக்கும் மறை உரை ஆற்றும் குருக்களுக்கும், தமிழறிஞர்களுக்கும் இன்னும் விவிலியத்திலும் தமிழ் இலக்கியத்திலும் ஆர்வம் உள்ள அனைவருக்கும் பயன்படும்.* - பதிப்பாசிரியர்

## திருவிவிலியம்

### அன்பின் இறைவன்

1. (அ) கடவுள் அன்பாய் இருக்கிறார். - 1 யோவான் 4:8

(ஆ) கடவுள் நம்மிடம் கொண்டுள்ள அன்பை அறிந்துள்ளோம். அதை நம்புகின்றோம். கடவுள் அன்பாய் இருக்கின்றார் - 1 யோவான் 4:16

2. அப்போது இயேசு கண்ணீர் விட்டழுதார். அதைக்கண்ட யூதர்கள் 'இலாசர்மேல் இவருக்கு எத்துணை அன்பு' என்று பேசிக்கொண்டார்கள். - யோவான் 11:36

3. (அ) கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள், அவரது அன்பிற்குரிய இறைமக்கள் - கொலோ 3:12

(ஆ) உம்மைப் பின்பற்றும் உம் அடியார்கள்மேல் நீர் அன்புகூர்ந்து உமது உடன்படிக்கையைக் காத்து வருகிறீர். - 2 குறி 6:14

4. (அ) 1. நாம் வாழ்வுபெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது. 1 யோவா 4:9

2. கடவுள் வடிவில் விளங்கிய அவர்... தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றிச் சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். - பிலி. 2:6-8

(ஆ) நாம் பாவிகளாயிருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இவ்வாறு கடவுள் நம்மீது கொண்டுள்ள தம் அன்பை எடுத்துக்காட்டியுள்ளார். - உரோ 5:8

(இ) கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இதனால் அன்பு இன்னதென்று அறிந்துகொண்டோம். 1 யோ. 3:16

5. நான் உங்களிடம் அன்பு செலுத்தியதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். - யோவான் 13:34:15:12

6. (அ) ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்- திபா103:8

(ஆ) இசுராயேல் குழந்தையாய் இருந்தபோது அவன்மேல் அன்புகூர்ந்தேன். அன்புக்கயிறுகளால் கட்டி நடத்தி வந்தேன். - ஓசே 11:1,4

(இ) ஆண்டவரே உமது இரகத்தையும் பேரன்பையும் நினைந்தருளும். - தி.பா 25:6

(ஈ) உமது பேரன்பு என்றென்றும் நிலைத்துள்ளது என்று அறிவிப்பேன். (தி.பா. 89: 2)

7. (அ) 1. கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக்கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? இன்னலா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்? - உரோ 8:35

2. சாவோ, வாழ்வோ, வானதூதரோ, ஆட்சியாளரோ, நிகழ்வனவோ, வருவனவோ, வலிமை மிக்கவையோ, உன்னதத்தில் உள்ளவையோ, ஆழத்தில் உள்ளவையோ, வேறெந்தப் படைப்பும் நம் ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவின் வழியாய் அருளப்பட்ட கடவுளின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கவே முடியாது என்பது என் உறுதியான நம்பிக்கை. - உரோ 8: 38, 39

(ஆ) 1. அவரது பேரன்பால் பூவுலகு நிறைந்துள்ளது - தி.பா 33: 5, 119:64

2. அவர் தம் பேரன்பை வியத்தகு முறையில் எனக்கு விளங்கச் செய்தார். - தி.பா 31:21 - காண்: திபா 17:7

3. ஆண்டவரே, வானளவு உயர்ந்துள்ளது உமது பேரன்பு. - தி.பா 36:5 காண்: எரே 33:11

## தமிழ் இலக்கியம்

### அன்பின் இறைவன்

1. (அ) அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்.
- திருமந்திரம் 257

(ஆ) அன்பெனும் அணுவுள் அமைந்தபேர் ஒளியே
அன்புருவாம் பர சிவமே. - திருஅருட்பா 3269

2. அன்போடு உருகி அகம் குழைவார்க்கு அன்றி
என்போல் மணியினை எய்தவொண்ணாதே.
- திருமந்திரம் 259

3. அன்பின் உள்ளாகி அமரும் அரும்பொருள்
அன்பின் உள்ளார்க்கே அணை துணை யாமே!
- திருமந்திரம் 266

4. (அ) அத்தா உன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்
அருள் நோக்கில் தீர்த்தநீர் ஆட்டிக் கொண்டாய்
எத்தனையும் அரியை நீ எளியை ஆனாய்.
- அப்பர் தேவாரம் 936

(ஆ) மாறிலாத மாக் கருணை வெள்ளமே
........................................................
ஈறிலாத நீ எளிமையாகி வந்து
ஒளிசெய் மானுட மாக நோக்கி. -திருவாசகம் 5:91

(இ) நிந்தை ஏற்பினும் கருணை செய்திடல்
நித்த நின் அருள் நீதி ஆகுமால்
தந்தை தாய் என வந்து சீர் தரும் தலைவனே
திருத் தணிகை நாதனே. - திருஅருட்பா 135

5. அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே -திருமந்திரம் 257

6. அன்பின் உள்ளான், புறத்தான், உடலாய் உளான்,
முன்பின் உள்ளான், முனிவர்க்கும் பிரான் அவன்
அன்பின் உள்ளாகி அமரும் அரும்பொருள்.
- திருமந்திரம் 266

7. அ) நன்று பிணி மூப்புக் கையகற்றி நான்கு ஊழி
நின்று நிலமுழுதும் ஆண்டாலும் - என்றும்
விடல் ஆழி நெஞ்சமே வேண்டினேன் கண்டாய்
அடல் ஆழி கொண்டான் மாட்டு அன்பு.
*- நாலாயிரத்திவ்விய பிரபந்தம், பொய்கையாழ்வார் - 71*

(ஆ) அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குள் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே - திருஅருட்பா 3269

## தமிழ் நேசன் அடிகளாரின் நூலுக்கு தேசிய விருது




யாழ்ப்பாணத்தில் செயற் - பட்டுவரும் இலங்கை இலக்கியப் பேரவை 2006 - 2007 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட நூல்களில் சிறந்த விருதுக்குரிய நூல்களை அறிவித்துள்ளது.

இதிலே சிறந்த சமய நூலுக்கான விருதை மன்னா ஆசிரியர் தமிழ் நேசன் அடிகளார் எழுதிய **'வெளிச்சத்தின் வேர்கள்'** என்ற நூல் பெற்றுள்ளது.

வரலாற்றுப் பதிவுகள்

இலங்கை இந்திய இணைப்புப் பாலமாக விளங்கிய

# தலைமன்னார் - மதவாச்சி ஏ - 14 நெடுஞ்சாலை

- மக்கள் காதர் -

ஆங்கிலேயர் நம்மை ஆண்டபோது முதலில் இலங்கையிலுள்ள நெடுஞ்சாலைகளைச் சீரமைத்தனர். அத்தனை நெடுஞ்சாலைகளையும் மண்ணும், கல்லும் இட்டு சீரமைத்துத் தார் சாலைகளாக மாற்றினர். அக்காலங்களில் ரப்பரினால் போடப்படும் 'கார்பெட்' (Carped) பாதைகள் கண்டுபிடிக்கப் - படவில்லை. எனவே அத்தனை நெடுஞ்சாலைகளையும் தாரினால் மூடினார்கள். இப்பாதைகளுக்குத் தொடர்பாக வரும் மதகுகளையும், பாலங்களையும், சுரங்கப் பாதைகளையும் அமைத்தார்கள். அத்துடன் அதற்கு அருகே புகையிரதப் பாதைகளையும், புகையிரத நிலையங்களையும் தங்கும் விடுதிகளையும் அமைத்தார்கள். அந்தப் பாதைகளுக்குப் பெயருமிட்டார்கள். அதன்படி அமைக்கப்பட்டதுதான் தலைமன்னார் - மதவாச்சி ஏ - 14 பாதை.

இப்பாதை சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டது. இதேபோல் மதவாச்சி - யாழ்ப்பாணம் பாதை ஏ.- 9 எனப் பெயரிட்டது. இப்பாதை இரண்டும்தான் தமிழ் மக்களுக்குத் தென்பகுதி மக்களது தொடர்பை ஏற்படுத்திய பாதைகளாகும். மதவாச்சி - மன்னார் பாதை சுமார் 100 கிலோ மீட்டராகும். அதேபோல மதவாச்சி - காங்கேசன்துறைப் பாதை சுமார் 180 கிலோ மீட்டர் நீளமானது. இவை இரண்டும் புகையிரதப் பாதையோடு அருகே அமைக்கப்பட்டவைகளாகும்.

தலைமன்னார் - மதவாச்சி நெடுஞ்சாலை இலங்கை இந்திய இணைப்புப் பாதையாகும். ஆங்கிலேயர் தங்கள் வர்த்தக நலத்திற்காக இப்பாதையை அமைத்தனர். மலைநாட்டில் அபரிதமாக விளைந்த தேயிலை, ரப்பர் பயிர்களைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும், இந்தியத் தமிழ் நாட்டு ஏழைத்தொழிலாளிகளை பல்லாயிரக்கணக்கில் இங்கு கொண்டுவந்தனர். அவர்களை இங்கு கொண்டுவருவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டதுதான் இந்த ஏ 14 - நெடுஞ்சாலையாகும். இது தலைமன்னார் - பியர் (இறங்குதுறையில்) ஆரம்பித்து இலங்கையின் வடமத்திய பகுதியான மதவாச்சியில் முடிவுறுகின்றது. ஆங்கிலேயர் அமைத்த புகையிரதப்பாதைகள் மூன்று இடங்களில் 'ஜங்ஸன்' என்ற பெயரில் பல பாதைகளைத் தொடுகின்றது. அதில் ஒன்று 'இஸ்டேசன் மதவாச்சி ஜங்ஸன்' ஆகும். இவ்விடத்திலிருந்து தலைமன்னாருக்கும் காங்கேசந்துறைக்கும் புகையிரதப் பாதைகள் பிரிகின்றன.

இங்கு அமைக்கப்பட்ட புகையிரதப் பாதைகள் காட்டு வழியே செல்கின்றன. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று நகர் வழியே இராட்சதக் 'கறுத்த பிசாசு' செல்வதைக் கண்டு மக்கள் அச்சம் கொண்டமை. மற்றது இந்தியத்தொழிலாளர்களைப் பெட்டியில் அடைத்துக்கொண்டு செல்லும் காட்சிகளை மக்கள் பார்க்கக்கூடாது என்ற எண்ணம். இதனாலேயே ஆங்கிலேயர் காடுகளின் ஊடாகப் புகையிரதப் பாதைகளை அமைத்தனர். இதன் ஓர் அங்கமாக 1913ல் மன்னார் தீவுக் கடலை ஒட்டி இரு பாலங்களை அமைத்தனர். அதற்கு 'இரட்டைக்கண்' 'மூன்று கண்' பாலங்கள் எனப் பெயரிட்டனர்.

இதன்மேலாகத் தலைமன்னார் கொழும்பு புகையிரதங்கள் இந்தியத்தொழிலாளர்களை ஏற்றிக்கொண்டு பொல்காவெல ஜங்ஸன் சென்று அங்கிருந்து வேறு புகையிரதங்கள் மூலம் மலை நாடு சென்றனர். அதேபோல் 1930ல் மற்றுமொரு பாலம் 'ஒன்றைக்கண்' என்ற பெயரில் தரைவழிப் பாதையாக அமைக்கப்பட்டது. இப்பாலம் கடலை ஊடறுத்து சுமார் 4 1/2 கிலோமீட்டர் வரையில் அமைக்கப்பட்டு மன்னார்த் தீவையும் இலங்கைப் பெருநிலப்பரப்பையும் இணைத்து வைத்தது. 'மன்னார் தாம்போதி' என்று அழைக்கப்பட்ட இப்பாலம் அன்று இலங்கையிலேயே மிகவும் நீளமான கடற்பாலம் என்றும் அழைக்கப்பட்டது.

ஏ.14 பாதை தலைமன்னார் துறையில் ஆரம்பித்து பேசாலை, தோட்டவெளி, மன்னார், முருங்கன், மடுரோட், பறையன் ஆலங் -குளம், செட்டிகுளம், மாங்குளம் இஸ்ரேசன், மதவாச்சி நகரம் என்று முடிகின்றது. மன்னாரிலிருந்து கொழும்பு செல்லும் மக்கள் மதவாச்சி ஸ்ரேசனில் இறங்கி நிற்க, யாழ்ப்பாணத்திலிருந்து வரும் அதிவேக யாழ்தேவி மற்றும் உத்திரதேவிப் புகையிரதங்கள் இவர்களைக் கொழும்பு கொண்டு செல்கின்றன. இப்புகையிரத சேவைகளே இலங்கையில் அதிக வருவாய் தரும் சேவையாகக் கருதப்பட்டன.

ஆங்கிலேயர் மன்னார் முதல் மதவாச்சி வரை ஏ - 14 பாதைகளைச் சிறந்த முறையில் அமைத்ததுடன் அதன் இரு மருங்கிலும் நிழல் தரும் மரங்களையும் பயன்தரும் கனி மரங்களையும் நட்டிவைத்தனர். அவைகள் வளர்ந்து செழித்துச் சோலைகளாக மாறி கண்கொள்ளாக் காட்சிதந்தன.

இன்று அனைத்து மரங்களும் தறிக்கப்பட்டுள்ளன. இன்று தெரு வீதிகள் பாலைநிலங்களாக மாறிவிட்டன. இதனால் மழை வீழ்ச்சியும் நின்றுபோனது. அத்துடன் பல இலட்சம் பலன்தரும் பனை மரங்கள் அனைத்தும் பாதுகாப்புப் படையினரால் வெட்டிச் சாய்க்கப்பட்டுள்ளன. இதனால் மன்னாரில் வருடம் ஆறு மாதங்கள் பெய்த பருவ மழை இப்போது மார்கழியில் மட்டும் கொஞ்சம் பெய்கின்றது. அதுவும் வங்காள விரிகுடாவில் தாழ் அமுக்கம் ஏற்பட்டால்தான் இங்கு மழை பெய்யும்.

தலைமன்னார் முதல் மதவாச்சி வரையான புகையிரதப் பாதைகள், புகையிரதநிலையங்கள், இளைப்பாற்று விடுதிகள் அனைத்தும் 1990க்குப் பின்னர் விடுதலைப் புலிகளாலும் அரச படைகளாலும் அழிக்கப்பட்டன. இன்று இங்கு புகையிரதத் தடங்கள்கூட இல்லை. இதுதான் ஏ 14 நெடுஞ்சாலையின் நீண்ட வரலாறாகும். இப்பாதை மீண்டும் சீர்ப்படுத்தப்பட்டு புகையிரதப்பாதைகள் தண்டவாளங்கள் அமைக்கப்பட்டு மீண்டும் சேவையில் ஈடுபடுமா? நடைபெறும் இக்கோர யுத்தம் முடிவுக்கு வருமா? அல்லது அனைத்தும் கானல் நீர்தானா?

# பழைய கேள்விகளும் புதிய பதில்களும்

தருவது தஞ்சை டோமி

**அடிப்படைவாத பெந்தக்கோஸ்தேசபைச் சகோதரர்களின் கேள்விகளுக்கு விவிலிய அடிப்படையில் தெளிவான, அழுத்தமான பதில்களைத் தாங்கி இத்தொடர் வருகிறது.**

## தொடர் - 17

**கேள்வி : புனிதர்களின் சமூக உறவு (Communion of Saints) என்றால் என்ன? ஏன் யேசுவிடம் நேரடியாகச் செபிக்காமல் மரியா மற்றும் புனிதர்களிடம் செபிக்கிறார்கள்?**

**பதில் :** புனிதர்களின் சமூக உறவு என்பதைப் புரிந்துகொள்ளும் முன், மனிதர்களின் வாழ்வில் அவர்களின் நலன்களைக் காக்க அமைந்துள்ள கூட்டுறவு அமைப்புக்களைப் புரிந்துகொள்வது நல்லது. ஆசிரியர்களின் நலனைக் காக்க, ஆசிரியர்களின் சங்கம் என்றும், அரசு ஊழியர்களின் நலனைக் காக்க அரசு ஊழியர்கள் சங்கம் என்றும், விவசாயிகள் நலனைக் காக்க விவசாயிகள் சங்கம் என்றும் பல சங்கங்கள், கழகங்கள், கூட்டுறவு அமைப்புக்கள் இருப்பது நாம் அறிந்ததே. காரணம் தங்கம் செய்யாததையும், சங்கம் செய்யும் என்பதில் மக்களுக்கு உள்ள நம்பிக்கையால்.

இதுபோல திருச்சபையின் நலனைக் காக்க ஓர் அமைப்பு உண்டு, ஒரு கூட்டுறவு உண்டு, ஒரு சமூக உறவு உண்டு என்றால் அதுதான் புனிதர்களின் சமூக உறவு என்கின்றோம். இதையே நாம் விசுவாசப் பிரமாணத்தில் "புனிதர்களின் சமூக உறவையும் விசுவசிக்கின்றேன்" என்று அறிவிக்கிறோம். இப்புனிதர்களுடைய சமூக உறவே நாம் புனிதர்களை வணங்குவதற்குத் தூண்டும் விசுவாசக் கோட்பாடாகும்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின்படி புனிதர்களின் சமூக உறவு என்பது இவ்வுலகில் பயணம் செய்யும் திருச்சபையின் மக்கள் நாம் திருயாத்திரிகர்களாக உள்ளோம். இவ்வுலக வாழ்வை முடித்துவிட்ட சிலர் தூய்மைப்படுத்தப்படுகின்றனர். சிலர் இறைவனை அவர் இருப்பதுபோல பார்க்கும் மகிழ்வு நிலையிலுள்ளனர். இதைத்தான் 2ம் வத்திக்கான் சங்க ஏட்டின் 'திருச்சபை' என்ற கொள்கைத் திரட்டின் எண் 49சுட்டிக்காட்டுகிறது. ஏற்கனவே இறந்துபோன சகோதர, சகோதரிகளுக்கும், வழிப்போக்கர்களாகிய நமக்கும் உள்ள உறவு அறுந்து விடவில்லை. மாறாக அவ்வொன்றிப்பு உறுதிபெறுகின்றது என்கிறது. விண்ணகத்தார் கிறிஸ்துவோடு ஒன்றித்திருப்பதால் திருச்சபையின் மக்கள் புனிதத் தன்மையில் உறுதிப்பட அவர்கள் உதவுகின்றனர். கிறிஸ்துவிடம் நமக்காக அயராது பரிந்து பேசுகின்றனர்.

இவ்வுலகில் தீய சக்திகளோடு போராடும் திருச்சபையின் திருயாத்திரிகர்களாகிய விசுவாசிகள் 'போர் புரியும் திருச்சபை' (Militant Church) என்றும் விண்ணகத்தில் இறைவனைக் கண்டு மகிழும் விண்ணகப் புனிதர்களை வெற்றித்திருச்சபை (Triumphant Church) என்றும், இவ்வுலகில் தாங்கள் கட்டிக்கொண்ட பாவங்களுக்காகக் கழுவாய் தேடும் விசுவாசிகளை (உத்தரிக்கும் ஸ்தலத்தில் உள்ளவர்களை) துன்புறும் திருச்சபை (Suffering Church) என்றும் அழைக்கின்றோம்.

இந்த மூன்று திருச்சபைக்குள்ளேயும் தோழமை, நட்பு, கூட்டுறவு இருக்கிறது. ஒரு தரப்பினர் மற்றத் தரப்பினருக்கு உதவுகின்றனர். இந்தப் புனிதர்களின் சமூக உறவை இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் மிகுந்த வணக்கத்துடன் ஏற்றுக்கொண்டது. (திருச்சபை எண்.51) விவிலியத்தில் வரும் விண்ணரசு, திராட்சைச்செடி மற்றும் உடல் ஆகிய உருவகங்கள் புனிதர்களின் தோழமையை வெளிப்படுத்துகின்றன. (மத். 4:17 , யோவா. 15:-1-6, 1 கொரி. 12: 27, 1 கொரி. 12: 26)

சிறுமலர் தெரசா, "எனது விண்ணக வாழ்வை மண்ணக மாந்தர்களுக்கு நன்மை செய்வதில் செலவழிக்க விரும்புகின்றேன்" என்று கூறியுள்ளது அன்னை மரியாவும் புனிதர்களும் நமக்கு நன்மையே புரிவார்கள் என்பதற்கும் புனிதர்களின் சமூக உறவுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஏன் புனிதர்கள், மரியாவிடம் செபிக்கின்றோம்? இயேசுவின் மீட்புப்பணியில் இணைபிரியாது தொடர்புகொண்டிருந்த அன்னை மரியாவை பரிந்துரைப்பவர் (யோவா2:3) என்றும், துணை நிற்பவர் (உரோ 5: 19) என்றும், உதவி அளிப்பவர் (யோவா 2:10) என்றும் காண்கின்றோம்.

1 திமோ. 2:5இன்படி கடவுள் ஒருவரே. கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே இணைப்பாளரும் ஒருவரே. அவரே இயேசுக் கிறிஸ்து என்னும் மனிதர். யூத இனத்திற்கும் பிற இனத்திற்குமிடையேயான பகையை முறித்தவர் இயேசுவே (எபே 2:14-18). இப்படியிருக்க மரியாவும், புனிதர்களும் எப்படி இடைநிலையாளர்களாக பரிந்து பேச முடியும்?

- மரியா வழியாக இறைவன் திருமுழுக்கு யோவானுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்ததால் மரியா திருமுழுக்கு யோவானுக்கும், இறைவனுக்குமிடையே நிற்கிறார் (லூக். 1:39-45).
- மரியாவே இயேசுவைப் பிற இனத்து ஞானிகளுக்குக் காட்டுகிறார். ஆக, மரியா வழியாகவே மனிதர்கள் மீட்பர் இயேசுவை அணுக முடிகிறது. இதனால் மரியா இறைவனுக்கும், மரித்தோருக்குமிடையே ஓர் இணைப்பாளர் (மத் 2: 1-12).
- மரியா இறைவனின் வார்த்தையை ஏற்பவர் மட்டுமல்ல. அதைக் கடைப்பிடிக்கும்படி மக்களுக்கு அறிவுறுத்துபவருமாவார். ஆக, இறைத்திட்டத்தின்படி மக்களை இறைவனிடம் இட்டுச்செல்லும் ஓர் இணைப்பாளர் மரியா என்று பார்க்கின்றோம் (யோவா 2:5, விபா 19:8).

இப்படி இயேசுவின் மீட்புப்பணியில் நெருங்கிய தொடர்புடைய மரியா - இணைப்பாளராக, பரிந்து பேசுபவராக, உதவியாளராக இருப்பதுபோல், புனிதர்களும் தங்களுடைய இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வால் இயேசுவோடு நெருங்கிய தொடர்புடையவர்கள். அதனால் அவர்களும் பரிந்து பேசக்கூடியவர்களாக, உதவியாளராக உள்ளனர். இதுவே, நாம் புனிதர்களிடமும், அன்னை மரியாவிடமும் செபிக்கக் காரணமாகும். **(கேள்விகள் தொடரும்)**

# பொதுநிலையினர் வாழ்வில் இறைவார்த்தை

## இறைவார்த்தை ஆண்டையொட்டிய சிந்தனைக் கட்டுரைத் தொடர் - 13

**திரு. மாட்டின் டயஸ், (பேசாலை) இளைப்பாறிய கோட்டக் கல்விப் பணிப்பாளர்**

### II. இரண்டாவது மகிமை நிறை மறையுண்மை விண்ணேற்பு அடைகின்ற யேசு பரலோகத்திற்கு எழுந்தருளிச் செல்கின்றார்

யேசுவின் விண்ணேற்புப் பற்றி புனித லூக்கா, புனித மாற்கு ஆகியவர்களோடு திருத்தூதர் பணியும் குறிப்பிடுகின்றது. திருத்தூதர் பணி இப்படிச் சொல்கின்றது. "தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளுடைய வல்லமையைப் பெற்று எருசலேமிலும், யூதேயா சமாரியா முழுவதிலும் உலகின் கடை எல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள் என்றார். இவற்றைச் சொன்ன பின்பு அவர்கள் கண் முன்பாக அவர் மேலே எடுத்துக்கொள்ளப்பட்டார். மேகம் ஒன்று அவரை எடுத்துச்சென்று அவர்கள் பார்வையிலிருந்து மறைத்துவிட்டது. அவர்கள் செல்லும்போது வானத்தை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டே இருந்தார்கள். அப்போது வெண்ணிற உடை அணிந்த இருவர் தோன்றி 'கலிலேயரே நீங்கள் ஏன் வானத்தை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டே நிற்கின்றீர்கள். இந்த யேசு உங்களிடமிருந்து விண்ணேற்றம் அடைந்ததைக் கண்டீர்கள் அல்லவா? அவ்வாறே மீண்டும் வருவார் என்றனர்." (திருத்தூதர் பணி 1:8:11)

புனித லூக்கா தமது நற்செய்தியில் விண்ணேற்புப் பற்றி வேறு சில முக்கியமான தகவல்களையும் வழங்குகின்றார். "யேசு தம் சீடர்களைப் பெத்தானியா வரை அழைத்துச் சென்று தம் கைகளை உயர்த்தி அவர்களுக்கு ஆசீர்வழங்கிக் கொண்டிருந்தபோதே அவர்களிடமிருந்து பிரிந்து விண்ணேற்றம் அடைந்தார். அவர்கள் (சீடர்கள்) அவரை வணங்கிவிட்டுப் பெருமகிழ்ச்சியோடு எருசலேம் திரும்பிச் சென்றார்கள்."

இந்த இரு நூல்களின் நிகழ்ச்சிக் குறிப்புக்களிலிருந்து நமக்குக் கிடைக்கும் தகவல்கள் :

1. இயேசு பெத்தானியாவிலிருந்து விண்ணேற்றம் அடைந்தார்.
2. தான் சென்று துணையாளரை அனுப்புவேன் என்ற உறுதி மொழியை யேசு தந்தார்.
3. இயேசுவை அவர் போதனைகளை - மறையுண்மைகளை சீடர்கள் தூய ஆவியின் வருகைக்குப்பின் தெளிவாக விளங்கிக் கொள்வார்கள் என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டது
4. இயேசுவின் விண்ணேற்பு அவர்களிடையே பெருமகிழ்ச்சியை ஏற்படுத்திற்று.
5. இயேசுவின் நற்செய்தி அறிவிப்புப்பணியை உலகெங்கும் - கடை எல்லை வரைக்கும் எடுத்துச்செல்ல வேண்டிய அன்புக் கட்டளை வழங்கப்பட்டது.
6. இயேசு விண்ணேற்றம் அடைந்ததை இறைத்தூதர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.
7. இயேசு மீண்டும் வருவார் என்ற உறுதிமொழி திருத்தூதர்கள் வாயிலாக வழங்கப்படுகின்றது.
8. இயேசுவின் சாட்சிகளாய் சீடர்கள் உலகெங்கும் இருப்பர்.

கிறிஸ்துவின் விண்ணேற்போடு இரட்சிப்பின் ஒப்பந்தம் நிறைவு பெறுகின்றது. ஆதியில் ஏதேன் தோட்டத்தில் இறைவனுக்குக் கீழ்ப்படியாமை என்ற பாவத்துக்கு அடிமைப்பட்ட மனிதனை மீட்க விரும்பிய இறைவன் மீட்பராய்த் தாமே மனித உருவெடுத்து உலகில் தோன்றிப் பாவப்பரிகாரம் செய்ய வாக்களித்தார். அந்த இறைவன் மனிதனாய்த் தோன்றி மனுக்குலத்தின் மீட்புப்பணியைக் கல்வாரியின் சிலுவைப்பலியால் நிறைவேற்றி - ஆதிப்பெற்றோருக்கு அளித்த வாக்குறுதியை நிறைவுசெய்து விண்ணகத்திற்கான வாசல்களை நமக்காகத் திறந்து முதல் மனிதனாக வானகம் சென்றார்.

**இம்மறையுண்மையிலிருந்து மலரும் ஏனைய சிந்தனைகள்:**

**1. நமக்கான நிரந்தர இல்லிடம் ஒன்று உண்டு.**

கிறிஸ்துவின் நற்செய்திப்பணி மானிட இனம் முழுவதையும் விண்ணகத்திற்கு அழைத்துச் செல்வதான ஒரு பணிதான். மனிதன் இரட்சிப்பு அடைவதுதான் நற்செய்தி. இது கிறிஸ்து ஊடாகவே நிறைவேறும் என்று கிறிஸ்துவே பல சந்தர்ப்பங்களில் தனது போதனைகளின்போது விளக்கியிருக்கின்றார். "நானே ஒளி, நானே வழி, என் வழியாக அன்றி எவரும் தந்தையை அடைய முடியாது" என்றும் தம் சீடர்களிடம், "நான் என் தந்தையிடம் செல்கின்றேன். அங்கு உங்களுக்கான இல்லிடங்களை ஆயத்தம் செய்வேன்" என்றும் கூறினார்.

ஆக, நாம் இவ்வுலகில் வாழ்வது இறைவனை அடைவதற்கான, விண்ணரசைச் சேர்வதற்கான பயணமே. இந்த உலகம் நிலையானது அல்ல என்றால் நிலையான உலகம் இயேசு சென்ற விண்ணரசு - இறையரசுதான்.

**வேண்டுதல் :-** விண்ணகம் நோக்கிய எம் பயணத்தில் தூய ஆவியின் அருளோடு இயேசுவின் கரம் பிடித்துப் பயணிக்க வரம் கேட்டல்.

**2. கிறிஸ்து விண்ணகம் சென்ற முதல் மனிதன்.**

கிறிஸ்து மனிதனான இறைவன். "வார்த்தை மனுவானது, நம்மிடையே குடிகொண்டது" என்கின்றது வேதம். கிறிஸ்துவில் மனிதமும் இறைத்தன்மையும் பூரணமாய் நிறைந்திருந்தன. இறைவனாகக் கிறிஸ்து விண்ணேற்பு அடைய வேண்டுமானால் அதற்குப் பாடுகள் மரணம் உயிர்ப்பு என்பவை அவசியமில்லை. அவர் இறைவனாக விண்ணிலும் மண்ணிலும் அண்ட சராசரம் முழுவதிலும் நிறைவாகவும் நிரந்தரமாகவும் இருந்துகொண்டே இருக்கின்றார். அப்படியென்றால் கிறிஸ்து விண்ணேற்றம் அடைந்தது கிறிஸ்து மனிதனாகத்தான்.

யேசு இந்தத் துன்பியல் வாழ்வுக்கூடாகச் சென்று வந்தபின்பே இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவுப்பாலம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. இயேசு முதல் மனிதனாக விண்ணேற்பு அடைந்தார்.

**வேண்டுதல் :-** நமதும் நம்மைச் சூழ்ந்துள்ள நம் சகோதரர்களினதும் விண்ணேற்றத்திற்காகச் செபித்தல்.

**3. மரியா மகிமை அடைகின்றார்.**

இறைமகனைக் கருத்தாங்க, "நான் ஆண்டவருடைய அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்." (லூக்: 1:38) என்று மரியா சம்மதம் தெரிவித்தது முதல் கிறிஸ்துவின் விண்ணேற்பு வரை பல்வேறுவிதமான அசாதாரண அனுபவங்களுக்கூடாக மரியா மீட்புத் திட்டத்தில் பங்கேற்றிருக்கின்றாள்.

1. கன்னியாகக் கருத்தாங்கியது.
2. எலிசபேத்தின் வாழ்த்துதலைக் கேட்டு பரவசமாகி இறை புகழ் பாடியது.
3. இயேசுவை - இறைமகனை மாட்டுத்தொழுவத்திலே ஈன்றெடுத்தது. (எந்த ஒரு பெண்ணுக்கும் ஏற்பட்டிராத அனுபவம்)
4. ஒரு வாரம்கூட ஆகாத குழந்தையைத் தூக்கிக்கொண்டு எகிப்துக்குத் தப்பியோடியது (மத்: 3:14-15).
5. யேசு எருசலேம் தேவாலயத்தில் காணிக்கையாக்கப்பட்டபோது (தூய்மைச் சடங்கின் வேளையில்) சிமியோனும் அன்னாவும் உரைத்த வார்த்தைகள் - ஆசிகள் கேட்டுப் பரவசமாகியது.
6. யேசுவுக்குப் 12 வயதானபோது ஜெருசலேம் தேவாலயத்தில் போதகர்களோடு விவாதித்த திறனைக் கண்டு வியந்தது. (லூக்: 2: 47-48)
7. "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?" (லூக்: 2: 48-49) எனக்கேட்டபோது ஏற்பட்ட உணர்வலைகள்.
8. யேசு நற்செய்திப் பணியில் ஈடுபட்டுப் பல்லாயிரக்கணக்கான மக்களை இறைவன்பால் ஈர்த்துக்கொண்ட செய்தி அறிந்து பூரித்தது.
9. ஜெருசலேம் நகருக்குள்ளே மக்கள் வாழ்த்துதல் முழங்க தாவீதின் குமாரனாக பட்டினப்பிரவேசம் செய்தபோது அக்களித்தது.
10. பாடுகளின்போது சிலுவையில் அறையப்பட்டு உயர்த்தப்பட்டபோது, உயிர்விட்டபோது ஏற்பட்ட சோக ஆழிப்பேரலைகளினால் தாக்கப்பட்டபோது.
11. கல்லறையைத் தகர்த்துக்கொண்டு சாவை வென்று உத்தானமானபோது அந்தத்தாய் பல்வேறு விதமான உணர்வலைகளுக்குள்ளால் போய் வந்திருக்கின்றாள்.

இவற்றிற்கெல்லாம் கொடுமுடியாக இருந்த உணர்வு மரியாளின் மகன் விண்ணேற்பு அடைந்ததுதான். விண்ணேற்பு அடைந்தது கிறிஸ்துதான். அவர் இறைவன், ஆண்டவர். ஆயினும் மரியாளின் மைந்தன் அவர். விண்ணேற்றம் அடைந்து மரியாளுக்கு மகிமை சேர்த்தார்.

**வேண்டுதல்:-** விண்ணேற்பை நாமும் சுவீகரித்துக்கொள்ள வரம்வேண்டி மரியாளிடம் இறைஞ்சுதல்.

**4. விண்ணேற்பு நமது விசுவாசத்துக்கு ஒரு வலுவூட்டல்**

யேசு நம்மை மீட்க வந்த இறை மகன். அடிமையின் கோலம் பூண்டு உலகிற்கு வந்த இறைவன். அவர் அறிவித்த நற்செய்தி, இறையரசின் வருகை, மனித இனம் முழுவதன் இலட்சியப் பயணம் இறையரசை நோக்கியதாக இருக்கவேண்டும் என்பதும் அதற்குத் தானே ஒரே வழியும் ஒளியும் என்பதே இந்த இறைமகனின் போதனை.

ஆனால் சாவுக்குட்பட்டுப்போன ஒரு மனிதன் எப்படி வழியாகவும் ஒளியாகவும் இருக்க முடியும்? இவர் போதித்த நற்செய்தியும் இறையரசும் நம்பிப் பின்பற்றக்கூடியவைதானா, சரியானவைதானா என அவரது சிலுவை மரணத்தைப் பார்த்து உலகம் தடுமாறிக்கொண்டிருந்தது.

மூன்றாம் நாள் அவர் சாவையே தளமாக்கி அதன்மேல் உயிர்த்த யேசுவாகத் தோன்றியபோது உலகு வியந்துபோயிற்று. இவர் பின்பற்றக்கூடிய மனிதர்தான். இவர் அறிவித்த நற்செய்தியும் இறையரசும் உயிர் உள்ளவைதான் என்று உலகு ஏற்றுக்கொண்டது.


இந்த நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்கும் வலுவூட்டுகின்றது அவரது விண்ணேற்பு. இறையரசு என்பது மெய். இறைவனின் இருத்தலும் 'இறையரசும் என்று இல்லாவிட்டால் யேசு விண்ணேற்பு அடைந்திருக்கமாட்டார் அல்லவா? வத்திக்கான் என்றதொரு நாடு - நியூயோர்க் என்று ஒரு நகரம் இல்லாவிட்டால் யாராவது அங்கு செல்லத்துணிவரோ? இல்லையே. யேசு விண்ணேற்பு அடைந்தார். அவர் வழி செல்லும் நாமும் விண்ணேற்பு அடைவோம். இது எமது விசுவாசம்.

**வேண்டுதல் :-** உலகம் காட்டுகின்ற உடல் சார்ந்த உவகைகளில் நாட்டம் கொள்ளாமல் ஆன்மீக நலன்களை நாடி விண்ணரசை அடைய வரம் வேண்டிச் செபித்தல்.

புனித பவுல் ஆண்டு மற்றும் நற்செய்தி அறிவிப்பு ஆண்டு
சிறப்புக் கட்டுரை

# நற்செய்தியின் தூதுவராவோம்

- அருள்பணியாளர் ஜோமிக்ஸ் -



## முன்னுரை

நம் ஆண்டவர் இயேசுவின் கட்டளையான "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற்கு 16: 15) என்னும் பணியை நிறைவேற்றுவதற்காகவே திருச்சபை இருக்கிறது; இயங்குகிறது. நாம் வாழும் இன்றைய நாட்களில் பற்பல முறைகளிலும் பல்வேறு விதங்களிலும் இந்த நற்செய்திப் பணியை திருச்சபை ஆற்றிட முயல்கிறது. ஏனெனில் திருச்சபையின் முதன்மையான பணி நற்செய்தியைப் பறைசாற்றுவதாகும்.

நற்செய்திப் பணி, கல்விப் பணி, மருத்துவப்பணி, சமூகப்பணி என்று திருச்சபையின் பணிகள் விரிகின்றன. ஆயினும் கலப்படம் இல்லாமல் முழு நேரமும் நற்செய்தியைப் பறைசாற்றும் பணித்திட்டங்களும் பணியாளர்களும் இன்று திருச்சபையில் அதிகம் இல்லை என்பது கவலைக்குரியது. நற்செய்தியைப் பறைசாற்றும் ஆர்வத்தை நாம் மீண்டும் கண்டுகொள்ளவும், நாம் அனைவரும் நற்செய்தியின் தூதுவர்களாய் திகழ உந்துதல பெறவும் திருத்தூதர் பவுலின் சிறப்பு யூபிலி ஆண்டு நமக்குத் தூண்டுதல் தரவேண்டும் என்று திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அழைப்பு விடுத்துள்ளார். "நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு!" (1 கொரி 9:16) எனவேதான், "நற்செய்திக்காக நான் ஒதுக்கிவைக்கப்பட்டவன்", (1கொரி 1:2) "நற்செய்தியை முன்னிட்டு நான் வெட்கப்படமாட்டேன்" (1 கொரி 1:16) என்றெல்லாம் எடுத்துரைத்த புனித பவுலின் வாழ்வில் நடந்த சில திருப்புமுனை நிகழ்வுகளிலிருந்து இன்று நாம் நற்செய்தித் தூதுவராகத் திகழ்வதற்குச் சில படிப்பினைகளை இங்கே காண்போம்.

## இயேசுவே முதன்மையான நற்செய்தி

நம் வீட்டின் அறைகளைத் தேடி வரும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் செய்தி இதழ்களிலும் வானொலியிலும் நற்செய்தி என்னும் பெயரில் பல கருத்துகள் வழங்கப்படுகின்றன. இறைவார்த்தையின் ஒளியில் இவற்றை ஆய்வு செய்து பார்ப்போமெனில் இவற்றுள் 90 விழுக்காடு நற்செய்திக்கு முரணானவை என்பது தெளிவாகும். இன்றைய நாட்களில் நற்செய்திப் பணி என்பது உலகின் பிற பணிகளைப்போல மதிப்புமிக்க தொழிலாகவும் நல்ல வருமானத்தை ஈட்டும் முதலீடாகவும் பலரால் பார்க்கப்படுகிறது. பவுல் கூறுவதைப் போன்று, "சிலர் பொறாமையும் போட்டி மனப்பான்மையும் கொண்டு கிறிஸ்துவை அறிவிக்கின்றனர். வேறு சிலர் நன்மனத்தோடு அறிவிக்கின்றனர்... மற்றவர்களோ கட்சி மனப்பான்மையால் தூண்டப்பட்டு கிறிஸ்துவை அறிவிக்கின்றனர். அவர்களது நோக்கம் தூய்மையானது அல்ல" (பிலி. 1:15-17) அவர்களது நோக்கம் போலியாக அல்லது உண்மையாக இருக்கலாம். ஆயினும் இத்தகைய குறைபாடுகளுக்கு நடுவிலும் நற்செய்தியாகிய கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார் என்கிற நற்செய்தி மட்டுமே மகிழ்ச்சியைத் தருகிறது (காண்க பிலி 1: 18).

## அப்படியாயின் எது உண்மை நற்செய்தி?

திருத்தூதர் பவுல் கலாத்தியர் சபையில் நற்செய்தியை அறிவித்து வந்தபிறகு வேறொருவர் அதனைக் குழப்பிவிட்டார். ஆகவே நற்செய்தி அல்லாத நற்செய்தியை ஏற்றுக்கொண்ட கலாத்தியரை, "கிறிஸ்துவின் பொருட்டு அருள்கூர்ந்து உங்களை அழைத்த அவரை விட்டுவிட்டு இவ்வளவு குறுகிய காலத்தில் வேறொரு நற்செய்தியை ஏற்றுக்கொண்டு விட்டீர்களே! எனக்கே வியப்பாய் இருக்கிறது. வேறொரு நற்செய்தி இருக்கிறது என்று நான் சொல்ல வரவில்லை. மாறாகச் சிலர் உங்கள் மனத்தைக் குழப்பிக் கிறிஸ்துவின் நற்செய்தியைத் திருத்திக்கூற விரும்புகின்றனர் என்பதுதான் உண்மை" (கலா 1:6-8) என்று சொல்கிறார். மேலும் "அறிவிலிகளான கலாத்தியரே, உங்களை மயக்கியோர் யார்? இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டவராய் உங்கள் கண்முன் படம்பிடித்துக் காட்டப்படவில்லையா?.." (கலா 3:1) என்றும் கேள்விகள் எழுப்புகிறார்.

ஆகவே பிற இனத்தவர்களின் திருத்தூதரான புனித பவுலின் போதனையில் நற்செய்தி என்பது குழப்பப்படாமல் தெளிவான ஒன்றாக பறைசாற்றப்பட்டிருக்கிறது என்பது புலனாகிறது. "நான் பெற்றுக்கொண்டதும் முதன்மையானது எனக் கருதி உங்களிடம் ஒப்படைத்ததும் இதுவே. மறைநூலில் எழுதியுள்ளவாறு கிரிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து அடக்கம் செய்யப்பட்டார். மறைநூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார்." (1கொரி 15:3-4) இங்கே பவுலின் எழுத்துக்களில் ஆண்டவரிடம் இருந்தும் திருச்சபைச் சமூகத்திலிருந்தும் 'நற்செய்தியை' தாம் பெற்றுக்கொண்டதாகப் பவுல் குறிப்பிடுகிறார்.

இந்த நற்செய்தி தன்னுடைய படிப்பினாலோ, அறிவினாலோ, கற்பனையினாலோ உருவான ஒன்று அல்ல என்பதைத் தெளிவாக்குகிறார். மேலும் இவ்வாறு பற்பல செய்திகளை தான் பல மூலங்களிலிருந்து பெற்றுக்கொண்டிருந்தாலும் அவற்றுள் முதன்மையானது இயேசுவைப் பற்றிய இந்நற்செய்தியே என்று இயம்புவது இவண் கருத்தூன்றிப் பார்க்க வேண்டிய ஒன்று. அதாவது கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து அடக்கம் செய்யப்பட்டு மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டதே நற்செய்தி என்பது பவுலின் ஆழமான நம்பிக்கையாகும். இந்த அடிப்படை உண்மையிலிருந்து மாறுபட்ட அனைத்தும் இரண்டாம் தரமானதும் திசைதிருப்புவதுமான செய்திகள். அவை நற்செய்தி என்று சொல்லப்படத் தகுதியற்றவை என்பதே பவுலின் கருத்து.

பிரச்சினைகள் நிறைந்த கொரிந்து திருச்சபைக்குக் கடிதங்கள் மூலமாகத் தமது போதனையைப் பவுல் தொடர்ந்தார். "நான் உங்களிடையே இருந்தபோது மெசியாவாகிய இயேசுவைத் தவிர அதுவும் சிலுவையில் அறையப்பட்ட அவரைத் தவிர, வேறு எதையும் அறிய வேண்டும் என்று நினைக்கவில்லை" என்கிறார் (1கொரி 2:2) இந்தச் செய்தியைவிட்டு திருத்தூதர் பவுல் தடம் புரண்டதில்லை.

## தூய ஆவியாருக்குக் கீழ்ப்படியும் பணி

ஆண்டவராகிய இயேசுவே நற்செய்தி என்பதை ஆழமாகப் பவுல் உணர்ந்திருந்தார். அந்த ஆண்டவர் இப்பொழுது தூய ஆவியானவர் வடிவில் தம்மை ஆட்கொள்வதாகவும் இயக்குவதாகவும் அவர் நம்பினார் (காண்க 2கொரி 3:17). எனவே ஆண்டவரின் பணியான இந்நற்செய்திப் பணியை ஆவியாரின் இயக்கத்தினாலேயே செய்தல் வேண்டும் என்று அவர் உறுதிப்பட எழுதினார் (காண்க உரோ 8:1-17). பவுல் தமது பணி வாழ்வின் பல கட்டங்களில் தூய ஆவியானவருக்குக் கீழ்ப்படிவதையும் தூய ஆவியாரால் வழிநடத்தப்படுவதையும் காணலாம். மிகவும் குறிப்பாகத் திருத்தூதர் பணிகள் நூலில், "பின்பு ஆசியாவில் இறைவார்த்தையை அறிவிக்காதவாறு தூய ஆவியார் தடுக்கவே அவர்கள் பிரிகிய, கலாத்தியப் பகுதிகளைக் கடந்து சென்றனர். அவர்கள் மீசியா அருகே வந்து பித்தினியாவுக்குச் செல்ல முயன்றபோது இயேசுவின் ஆவியார் அவர்களை அங்கு போகவிடவில்லை" (திப 16:6) என்று அறிகிறோம்.

ஆகவே பவுலைப் பொறுத்த மட்டில் நற்செய்திப் பணி என்பது நம் மனம்போன போக்கிலே கால் போன போக்கிலே செய்கிற பணிகளாய் இருக்கமுடியாது. நற்செய்திப்பணி என்பது கடவுளின் பணி, அது ஒரு திருப்பணி. இப்பணிக்கு நாம் நம்மைத் தயாரிக்க வேண்டும், தூய ஆவியாருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

## தூய ஆவியாரைத் தேர்ந்து தெளியும் கலை

திருத்தூதர் பவுல் தம் திருமுகங்களில் தூய ஆவி அருளும் வாழ்வு பற்றியும் தூய ஆவிக்கு இணைங்கி நடத்தல் பற்றியும் பல இடங்களில் விரிவாகக் குறிப்பிடுகிறார் (காண்க உரோ 8:1-26). திருத்தூதர் பணிகள் நூலில் புனித பவுல் ஆவியாரால் வழிநடத்தப்படுகிற நிகழ்வுகள் நிறையச் சொல்லப்பட்டுள்ளன (காண்க. திப 16:1-15; 19:1-10) ஆயினும் ஒரே ஒரு நிகழ்வை நான் இங்கே எடுத்துக்காட்டாய் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். பவுல் தமது மூன்றாவது நற்செய்திப் பயணத்தை வெற்றிகரமாய் முடித்துவிட்டு எருசலேம் செல்ல முடிவெடுக்கிறார். எனவே கப்பலில் பயணமாகி எபேசு நகர் அருகிலுள்ள மிலேத்து என்ற துறைமுகத்தை அடைந்தார். அங்கே எபேசு நகர மூப்பர்களை வரவழைத்து அவர்களிடம் பிரியாவிடை பெற்றார். அந்தப் பிரியாவிடையில் கடந்த பத்து ஆண்டுகளில் அவர் பணியாற்றிய விதம் பற்றியும் அதன் மேன்மையான முறைகள் பற்றியும் தெளிவுற எடுத்துரைக்கிறார். மேலும் ஒரு மேய்ப்பருக்கு உரிய கரிசனையோடு தமது கவலையையும் அவர்களிடம் பகிர்ந்துகொள்கிறார் (காண்க திப 20: 17-38) பின்னரே அங்கிருந்து எருசலேமுக்குப் புறப்படுகிறார். அவ்வாறு எருசலேமுக்குச் செல்லும் வழியில் செசரியாவில் திருத்தொண்டர் பிலிப்புவின் வீட்டில் உடன் பணியாளர்களுடன் சில நாட்கள் தங்குகிறார். அங்கே இறைவாக்கு உரைக்கின்ற பிலிப்புவின் நான்கு பெண் மக்கள் மற்றும் அவ்விடத்தாருடன் இணைந்து பவுல் இறைவேண்டலில் ஈடுபட்டிருந்தார். அப்போது யூதேயாவிலிருந்து அகபு என்னும் இறைவாக்கினர் அங்கு வந்து சேர்கிறார். அவர் இறைவாக்கினருக்கே உரிய அடையாளச் செயல் தோரணையில் பவுலின் இடைக்கச்சையை எடுத்து தம் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு, "இந்தக் கச்சைக்கு உரியவரை எருசலேமில் யூதர்கள் இவ்வாறு கட்டி பிற இனத்தவரிடம் ஒப்புவிப்பார்கள். தூய ஆவியார் தாமே இப்படிக் கூறுகிறர்." என்று எடுத்துரைக்கிறார். இதைக்கேட்ட அங்குள்ள அனைவரும் அழுது கெஞ்சி பவுலின் உள்ளத்தை சுக்குநூறாய் உடைத்து எருசலேமுக்கு செல்ல வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறார்கள். ஏனெனில் தூயூ ஆவியானவர் வழியாக தாங்கள் இச்செய்தியை முன்னதாகவே இறைவாக்காகப் பெற்றுக்கொண்டதாகப் பவுலிடம் வலியுறுத்தினார்கள் (காண்க திப 21: 8-15).

அழுகையும் கெஞ்சுதலும் புலம்பலும் பவுலின் உள்ளத்தை உடைத்துப்போட முயன்றன. ஆனால் பவுலின் உறுதியை உடைத்துப்போட அவர்களால் முடியவில்லை. அழுகை, கெஞ்சல், புலம்பல் இவைகளுக்கு நடுவிலும் "தூய ஆவியார்தாமே இப்படிக் கூறுகிறார்" என்கின்ற அழுத்தமான கூற்றுக்கு நடுவிலும் மாறுபட்ட முடிவை பவுல் எடுக்கிறார். இந்த இடத்தில்தான் தூய ஆவியாரின் வழிநடத்தலுக்குத் தேர்ந்து தெளிவது எப்படி என்கிற கலையை புனித பவுலிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளுகிறோம்.

"ஆண்டவர் இயேசுவின் பெயருக்காக நான் கஸ்ரப்படுவதற்கு மட்டுமல்ல சாவதற்கும் தயார்" என்று பவுல் தெளிவுபட எடுத்துரைக்கிறார் (திப 21:16-17). இயேசுவுக்காக இறப்பதற்கும்கூட தயாராக இருக்கும் தமக்குச் சங்கிலிகளும் சிறைச்சாலைகளும் துன்பங்களும் ஒரு பொருட்டு அல்ல என்று அவர் கருதினார். இறை அழைப்பைப் பெற்றபொழுதே பவுல் ஆற்ற வேண்டிய பணிகள் பற்றிய தொலைநோக்குப் பார்வை தெளிவுபடுத்தப்பட்டது. அந்த இறைவாக்கில் எதிர்காலத்தில் பவுல் துன்புற வேண்டும் என்று முன்னுரைக்கப்பட்டது (காண்க. திப 9:15-160). ஆகவேதான் இறைவேண்டலில் கண்டுபிடித்து தனக்கு எருசலேமில் நிகழப்போவதாகச் சொன்ன சிறை வாழ்வு, தூய ஆவியாரால் ஏற்கெனவே வெளிப்படுத்தப்பட்ட தனது இலட்சியப் பயணத்தைத் தடுத்துவிடமுடியாது என்று பவுல் உறுதிபட நம்பினார். என்னே அவரது ஞானம்! ஆதலின் எருசலேமுக்குச் சென்றால் தாம் கைது செய்யப்படக்கூடும் என்பதை இறைவாக்காக முன்னறிந்திருந்தும் இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காக (அரசருக்கு முன்பாக நிற்கவும் துன்பங்கள் வழி சான்று பகரவும்) எருசலேமுக்குத் துணிவுடன் பயணம் மேற்கொள்கிறார். இந்த இக்கட்டான சூழலில் பவுலை யாராலும் இணங்கவைக்க முடியாது போயிற்று. ஏனெனில் அவர் தூய ஆவியாரை மிகச் சரியாகத் தேர்ந்து தெளிந்தார்.

## நிறைவாக

தமஸ்கு நகர் சாலையில் பேரொளியால் சூழப்பட்டு உயிர்த்த ஆண்டவரின் அனுபவம் பெற்று மனம் மாறி இறை அழைப்பை ஏற்றுக்கொண்டபோது பவுலுக்குத் திருமுழுக்கு வழங்கிய அனனியா பின்வருமாறு இறைவாக்கு உரைத்திருந்தார். அந்த இறைவாக்கு அவரது வாழ்வின் இலட்சியமாயும் தொலைநோக்குத் திட்டமாயும் அமைந்திருந்தது. "பவுல் பிற இனத்தவருக்கும் அரசருக்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் முன்பாக எனது பெயரை எடுத்துச் சொல்ல நான் தேர்ந்தெடுத்துக்கொண்ட கருவி. என் பெயரின் பொருட்டு அவர் எத்துணைத் துன்புற வேண்டும் என்பதை நான் அவருக்கு எடுத்துக்காட்டுவேன்" (திப 9:15). இந்த இறைவாக்கைத் தமது வாழ்வின் இலட்சியமாகவே புனித பவுல் கொண்டிருந்தார். ஆகவே இந்த முழுமையான பார்வையிலிருந்து அவர் ஒருபொழுதும் பின்வாங்கவில்லை. தாம் தூய ஆவியாரால் இயக்கப்படுவதை அனுபவமாகவும் தன் வாழ்க்கைப் பயணத்தின் தொலை நோக்கை கண் முன்னும் கொண்டிருந்த பவுலைப்போன்று நாமும் நற்செய்தியின் தூதுவர்களாகச் சான்று பகர்ந்து வாழ்வோம்.

(நன்றி - தோழன் செப்ரம்பர் 2008)

---

## சமுதாயத்தின் ....4ம் பக்கத் தொடர்ச்சி

நிகழ்வுகள் அனைத்தும் உரைகளாக அமையாது இளைஞர்களைக் கவரக்கூடிய வகையில் விளையாட்டுகள், வினாவிடைகள் மற்றும் நடிப்புகள் ஊடாக அமைந்திருந்தன. நிகழ்வுகளின் இறுதியில் இடம்பெற்ற மீளாய்வில் பல இளைஞர்கள் முன்வந்து இந்நிகழ்வை வரவேற்று தமது கருத்துக்களை முன்வைத்தனர். இக்கருத்தமர்வுக்கு முந்திய நாளான 12ம் திகதி மாலை மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் நிர்வாக உறுப்பினர்களுக்கான மாதாந்தக் கூட்டமும் இடம்பெற்றது. இவ்விருநாள் நிகழ்வுகளையும் மன்னார் பேராலயப் பங்கு இளைஞர் ஒன்றியத்தின் ஆதரவில் பங்குத்தந்தை அருட்பணி. எஸ். கே. தேவராஜா கொடுதோர் அவர்களும் உதவிப்பங்குத் தந்தை அருட்பணி. றொக்ஸன் குரூஸ் அடிகளாரும் ஒழுங்குசெய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

*தகவல் : செல்வி கவிதா சேனாதிறாஜா, மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுச் செயலாளர் - வவுனியா.*

---

## நெற்றிக் கண் ...4ம் பக்கத் தொடர்

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் மன்னார் மாவட்டம் முழுவதும் மின்சாரம் வழங்கவென நீர்வலு மின்சாரத் திட்டம் மன்னாரில் அமுல் செய்யப்பட்டது. அப்போது மதவாச்சியிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் மின்கோபுரங்களுடன் இணைத்து மன்னாருக்கு மட்டும் முதலில் மின்சாரம் வழங்கப்பட்டது. மதவாச்சிக் கோபுரத்திலிருந்து இணைப்புப் பெறாமல் வவுனியா கோபுரத்தின் மூலம் மன்னாருக்கு இணைப்பு வழங்கப்பட்டது. இக்கோபுரங்கள் அனைத்தும் காட்டு வழியாகவும், கடல் வழியாகவும் அமைக்கப்பட்டன. இதனால் துருப்பிடித்துக் கோபுரங்களும் கம்பிகளும் செயல் இழந்தன. இந்த வேலைகளைப் பொறுப்பேற்ற ஒப்பந்தக்காரர்களின் 'தரகு முறை'யால் இவை வேகமாகப் பழுதுபட்டன. இதன் விளைவாக கோபுரங்கள் அடிக்கடி முறிந்து வீழ்வது கம்பிகள் உடைவது என்பன நாளாந்த சம்பவங்கள் ஆகிவிட்டன.

அதுமட்டுமல்ல மாவட்டம் முழுதும் நிறைந்துள்ள இராணுவம் மற்றும் கடற்படையினர் போன்றோர் தங்கள் தேவைக்காக எவ்வித முன்னறிவித்தலும் இன்றி பெறும் மின்சாரம், பொது மக்கள் பெற்றுவரும் கள்ள மின்சாரம் போன்றவற்றின் விளைவாக அடிக்கடி மின்தடங்கல் ஏற்படுகின்றன. மன்னார் மின்சார - சபையில் ஆளணி மற்றும் வாகனங்களுக்கான பற்றாக்குறை நிலவுகிறது. அத்துடன் சகலவற்றிற்கும் வவுனியாவிடம் கையேந்தும் நிலையே காணப்படுகின்றது. இதில் இருந்து மீட்சிபெற முடியாதா? நம்மைக் காப்பாற்ற ஒரு இரட்சகர் வரமாட்டாரா? அல்லது இதுதான் மன்னார் மக்களின் சாபக்கேடா?

# ஆயர் பேரவை -12வது பொது அமர்வு

# SINOD OF BISHOPS - XII ORDNARY GENERAL ASSEMLY

# திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் இறைவார்த்தை

# The word of God in the Life and Mission of the Church

ஆயர் பேரவையின் நிறைவில் வெளியிடப்பட்ட செய்தி

## செய்தி – Message

தமிழாக்கம்
அருட்சகோதரி கனிசியஸ் (தி.கு)

சகோதர சகோதரிகளே,

"தந்தையாகிய கடவுளிடமிருந்தும் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவிடமிருந்தும் நம்பிக்கையோடுகூடிய அன்பும் அமைதியும் உங்கள் அனைவருக்கும் உரித்தாகுக. நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின்மீது அழியாத அன்புகொண்டிருக்கும் அனைவரோடும் அருள் இருப்பதாக" (எபேசி 6:23-24). இந்த வார்த்தைகளோடே மாநாட்டுத் தந்தையர்களாகிய நாம் 12வது ஆயர்கள் மாநாட்டிற்காக திருத்தந்தை 16வது பெனடிக்ற் அவர்களின் வழிகாட்டலின்கீழ் உரோமாபுரியில் ஒன்றுகூடினோம். இச்செய்தியானது உலகின் பல்வேறுபட்ட பகுதிகளிலும் வாழும் கிறிஸ்துவின் சீடர்களுக்கும் தொடர்ந்து அவரை அன்பு செய்பவர்களுக்கும் விடுக்கப்பட்ட செய்தியாகும்.

இறைவார்த்தையின் குரலையும், ஒளியையும் நாம் மீண்டும் ஒரு தடவை உங்கள்முன் வைக்கின்றோம். இதன் மூலம் முற்கால அழைப்பை மீண்டும் உங்களுக்கு விடுக்கின்றோம். "நீ அதை நிறைவேற்றுமாறு வார்த்தை உனக்கு மிக அருகில் உள்ளது. உன் வாயில், உன் இதயத்தில் உள்ளது. (இ. ச..30:14) இறைவன் ஒவ்வொருவருக்கும் கூறுவது, "மானிடா! நான் உனக்குக் கூறும் சொற்களையெல்லாம் செவிகொடுத்துக் கேட்டு உன் இதயத்தில் பதித்துக்கொள்" (எசே.3:10). நான்கு அம்சங்களை உள்ளடக்கியதான ஒரு ஆன்மீகப் பயணத்தை உங்கள்முன் வைக்க நாம் விரும்புகின்றோம். அது எம்மை எல்லாவிதமான வாழ்வுக்கும் இட்டுச்செல்லும். அவ்வாறே இறைவனின் எல்லையற்ற இயல்பை எமது இல்லங்களுக்கு, எமது தெருக்களுக்கு, எமது நகரங்களுக்குக் கொண்டுசெல்ல வேண்டும்.

### 1. வார்த்தையின் குரல் : இறைவெளிப்பாடு

1. "நெருப்பிலிருந்து ஆண்டவர் உங்களோடு பேசினார். பேச்சு ஒலியை நீங்கள் கேட்டீர்கள். உருவம் எதையும் காணவில்லை குரல் மட்டும் கேட்டது (இ.ச. 4:12). சீனாய் பாலைவனத்தில் இஸ்ராயேல் மக்கள் வாழ்ந்த கசப்பான தனிமை அனுபவத்தைப் பற்றி மோசே குறிப்பிடுகிறார். இறைவன் பொன் கன்றுகுட்டியை ஒத்ததான ஒரு விக்கிரகமாகவோ அன்றேல் ஒரு உருவமைப்பாகவோ அன்றேல் ஒரு சிலையாகவோ தன்னை வெளிப்படுத்தவில்லை. மாறாக வார்த்தையின் குரலாக வெளிப்படுத்தினார். இந்தக் குரலே உலக படைப்பின் ஆரம்பத்தில் ஒன்றுமில்லாமையின் அமைதியை ஊடறுத்துச் சென்றது. "அப்பொழுது கடவுள் ஒளி தோன்றுக என்றார். ஒளி தோன்றிற்று தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. அவ்வாக்கு க்டவுளாயும் இருந்தது. வாக்கு என்னும் அவரே தொடக்கத்தில் கடவுளோடு இருந்தார். அனைத்தும் அவரால் உண்டாயிற்று. உண்டான எதுவும் அவரால் அன்றி உண்டாகவில்லை (தொ 1:1-3 யோவான் 1:1-3).

மெசப்போத்தேமிய புராணக்கதைகளில் கூறப்பட்டிருப்பது போல தெய்வங்களிடையே நடைபெற்ற போராட்டத்தின் நிமித்தம் படைப்புத் தோன்றவில்லை. மாறாக ஒன்றுமில்லாமையைத் தோற்கடித்து படைப்புக்களை உருவாக்கிய வார்த்தையால் அது உண்டாக்கப்பட்டது. திருப்பாடல் ஆசிரியர் கூறுவது, "ஆண்டவரது வாக்கினால் வானங்கள் உண்டாயின. அவரது சொல்லின் ஆற்றலால் வான் கோல்கள் எல்லாம் உருவாகின.... அவர் சொல்லில் உலகம் உண்டானது. அவர் கட்டளையிட அது நிலைபெற்றது (தி.பா. 33:1-9). புனித பவுல் மீண்டும் கூறுவது, "இறந்தவர்களை வாழ்விப்பவரும் இல்லாததைத் தம் வார்த்தையால் இருக்கச் செய்பவருமாகிய கடவுள்" (உரோ. 4:17) இதனால் ஒரு முதலாவது "பிரபஞ்ச" வெளிப்பாடு கண்டறியப்பட்டது. இது மனுக்குலம் அனைத்திற்கும் முன்பே படைக்கப்பட்ட படைப்பை ஒத்தது. இதன்மூலம் படைக்கின்றவரின் செய்தியை நாம் வாசிக்கலாம். "ஒவ்வொரு பகலும் அடுத்த பகலுக்கு அச்செய்தியை அறிவிக்கிறது. ஒவ்வோர் இரவும் அடுத்த இரவுக்கு அதைப்பற்றிய அறிவை வழங்குகின்றது. அவற்றுக்குச் சொல்லுமில்லை, பேச்சுமில்லை. அவற்றின் குரல் செவியில் படுவதுமில்லை" (தி.பா.19: 2-5).

2. எவ்வாறாயினும் தெய்வீக வார்த்தை *மனித வரலாற்றின* ஆரம்பத்தில் இருந்தது. "இறைவன் தனது சாயலாகப் தொ. நூ.1:27) படைத்த மற்றும் இறைவனின் சாயலைத் தம்முள்ளே கொண்டிருந்த ஆணும், பெண்ணும் தம்மைப் படைத்தவருடன் உரையாடலை மேற்கொள்ள முடியும். அன்றேல் பாவத்தின் மூலம் அவரை விட்டுத் தூர விலகி அலைந்து திரியவும் முடியும். அப்பொழுது இறைவார்த்தை தனது கதைகள், நிகழ்வுகளுடன் வரலாற்றை ஊடுருவிச் சென்று பாதுகாத்து மதிப்பளிக்கிறது. "எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன். அடிமை வேலை வாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன். ஆம், அவர்களின் துயரங்களை நான் அறிவேன். எனவே எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும் அந்நாட்டிலிருந்து பாலும், தேனும் பொழியும் நல்ல பரந்ததோர் நாட்டிற்கு அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கி வந்துள்ளேன்" (வி.ப.3:7-8). ஆகவே வரலாற்று இறைவனின் செயற்பாடுகள் ஊடாகத் தெய்வீகம் மானிட நிகழ்வுகளில் பிரசன்னமாயிருப்பதோடு மீட்பின் மாபெரும் திட்டத்திற்குட்படுத்தப் பட்டுள்ளது. "எல்லா மனிதரும் மீட்புப் பெறவும் உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென அவர் விரும்புகின்றார்." (1திமோ.2:4).

3. முக்கியமாக சக்தி வாய்ந்த, படைப்பாற்றல் மிக்க, மீட்பின் தெய்வீக வார்த்தையானது படைப்பு மீட்பு ஆகியவற்றின் இருத்தலினதும் வரலாற்றினதும் ஊற்றாக உள்ளது. பின்வரும் வார்த்தைகளைக்கூறி இறைவன் மனுக்குலத்தை சந்திக்கிறார். "ஆண்டவராகிய நான் உரைத்தேன், நானே இதைச் செய்தேன்" (எசே. 37:14) பின்னர் இறைவார்த்தை எழுத்துருப்பெற்றது. புதிய ஏற்பாட்டில் கூறியுள்ளதுபோன்று திருவிவிலியமாக உருப்பெற்றது. "மோசே சீனாய் மலையிலிருந்து இறங்கி வந்தார். முன்பின் இருபுறமும் எழுதப்பட்ட உடன்படிக்கைப் பலகைகள் இரண்டும் அவர் கையில் இருந்தன. அப்பலகைகள் கடவுளால் செய்யப்பட்டவை. பலகைகள்மேல் பொறிக்கப்பட்டிருந்த எழுத்தும் கடவுள் எழுதியதே (வி.ப.32:15-16). இவற்றை மீண்டும் எழுதிப் பாதுகாத்து வைப்பதற்கு மோசே இஸ்ராயேல் மக்களுக்கு உதவி புரிந்தார். "அக்கறகளின்மீது இத்திருச்சட்டத்தின் அனைத்து வார்த்தைகளையும் மிகத்தெளிவாக எழுதி வையுங்கள்." (இ.ச.27:8)

திருவிவிலியம் எழுத்துருவில் தெய்வீக வார்த்தைக்குச் சான்று பகர்கின்றது. அவை சட்டம், வரலாறு, இலக்கியம் போன்ற வழிகள் மூலம் ஆக்க சக்தி மிக்க, பாதுகாப்பான இறைவெளிப்பாட்டு நிகழ்வுகளை நினைவுபடுத்திக்கொள்கிறது. ஆகவே இறைவார்த்தையானது, "இறைவனால் தூண்டுதல் பெற்றதும் சக்திமிக்க தெய்வீக வார்த்தையைக் கொண்டுள்ளதுமான வேதாகமத்திற்கு அப்பால் கடந்து செல்கிறது (2 திமொ. 3:16). இதனால்தான் எமது விசுவாசம் ஒரு புத்தகத்தை மையமாகக் கொண்டிருக்கவில்லை. மாறாக இது மீட்பின் வரலாற்றிலும் இயேசுக்கிறிஸ்து என்னும் ஆளிலும் நாம் காண்பதுபோல் இறைவார்த்தை மனுவுருத்தாங்கியவரில் நிலைகொண்டுள்ளது. இறைவார்த்தையின் சக்தியானது திட்டமான விதத்தில் வேதாகமத்திற்கு அப்பால் தழுவப்பட்டு விரிவாக்கப்படுவதால் தூய ஆவியின் தொடர்ச்சியான பிரசன்னம் "முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்தும்" (யோவான்16:13) திருவிவிலியத்தை வாசிப்பவர்களுக்கு இந்த உண்மை அவசியம். இது மாபெரும் பரம்பரை வழக்கம். திருச்சபையில் சக்திமிக்க பிரசன்னமாயிருப்பவரும் திருவிவிலியத்தின் பாதுகாவலருமான உண்மையின் ஆவியானவர் திருச்சபை ஆசிரியத்துவத்தினால் விளக்கம் அளித்தார். இந்தப் பரம்பரை வழக்கம் இறைவார்த்தையை விளங்கிக்கொள்ள, அர்த்தம் சொல்ல, தொடர்புகொள்ள, சான்றுபகர திருச்சபைக்கு சக்தி கொடுக்கின்றது. புனித பவுல் ஆதிக்கிறிஸ்தவர்களின் மதக்கோட்பாட்டைப் பறைசாற்றியதன் மூலம் பரம்பரை வழக்கத்திலிருந்து (மரபுகளிலிருந்து) அவர் பெற்றுக்கொண்டதை ஏனையவர்களுக்கு அளிப்பதன் தேவையை உணர்த்தினார் (1கொரி. 15:3-5).

### II. வார்த்தையின் திருமுகம் : இயேசுக்கிறிஸ்து

4. கிரேக்க மூலத்தில் மூன்று அடிப்படை வார்த்தைகள் (Logos sarx egheneto) மட்டுமே உள்ளன. "வார்த்தை மனுவுரு ஆனார்" யோவான் நற்செய்தியின் முன்னுரையான இது அந்தக் கவிதையினதும், இறையியலினதும் உச்சக்கட்டம் மட்டுமல்ல, (யோவா1:14) மாறாக இதுவே கிறிஸ்தவ விசுவாசத்தின் மையமாகவும் இருக்கின்றது. நித்தியமானதும் தெய்வீகமானது - மான வார்த்தை இடைவெளி, நேரம் ஆகியவற்றிற்குள் பிரவேசித்து ஒரு மானிட முகத்தோற்றத்தையும் அடையாளத்தையும் எடுக்கும். இதன் மூலம் ஜெருசலேமில் கிரேக்க குழு செய்ததுபோன்று அவரை நேரடியாக அணுகிக் கேட்பது அமையும். "இயேசுவைக் காண விரும்புகின்றோம்" (யோவா 12:20-21). முகமில்லாத வார்த்தை நிறைவற்றது. தனது தேடலின் பாதையின் முடிவில் யோபு கூறியதுபோன்று, அவர்கள் தம்மைச் சந்திப்பவரை முழுமையாகக் கண்டறிவதில்லை: உம்மைப்பற்றி காதால் மட்டுமே கேள்விப்பட்டேன். ஆனால் இப்பொழுது என் கண்களே உம்மைக் காண்கின்றன (யோபு 42:5).

கிறிஸ்து என்னும் "வாக்கு கடவுளோடு இருந்தார். அவ்வாக்கே கடவுள் (யோவா1:1). "அவர் கட்புலனாகாத கடவுளின் சாயல். படைப்பனைத்தினதும் தலைப்பேறு" (கொலோ 1:15). ஆனால் அவர் உரோமானிய அரசாட்சியில் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட மாகாணத்தின் தெருக்களில் நடந்துசென்றார். சாதாரண உள்ளூர் மக்களின் மொழியைப் பேசினார். யூத மக்களது விசேட குணங்களையும் கலாச்சாரத்தையும் வெளிப்படுத்தினார். ஆகவே உண்மையான இயேசுக்கிறிஸ்து சாவுக்குரிய உடலைக் - கொண்டவர். அவர் வரலாறும் மனுக்குலமும் ஆனவர். ஆனால் அவரே மகிமை, தெய்வீகம், மறைபொருள். "கடவுளை யாரும் என்றுமே கண்டதில்லை. தந்தையின் நெஞ்சத்திற்கு நெருக்கமானவரும் கடவுள் தன்மை கொண்டவருமான ஒரே மகனே அவரை வெளிப்படுத்தியுள்ளார்." (யோவா1:18). கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட இறந்த உடலில் இறைமகன் தொடர்ந்து இருந்தாலும் இந்த உண்மைக்குரிய உயிருள்ளதும் தெளிவானதுமான நிருபணமாயிருப்பது அவரது உயிர்ப்பே.

5. கிறிஸ்தவ பாரம்பரியமானது மனுவுருவான தெய்வீக வார்த்தையை அதே வார்த்தையால் உருவாக்கப்பட்ட புத்தகத்திற்கு சமாந்தரமாய் வைக்கின்றது. இறைமகன் தூய ஆவியினால் கன்னிமரியிடம் மனுவானார் என்று கூறும்பொழுது அது இறைவாக்கினரால் முன்மொழியப்பட்ட அதே ஆவி என்று விசுவாசப்பிரமாணத்தில் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இறைமகனின் திரு உடலே எமக்கு அனுப்பப்பட்ட திருவிவிலியம் என்று 2ம் வத்திக்கான் சங்கம் எடுத்துக்கூறி இந்த முன்னைய பாரம்பரியத்தை ஒன்றிணைக்கிறது. புனித அம்றோசியார் தெளிவாகக் கூறி உறுதிப்படுத்துவது போன்று (In Lucam VI 33) மானிட மொழியில் வெளிப்படுத்தப்பட்ட இறைவனின் வார்த்தைகள் மனித வார்த்தைகளைப் போன்றும், நித்திய தந்தையின் வார்த்தைகளைப் போன்றும் ஆயின. மனித பலவீனம் கொண்ட உடலை அவர் எடுத்தபோது அனைத்திலும் மனிதரைப்போல் ஆனார். (DV.13).


(தொடரும்)

## கிறிஸ்தவர்களும் இந்துக்களும் ........

7ம் பக்கத் தொடர்ச்சி

3. இதனாலேயே இந்த உலகில் அதிகளவு வன்செயல்கள் காணப்படுகின்றன. அதிகளவு அநீதி காணப்படுகின்றன. ஆகவே அதிகளவு அன்பைக் கடைப்பிடிக்காவிடில் அதிகளவு நன்மைகளைச் செயற்படுத்தாவிட்டால் இந்த நிலைமைகளை நாம் மேற்கொள்ள முடியாது என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறியுள்ளார். இந்த அதிகளவு என்பது இறைவனிடமிருந்து வருகின்றது. எனவே இறைவனின் இரக்கத்தால் உலகிலுள்ள தீமையை நன்மையாக மாற்ற முடியும். ஆயினும் சிறியதும் முடிவானதுமான உலகமாகிய மனித இதயத்தில் இருந்தே இது தொடங்குகின்றது என்பதையும் நாம் இனம்காண வேண்டும். மலைப்பொழிவில் கிறிஸ்து தம் சீடருக்குக் கூறிய, "உங்கள் பகைவரை அன்பு செய்யுங்கள், உங்களை வெறுப்பவர்களுக் - காகச் செபியுங்கள், உங்களுக்குத் தீமை செய்தவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை ஒரு கல் தொலை வரக் கட்டாயப்படுத்துபவரோடு இரு கல் தொலை செல்லுங்கள்" இது கிறிஸ்தவர்களுக்குரியது. (மத் 5)

4. இந்துப் பாரம்பரியத்தில் அகிம்சை என்பது மிகவும் முக்கிய படிப்பினையாக உள்ளது. இந்தியாவின் தந்தையான மகாத்மா காந்தி மனித குலத்திற்கு ஆற்றிய பல்வேறுபட்ட சேவை - களுக்காக உலகெங்கிலும் உள்ள மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டார். சுதந்திரத்திற்காக அவர் போராடிய போது, 'கண்ணுக்குக் கண்' எனில் விரைவில் முழு உலகமும் குருடாகும் என்பதை அவர் உணர்ந்தார். அவரது வாழ்க்கை முழுவதும் அவர் மற்றவர்களிடம்



அகிம்சையை அறிமுகப்படுத்தினார். அவர் அகிம்சைக்கு மாதிரியாகத் திகழ்ந்தார். அவர் வன்செயலில் ஈடுபட மறுத்ததனால் தனது உயிரை இழந்து எமக்கு மாதிரி காட்டினார்.

5. வன்செயல் என்பது வெறுமனே ஒரு நடவடிக்கையல்ல. மாறாக இறைவனின் அன்பிலும் வல்லமையிலும் நம்பிக்கை கொள்ளாத ஒருவரது மனப்பான்மை என்று திருத்தந்தை உறுதிபடக் கூறினார். அவர் அன்பு, உண்மை என்னும் ஆயுதங்களால் தீமையை மேற்கொள்ளப் பயப்படவில்லை. ஒருவர் தனது எதிரியை அன்பு செய்வது என்பது அன்பின் புரட்சி, இது மனித வளங்களில் தங்கியிருப்பதில்லை, இது இறைவனின் கொடை.

6. அகிம்சை பல்வேறுபட்ட மதங்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது. இது உண்மை, ஒளி, பரஸ்பர மதிப்பு, சுதந்திரம், இணக்கப்பாடு ஆகியவற்றை வளப்படுத்தும் வழியாக அமைந்துள்ளது. எமது மதிப்புக்குரிய மறைகளில் காணப்படும் உண்மைகளை ஆதரிப்பதற்கு மதத்தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். அதே வேளையில் எம்மைப் பின்பற்றுவோர் அகிம்சையை வளப்படுத்த நாம் அவர்களுக்கு உதவியளிப்பதோடு அவர்கள் தமது செயற்பாடுகளில் இதனைக் கடைபிடிக்க ஆதரவும் அளிக்க வேண்டும். மனித வாழ்வின் புனிதத் தன்மையை வளப்படுத்துவதற்காக எம்மால் ஆனதெல்லாம் செய்வோம். எம்மிடையே வதியும் ஏழைகள் தாழ்த்தப்பட்டோரது வாழ்வின் நலனுக்காக ஒன்றுகூடி உழைப்போம்.

இனவேறுபாடு, குலவேறுபாடு, மத வேறுபாடு, வகுப்பு வேறுபாடு அனைத்திற்கும் அப்பால் உரையாடல் மூலம் மனித மாண்பை வளப்படுத்துவோம். நாம் இந்துக்கள், கிறிஸ்தவர்கள் என்ற மட்டில் விசேட விதத்தில் இன்றைய இந்த நிலையில் அகிம்சை மட்டுமே உலகளாவிய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஒரே வழி என்ற நம்பிக்கையுடன் இதயங்களை அன்பினால் வெற்றிகொள்வோம். இதுவே எமது நம்பிக்கையும் செபமும்.

7. அனைத்து உள்ளங்களையும் ஒளிரச் செய்யும் ஒளியின் விழாவாகிய தீபாவளி விழாவைக் கொண்டாடுவதற்கு ஒன்றுகூடியுள்ள இவ்வேளையில் மீண்டும் ஒரு தடவை உங்களுக்கு அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# இளைஞர் மொழிவு

## பூங்காவனம் பாலைவனமாகும் பயங்கரம்

அருட்சகோதரி மைக்கல் மெர்சி. ஐ. சி. கன்னியர் மடம், வைத்தியசாலை வீதி, மன்னார்

"மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை. நிலவுலகும் அதில் வாழ்வனவும் அவருக்கே சொந்தம்" (தி. பா 24:1).

பூவுலகும், புவிவாழ் மாந்தரும் இறைவனின் கைவண்ணங்கள். இந்த இறைக் கைவண்ணங்களின் நிறங்கள் கொலைவெறியால், அச்சுறுத்துதலால், வன்முறையால் மங்கிப்போய் நிற்கின்றது. இந்த உலகத்தை உண்டாக்கிய இறைவன் அனைத்தும் நல்லதெனக் கண்டார். படைப்பின் கொடுமுடியாகிய மனிதனோ "நான்' என்ற ஆணவத்தால், பொறாமை என்ற தீப்பொறியால் தன்னுடைய இனம், மதம், சாதி என்ற பாகுபாட்டால் பாருலகை பாலைவனமாக்கி வருகின்றான். இதைப் படம்பிடித்துக் காட்டுவதுபோல் அமைகிறது நம் நாட்டின் இன்றைய சூழ்நிலை.

விடுதலை என்னும் குழந்தை சுகப்பிரசவம் ஆகாததால் அதை ஆயுதங்களாலே விடுவிக்கமுடியும் என்ற போக்கு இன்று பல நாடுகளிலும் இருப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். ஆயுதம் அடிமைத்தளையைத் தகர்த்தெறியும்முன் பலரின் ஆயுளைக் குறைத்துவிடுகின்றது.

இவ்வாறு வன்முறை, கொலை என்ற அணுகுமுறையில் புரட்சிப்பூக்கள் மலர்ந்துகொண்டிருந்த காலத்தில் இதுவரை போர்க்களத்தில் யாரும் பயன்படுத்தாத, பயன்படுத்தமுடியாது என்று நினைத்த புதிய அணுகுமுறையை அண்ணல் காந்தி பயன்படுத்தினார். உலக வரலாற்றிலே எந்தப் புரட்சியும் ஆயுதமின்றி நடந்ததில்லை. அகிம்சையால் போராட முடியாது எனத் தன்னிடம் கூறியவர்களிடம் "அரசை எதிர்த்து ஆயுதமின்றிப் போராடும் நிகழ்ச்சி ஒன்றை நிகழ்த்திக் காட்ட வேண்டும் என்பதுதான் என் ஆசை" என்றார் காந்தியடிகள். அதில் வெற்றியும் கண்டார்.

நம் சொந்த வாழ்க்கை முறையிலே அகிம்சையை அமைதியை சுதந்தரித்துக்கொள்வோமானால் அவை நம் குடும்பங்களை, சமுதாயத்தை ஏன் நாட்டையே அமைதிப் பூங்காவாக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. "பூக்கள் வேறுபட்டாலும் தேன் ஒன்றுதான். இதைத் தேனீ அறிந்ததால் பூக்களில் பாரபட்சமில்லாமல் வேப்பம் பூவிலும் தேனை எடுக்கும்" இனங்கள் மதங்கள் என வேறுபட்டாலும் பிறப்பால் நாம் மனிதர்கள். ஒவ்வொரு மனிதனின் உடலிலும் ஓடும் இரத்தம் இளம் சிவப்பே. அவன் சுவாசிக்கும் காற்றும் ஆக்ஸிஜன்தான். பின் ஏன் நமக்குள் இந்தப் பாகுபாடுகள், பிரிவினைகள்?

"அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய செறுவர்க்கும் செய்யாவிடல்" என்ற திருக்குறள் ஆழமான செய்தியைத் தருகிறது. நமக்குத் தீமை செய்பவர்க்குக்கூட நாம் தீமை செய்யக்கூடாது என்ற அறிவுதான் அறிவுகளிலெல்லாம் தலைசிறந்த அறிவு என்று கூறுகின்றார் வள்ளுவர். அதற்கும் ஒரு படி மேல் சென்று, "உங்கள் பகைவரிடமும் அன்பு செலுத்துங்கள். அவர்களுக்கு நன்மை செய்யுங்கள்" என்று இயேசு கூறுகின்றார். இதுதான் கிறிஸ்துவினுடைய போதனைகளின் சாராம்சம். கிறிஸ்துவின் வார்த்தைகள் வார்த்தைகளாக மட்டுமல்லாமல் நம் வாழ்வாகும்போது நம் மனம் பூங்காவனமாக மாறுகிறது. இன்னும் நாம் விடியல் காணாது இருளில் வாழும் மக்களாக இருக்கின்றோம் என்பதை விளக்குவதாய் பின்வரும் கதை அமைகிறது.

ஒரு குரு தனது சீடரைப்பார்த்து "ஒரு இரவு நிறைவுற்று ஒரு புதிய நாள் உதயமாகின்ற விடியலை எவ்வாறு அறிவீர்கள்?" என்று கேட்டார். "தூர நிற்கின்ற ஒரு மிருகத்தைப் பார்த்து அது செம்மறியா, நாயா? என்று வித்தியாசம் கண்டுபிடிக்கக் கூடுமானால் அதுவே விடியலுக்கு அறிகுறி" என்றான் ஒருவன். அதற்கு 'இல்லை' என்றார் குரு. இன்னொருவன் 'தூரத்திலிருக்கும் ஒரு மரத்தைப்பார்த்து அது என்ன மரம் என்று எம்மால் கூற முடியுமானால் அது பொழுது விடிந்ததற்குச் சமன்" என்றான். அதற்கும் 'இல்லை' என்றார் குரு. அப்படியென்றால் எப்போது? என்று சீடர்கள் கேட்டார்கள். "நீங்கள் ஒரு மனிதனைப்பார்த்து அது உங்கள் சகோதரனா சகோதரியா என்று உங்களுக்குத் தெரியாவிட்டால் இன்னும் இருட்டாகத்தான் இருக்கிறது" என்றார் குரு. ஆம் இன்னும் இருட்டுக்குள் இருப்பதால்தான் மனிதாபிமானம் இன்றி மனித உயிர்கள் கொல்லப்படுகின்றன. இவைகள் இன்றோடு ஒரு முடிவுக்கு வரட்டும். விடியலை நோக்கி இனி நாம் விரைவாய்ப் புறப்படுவோம்.

சமாதானத்தின் தூதுவராய் இருந்து சரித்திரம் படைத்து மறைந்த நம் திருத்தந்தை 2ம் யோன் போல் நம்மோடு பேசுகின்றார். *"வன்முறையை விட்டு விலகி சமாதானத்தின் வழியைத்தேடும்படி நான் முழந்தாளிலிருந்த வண்ணம் உங்களிடம் வேண்டுகின்றேன். வன்முறையின் வழிகளை விட்டு விலகுங்கள். அமைதியின் பாதைக்குத் திரும்புங்கள். வன்முறையானது நீதி நிலைநாட்டப்படும் நாளைக் காலம் தாழ்த்தும். மரணத்தின் வழிகளைப் பின்பற்றுங்கள் என்று பயிற்றுவிக்கும் தலைவர்களைப் பின்பற்ற வேண்டாம். உங்களிலும் பிறரிலும் உள்ள வாழ்வை மதித்து நேசியுங்கள். சாவுக்காகப் பணிபுரியாது வாழ்வுக்காகப் பணிசெய்யுங்கள்... வன்முறையே நீதியின் எதிரி. உண்மையான நீதியை அடையும் ஒரே வழி அமைதி வழியே."* இந்த அருளுரையை ஏற்று வாழ்வோமானால் அனைத்துப் பிரச்சினைகளும் சுமுகமாகத் தீரும்.

## உங்களுக்குத் தெரியுமா?

### மறையறிவுப் பகுதி இல.68

புனித பவுல் சவுலாக இருந்த நாட்களில் எந்தளவு வேகத்தோடு கிறிஸ்தவர்களைத் தேடி அழிக்க முனைந்தாரோ அதைவிடப் பலமடங்கு வேகத்தோடும் ஆர்வத்தோடும் கிறிஸ்துவை மக்களிடம் எடுத்துச் சென்றார். இது எம்மாவுஸ் செல்லும் வழியில் கிறிஸ்துவைச் சந்தித்ததால் பவுலில் ஏற்பட்ட மாற்றம். இந்த எம்மாவுஸ் அனுபவத்தை அவர் பல முறை மக்களிடத்திலும் மக்கள் மன்றங்களிலும் எடுத்துரைப்பதை நாம் திருத்தூதர் பணியில் காண்கின்றோம். இவர் இதில் அலுத்துப்போகவோ சலிப்புக்கொள்ளவோ இல்லை. தூய ஆவியால் அவர் உள்ளத்தில் எரிந்துகொண்டிருந்த கிறிஸ்து என்ற அந்த ஒளி இவற்றைச் செய்வதற்கு அவருக்கு ஆர்வத்தையும் ஆற்றலையும் துணிவையும் தந்தது. அதற்கு இடையூறாக வந்த எதுவும் அவரது இந்த உத்வேகத்தைத் தடுத்துவிட வலுவற்றிருந்தது. பட்டினி கிடந்தபோதும், சிறையிலடைக்கப்பட்டபோதும் மன்றங்களின் நடுவில் நிறுத்தப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோதும் நீண்ட பயணங்களில் கடலிலும் தரையிலும் பல இடையூறுகளைச் சந்தித்தபோதும் அவரது மறைபோதக ஆர்வம் மேலும் மேலும் ஓங்கி எரிந்ததேயன்றி அடங்கிவிடவில்லை.

***இனி எமது வினாக்களுக்கு வருவோம். வினாக்கள் உரோமர் 7ம் அதிகாரம் முதல் 10ம் அதிகாரம் வரை உள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன.***

1. எழுதப்பட்ட சட்டத்திற்குரிய பழைய நெறியில் செய்யும் ஊழியத்திற்குப் பதிலாய் புதிய நெறியில் ஊழியம் செய்ய அருள் தருபவர் யார்?
2. கடவுளின் சட்டத்திற்கு மனத்தால் கட்டுப்பட்டிருக்கும் நான் எதனால் பாவத்தின் சட்டத்திற்கும் கட்டுப்பட்டிருக்கின்றேன்?
3. கிறிஸ்துவோடு இணைந்திருப்போருக்கு ஏன் தண்டனைத் தீர்ப்புக் கிடையாது?
4. ஆவிக்குரிய மனநிலை கொண்டிருப்போருக்கு வருவது எது?
5. கிறிஸ்துவின் பங்காளிகளான நாம் அவருடைய துன்பங்களில் பங்குபெறுவதால் கிடைக்கும் நன்மை என்ன?
6. சொல்வடிவம் பெறமுடியாத நம்முடைய பெருமூச்சுக்கள் வாயிலாக நமக்காகப் பரிந்து பேசுகின்றவர் யார்?
7. தாம் முன்குறித்தோரை இறைவன் அழைத்து தமக்கு ஏற்புடையோராக்கி அவர்களுக்கு வழங்குவது என்ன?
8. "என் மக்கள் அல்லாதோரை நோக்கி என் மக்கள் நீங்கள் என அழைப்பேன். கருணை பெறாதோருக்குக் கருணை காட்டுவேன்" என எந்நூலில் எழுதப்பட்டுள்ளது."
9. திருச்சட்டங்களின் நிறைவு யார்?
10. திருச்சட்டத்தின் வழியாய் கடவுளுக்கு ஏற்புடையவராதல் பற்றி மோசே கூறுவது என்ன?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 66 இற்கான கேள்விகளுக்கு 22 பேர் விடையளித்திருந்தனர்.


**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி: ஏ. கில்டா, கட்டையடம்பன், முருங்கன்**

**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்**

1. கஸ்தூலப்பர் றகுநாதன், அந்தோனியார்புரம், இலுப்பைக்கடவை.
2. ப. ஜெய றொணி திலீப்குமார், எமில்நகர், மன்னார்.
3. சகோ.மேரி பற்றிமா புனித அந். ஆலயம் அநுராதபுரம்.
4. எஸ் பாஸ்கர் றோச், பள்ளிமுனை கிழக்கு
5. ஆ. பேன்சினி, ஆர்.டி.எஸ்.வீதி, 2ம்கட். வெளிக்குளம், வவு.
6. போ. ஜொனி கிறிஸ்ரஸ், 6ம் வட்டாரம், வங்காலை.
7. அருட்சகோ. அ. ஜஸ்மின்ராஜ், ஆ. மெய். பீடம், களுத்துறை.
8. பெ. மேரி ஜஸ்மின், சாந்திபுரம் 43/100 திட்டம், மன்னார்.
9. கி. ஆன் றிசானா பிகிறாடோ, 50 வீ. தி. பள்ளிமுனை, மன்.
10. அன்புராஜ் லெம்பேட், வங்காலை - 02

# நீங்காத நினைவுகள்

### 1ம் ஆண்டு நினைவஞ்சலி





மலர்வு 11-08-1992
உதிர்வு 29-01-2008
செ. யூட் கொஸ்ரன் (ரெனி)

மலர்வு 08-07-1995
உதிர்வு 29-01-2008
செ. யூட் கொலின்ரன் (ஜெனி)

**மண்டை தீவு (மடு)**

மன்னார் மண் அதில் பிறந்து மருதமடுபதனில் வளர்ந்து தளிர்ந்து எழுந்த அன்புச் செல்வங்களே! அழகான உங்கள் தோற்றமும் அதனுள்ளே இருந்த பாசமும் பரிவும் நாம் மட்டுமே அறிவோம். என்ன நடந்தது உங்களுக்கு? நேற்றுவரை எங்களோடு உறவாடினீர்கள். இன்று எம்மை விட்டு எங்கு சென்றீர்கள்? பள்ளிப்பருவ வயதினிலே பாடசாலை முடிந்து வருவீர்கள் என்று எதிர்பார்த்துக் காத்திருக்க எம்முடைய காதருகே இடியென வந்த செய்தி இதயத்தைப் பிளந்ததே! மடுப்பதிதனில் மருதமரமாக வலம் வந்து பணிகள் பல புரிந்தீர்கள். இப்போது அந்தத் தாயிடமே சென்றுவிட்டீர்களோ? ஓராண்டு என்ன எத்தனை ஜென்மமானாலும் உங்களது நினைவு எங்களை விட்டு அகலாது. (இவர்களோடு இறந்த சகலரையும் அன்றைய நாளில் நினைவு கூறுகின்றோம்.)

இவர்களின் பிரிவால் துயருறும், அன்பு அப்பா, அம்மா, அக்காமார், பாசச் சகோதர சகோதரிகள், உற்றார் உறவினர், நண்பர்கள். தகவல்: அ. செல்வசிங்கம் (குடும்பத்தினர்)

### 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 - 04 - 1997



உதிர்வு 29 - 01 - 2008

**செல்வன் பிரான்சீஸ் சேவியர் றொகான்**
(பெரிய பண்டிவிரிச்சான் மடுக்கோயில்)

ஆண்டொன்று கடந்தாலும் மகனே - உன் அன்பினை மறக்க முடியுமா? காலத்தால் மறக்கமுடியாமல் எம் கனவிலும் நினைக்கின்றோம். பாசத்தை எம்மீது சொரிந்த மகனே! பாவியர் விரிச்ச வலையில் காலன் உன்னைச் சிக்கவைத்தான். உடலால் நீ எம்மை விட்டுப் பிரிந்தாலும் உள்ளத்தால், உணர்வுகளால் என்றுமே எம்முடன் வாழ்கின்றாய்! இறைவன் என்றும் நித்திய இளைப்பாற்றியை இனிதே அருள்வாராக!

இவரின் பிரிவால் துயருறும்:
அன்பு அப்பா, அம்மா, சகோதரி, சகோதரர்கள், சித்தப்பாமார் குடும்பம், அத்தைமார் குடும்பம், நண்பர்கள், உறவினர்கள், பாடசாலைச் சமூகம்.
தகவல்:- ம. யோச் குமார் - மன்னார்

### 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 - 06 - 1979



உதிர்வு 29 - 01 - 2008

**கி. ஜெராட் ஞானகரன் (ஜெராட்) (சாரதி)**
சூரியகட்டைக்காடு (மடுக்கோயில்)

விழுதுவிட்ட ஆலமரம் வேரோடு சாய்ந்ததுவோ! மாமலை ஒன்று மண்மீது சரிந்ததுவோ? அருமை மனைவி தவித்து மயங்க, அன்புப் பெற்றோர் மாமா, மாமி திகைத்துக் கலங்க, பாசச் சகோதரர்கள் கதிகலங்க, மச்சாள்மார் திகைத்து விழிக்க மண்ணில் மறைந்து சென்றுவிட்டீரோ? உங்கள் அழகான தோற்றமும் அன்பான சிரிப்பும் - என்றும் எம்மை விட்டு அகலாதையா! மணக்கோலத்தில் உங்களைக் - கண்டு ஒரு வருடங்கூட ஆகவில்லை. வாடிநிற்கின்றேன். எம்மையெல்லாம் மண்மீது தவிக்க வைத்து விண்ணுலகம் தேடி விரைவில் நீர் சென்றதேனோ? உம்மை என்றென்றும் நான் மறவேன். (இவரோடு அன்றைய தினத்தில் இறந்த சகலரையும் நினைவுகூருகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:- அன்பு மனைவி, அருமைப் பெற்றோர், மாமா, மாமி மச்சாள்மார், பாசச்சகோதரிகள், உறவினர், நண்பர்கள். தகவல்: மனைவி ஜெ. கொண்சி

# நீங்காத நினைவுகள்

### 3ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 - 09 - 1976



உதிர்வு 15 - 01 - 2006

**செல்வி. அ. றொபின்ரா லெம்பேட்**
(தலைமன்னார் கிராமம்)

உன் மலர்ந்த முகமும் குமுதச் சிரிப்பும்
குவலயமே விலை பெறுமோ?
நிலைபேறில்லா வாழ்க்கையென நினைத்தனையோ
நிலவுலகம் துறந்தனையோ?
யுவதியாய் யுக்தி சொல்வாய் - பக்தியின் சபைதனிலே
சுடர் விடுவாய் சூரியனாய் - கலை வளர்த்தாய்.
எம்மை ஒருங்கிணைத்தாய் - ஏன் பிரிந்தாய் தாயே!
எது நடந்தபோதிலும், இடி விழுந்தபோதிலும்
அது நடந்ததாய் உன் முகம் காட்டாதே.
உனக்கெதிர்ப்பும் மறுப்புமில்லை ஊரில் அதை மறுக்க யாரும் இல்லை. சிறப்பிழந்து சிரிப்பிழந்த சிறகிழந்து மனம் ரணமாகியளும் ஒரு கூட்டுப் பறவைகள்.
இவரின் பிரிவால் துயருறும்:-
தாய், சகோதரங்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

# குடும்பக் குவலயம்



## பணிவு உயர்வுக்கே

அருட்சகோதரி லுமினா போல்ராஜா (தி. கு)

மனிதன் உடல், உள்ளம், ஆன்மா என்ற முக்கூட்டமைப்பின் வடிவம். இம்மூன்றும் சமநிலையில் வளர்ந்து தமக்குள் பிளவுபடாது ஒருங்கிணைவை (Integerity) உருவாக்குவது மிக மிக அவசியமாகும். இவ்வொருங்கிணைவை வளமாக்க ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுத்து நெகிழும் தன்மையோடு செவிமடுப்பதும் பணிவதும் ஆளுமையில் ஒரு வளர்ச்சியை - முதிர்ச்சியை மலரவைக்கின்றது.

### பணிவு என்பது

பணிவு என்பது உய்த்துணர்ந்து தெரிவுகளை எடுத்து இதயத்தால் சுதந்திரமாகச் செயல்படும் வாழ்க்கைமுறை. இன்று தனிமனிதனும், சமூகமும் பணிவு என்றதும் மூத்தோருக்கும், அதிகாரத்திலுள்ளோருக்கும் அடங்கிப்போதல், சொல்லுவதைச் செய்தல் என்றே பொருள் கொள்கின்றனர். சிறப்பாக இளைய தலைமுறையினர் இக்கண்ணோட்டத்தில் -தான் பணிதல் என்ற மனப்பாங்கை, நடத்தையை வெறுக்கின்றனர். தம் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகின்றனர், சுயாதீனத்திற்கு விலங்கிடுகின்றனர் என்று பெற்றோர், பெரியோர், சமூகம் அனைத்தையும் எதிர்க்கின்றனர். கட்டுக்கோப்புக்களைக் குலைக்கின்றனர். வரையறைகளை மீறும் தன்னிச்சைப் போக்குடையவர்களாக மாறுகின்றனர். வாழ்வில் இலட்சியமின்றி, தெரிவின்றித் தடுமாறுகின்றனர். வன்முறைச்செயல்களில் ஈடுபடுகின்றனர். தம் ஆளுமையைச் சிதைக்கின்றனர். தற்காலிக மகிழ்வில், நிறைவில் திருப்தி, இன்பம் காண முயல்கின்றனர். இவை நாம் வாழும் சமூகச் சூழலில் காணும் நடத்தைக்கோலங்களின் கண்கூடான காட்சியாகும்.

### பணிய மறுப்பது ஏன்?

ஒரு குழந்தை தன் தனி வாழ்வில், குடும்ப வாழ்வில், சமூக வாழ்வில் பாதுகாப்பற்ற நிலைகளை, அன்பற்ற சூழலை, அதிகாரப் போக்குள்ளவர்களின் அணுகுமுறைகளை, அளவுகடந்த கட்டுப்பாடுகளை, தான் ஏற்கப்படவில்லை - மதிக்கப்படவில்லை என்ற உணர்வுகளை அனுபவமாகக் கொண்டிருக்கும்போது பணிய மறுக்கும் நிலை உருவாகின்றது. எச்செயலுக்கும் ஒரு எதிர்ச்செயல் உண்டு என்பது உண்மை. இந்த ரீதியில் ஒருவரின் மேற்கூறப்பட்ட அனுபவங்களின் உளத்தாக்கங்கள், காயங்கள் என்பன மறுக்கும் - எதிர்க்கும் நிலைகளை உருவாக்குகின்றன.



"மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா" என்பதற்கொப்ப ஒருவரில் உருவாகும் மூர்க்கத்தனம், பிடிவாதப்போக்கு, ஆணவம், அகந்தை, பெருமை, தாழ்வுமனத்தை மறைக்கத் தமக்குள்ளும் வெளியிலும் செயற்படுத்தும் உள விளையாட்டுக்கள் என்பன மனித நேயமற்ற உளப்பாங்குகளை, நடத்தைக்கோலங்களை உருவாக்கிவிடுகின்றன. இவை பணிவை இழிவாகக் கருதி, பிறரை மதிக்காது மிதிக்கவும் தம்மைத்தாமே அழிக்கவும் செய்யும் வன்முறைக் கருவிகளாகின்றன. இத்தகையோர் குறைகுடங்களாக இருப்பதால் "பணிவு" என்ற நல்ல பண்பைப் பாதகமாக நினைத்து உதறித்தள்ளுகின்றனர்.

### குறள் தரும் பணிவு

"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம் மலையிலும் மாணப்பெரிது" என்பது வள்ளுவரின் கூற்று. இக்கூற்று ஒருவன் தான் இருக்கும் நிலையில் தன், அறிவு, ஆற்றல், திறமை, சிந்தனைத்திறன், உணர்வுகள், உணர்ச்சிகள், கருத்தோட்டங்கள், மனநிலைகள், உடல் உள ஆன்மீகத் தேவைகள் அனைத்தையும் அறிந்து ஏற்று மதித்து தன்னைப்பற்றிய சுயநலத்திலும் பிறரால் தான் அறிகின்ற தன் சுயத்திலும் தெளிவை, உறுதியைக் கொண்டிருக்கும்போது அவன் தன் இதயத்திற்கு, தெளிந்த அறிவுக்கு, மேலான நோக்குக்கு, நல்ல நடத்தைக்கு, நல்ல ஏவுதல்களுக்கு, நல்ல உள்ளுணர்வுகளுக்கு, மனச்சாட்சியின் குரலுக்கு எவ்வித சலனமுமின்றி திரிவடையாத நிலையில் பணிகின்றான். இப்பண்பு அவனை மலையிலும் உயர்ந்து நிற்கச் செய்யுமேயன்றி தாழ்வுற்று அடிமைப்படுத்தப்பட்டு அவமானம் அடைகின்ற நிலைக்குத் தள்ளாது என்பதைத் தெளிவாக்குகின்றது.

### சுற்றத்துக்குப் பணிவோம்

சுயத்துக்குப் பணிதல் என்பது ஒருவர் தனது உடல், உள்ளம், ஆன்மா மூன்றிற்கும் இதயத்தால் சுதந்திரமாகப் பணிவதாகும். உதாரணமாக ஒருவர் சில காட்சிகள், நிகழ்வுகள், இடங்கள், ஆட்கள், உறவுகள் தன் உள்ளத்திற்குத் தற்காலிகமாக மகிழ்வைத் தருகின்றன என உணர்கின்றார். இவை உணர்ச்சிகளின், உணர்வுகளின், எழுச்சிகளின் குவியலாக இருக்கும். உடலில் சில நல்ல, தீய தூண்டுதல்களை உளக்கிளர்ச்சிகளை, தாக்கங்களை உருவாக்குகின்றன. இதனால் மனம் அலைபாய்கின்றது. கற்பனா சக்தி சிறகடித்துப் பறக்கின்றது. உடலும் உள்ளமும் ஆன்மாவும் தூண்டுதல்களை நிறைவுசெய்யத் துடிக்கின்றன. இவை இறுதியில் ஆளுமையில் ஒரு முதிர்ச்சியை சமநிலையை வளர்க்கலாம் அல்லது சிதைவை, சீர்குலைவை, பகிர்வை, இடைவெளியை ஏற்படுத்தி ஒருங்கிணைவை அழிக்கலாம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒருவர் தன் பகுத்தறிவுக்கும், தன்னைப் பற்றிய உண்மை நிலைக்கும், எல்லாவற்றையும் சீர்தூக்கிப்பார்த்துத் தீர்மானிக்கும் மனப்பக்குவத்திற்கும் தரித்து நின்று செவிமடுக்கும் நிலைக்கும், காலம் கொடுத்து உடலிலும், உள்ளத்திலும், ஆன்மாவிலும் ஒருங்கிணைவை ஏற்படுத்தி, நல்லவற்றிற்குத் தலைவணங்கி தானாக, சுதந்திரமாகத் தனக்குப் பணிதலே சுயத்திற்கு பணிதலாகும். இப்பணிவு நல்ல தெரிவுகளைத் தனதாக்கி பிளவுபடாத ஆளுமையை உருவாக்குவதோடு வாழ்வையும் அழிவையும் தனக்குத்தானே எடுத்துக்கொள்ள பொறுப்புடையவனாகத் துணைபுரிகின்றது.

### நிறைவாக

"அடங்கிப்பணிதல் ஒருவனுக்குத் தெய்வத் தன்மை தரும். அடங்காமல் திரிதல் தீராத துன்பத்தைத்தரும்". இதுவும் அன்றாட வாழ்வின் அனுபவமே. பணிய மறுத்து பரிதவிப்போரும் அர்த்தம் புரியாது தெளிவற்ற நிலையில் பணிந்து அல்லப்படுவோரும் பரிதாபத்திற்குரியவர்களே. ஒருவரின் வாழ்வின் ஏற்படும் அனுபவங்கள் அவரை தனக்குப் பணியவும் பிறருக்குப் பணிந்து பணிவிடை செய்யவும் சுதந்திரமான ஒரு வாழ்க்கை முறையை வளர்க்கிறது.

எனவே பணிதல் என்பது தாழவான செயலுமல்ல, அடங்கி அடக்கப்பட்டு வாழ்வதுமல்ல. மாறாக இது ஓர் உயர்வான பண்பு. நல்லவற்றுக்குத் தலைசாய்க்க, நெகிழ்ந்து கொடுக்க உதவும் உன்னத வாழ்க்கை முறை. இதயத்தால் பகுத்தறிவால் உய்த்துணர்ந்து செயல்படும் முதிர்ச்சியின் கொடுமுடி. "நிறைகுடம் தளம்பாது" என்பதைப் பிரதிபலிக்கும் ஆளுமை முதிர்ச்சியும் தெளிந்த நோக்கும் பரிவுள்ளமும் கொண்டு பண்போடு - பணிவோடு செயல்பட்டு வாழ்வில் நிறைவை, மகிழ்வை அனுபவிப்போம்.

---

# மருத்துவப் பொழிவு

## தாக்கம் ஏற்பட்ட ஒருவருக்கு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும்வரை செய்யக்கூடிய காப்பு நடவடிக்கையும் சித்த ஆயுர்வேத சிகிச்சை முறையும்

Dr. எஸ். லோகநாதன் B.S.M.S, R.A.M.P சித்தவைத்திய நிபுணர், மன்னார்

தொடர் - 8

### 03. தொண்டையில் ஏதாவது அடைத்தல் ; (ASPHYNA)

தொண்டையில் ஒரு கடினமான உணவோ, காசு போன்ற பொருட்களோ அடைத்தால், உயிராபத்தும் ஏற்படும். இது ஒரு தற்செயலாக நடைபெறும் ஒரு நிகழ்வாகும். பருமன் குறைந்தவராயின் அவருக்குப் பின்னால் நின்று வயிற்றை விலா எலும்புக்குக்கீழாகச் செலுத்தி மேல்நோக்கி அழுத்தினால் அடைத்த உணவோ அல்லது பொருட்களோ வெளியில் வரும். பருமன் கூடியவராயின் அவரை மல்லாந்து படுக்க வைத்து தலையை ஒரு பக்கம் சரியவைத்து தொப்புளுக்கும் விலா எலும்பிற்கும் இடையில் கையை வைத்து நமது பலம் உள்ள மட்டும் பலமாக அமுக்க தொண்டையில் சிக்கியது வெளியில் வரும். இதற்கு மருத்துவம் தேவையில்லை.

### 04. நீரில் மூழ்குதல் (DROWNING)

நீரில் மூழ்கிய ஒருவர் அனேகமாக நினைவிழந்திருப்பார். அத்துடன் அவரின் சுவாசமானது தொடர்பின்றி இருக்கும். எனவே இவருக்கு முதலில் சுவாசம் வரச்செய்ய வேண்டும். கால் உயரமாகவும், தலை பணிவாகவும் இருக்கச் செய்து தலையை ஒரு பக்கம் சரியச்செய்து வாய்க்கு வாய்வழி சுவாசமுறையை ஏற்படுத்தி அவ்ரைச் சுவாசிக்கச் செய்ய வேண்டும். முன்பு கூறியதுபோல் வயிற்றை அமர்த்தி, நீரை வெளியேறச்செய்ய வேண்டும். நீரில் மூழ்கியவரின் உதடு, நாக்கு, நகங்கள் ஆகியவை நீல நிறமாக இருக்கும். நாடி நடை தளர்ந்து காணப்படும். சீரற்ற சுவாசம் காணப்படும். சுயநினைவு இழந்திருப்பார்.

#### முதலுதவி

1. சுவாசப்பை, வயிற்றறையில் உள்ள நீரை வெளியேற்ற வேண்டும். நீரில் மூழ்கியவர் சிறு குழந்தையாய் இருப்பின் அவரது இரண்டு கால்களையும் பிடித்துத் தலை கீழாகக் குலுக்க வேண்டும். அப்படிச் செய்யும்போது அனைத்து நீரும் வெளியேறும். பெரியவர்களாயிருப்பின் கிராமப்புறங்களில் வண்டிச்சக்கரத்தில் படுக்கவைத்துச் சுத்தும்போது நீர்வெளியேறிவிடும்.
2. வாய், மூக்கு, கண், காது முகங்களில் படிந்துள்ள சேறு, சகதி மற்றும் களிமண்ணை நீக்கவேண்டும்.
3. குடிப்பதற்கு சூடாக தேநீர் அல்லது கோப்பி கொடுக்கலாம்

#### சித்த மருத்துவம்

1. மூக்குப்பொடி நசியமிட வேண்டும்
2. குடிப்பதற்கு வெதுவெதுப்பான சுக்குத் தண்ணீர் கொடுக்கவும்.
3. கை, கால்களில் விறைப்பு இருப்பின் சூடான தவிட்டு மூட்டைக்கட்டி ஒற்றடமிட்டுச் சூடேற்ற வேண்டும்.

### 05. வெப்பத்தால் ஏற்படும் கடும் பிரச்சினைகள் (PROBLEMS DUE TO SEVERE HEAT)

கடுமையாக உழைப்பவர்களுக்கும், கடுமையாக வியர்ப்பவர்களுக்கும் நீரிழப்பு ஏற்படுவதுடன் கை, கால்களில் வலி ஏற்படும். பெரும் அசதியும் உண்டாகும். உடலில் உள்ள நீர்ச்சத்தும் உப்புச்சத்தும் இழந்து காணப்படுவர். இதனால் இவர்களுக்கு மயக்கம், தலைகிறுகிறுப்பு இருக்கும். தோலானது குளிராகவும், ஈரமாகவும் காணப்படும். சிலருக்கு நாடி நடை அதிகரித்தும், இன்னும் சிலருக்கு நாடிநடை தளர்ந்தும் காணப்படும்.

#### முதலுதவி

1. ஒரு குளிர்ச்சியான நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் கால் பக்கம் உயரமாக வைத்து தலைப்பக்கம் சிறிது தாழ்வாக வைத்துப் படுக்க வைக்க வேண்டும்.
2. நினைவு இழந்திருந்தால் குடிக்க ஏதும் கொடுக்கக்கூடாது.

#### சித்த மருத்துவம்

நினைவு இழந்திருந்தால் நினைவு திரும்புவதற்கு நசியமிடவேண்டும். எலுமிச்சைச் சாற்றுடன் சிறிதளவு உப்பும் கலந்த இரசத்தை அடிக்கடி பருகக் கொடுக்க வேண்டும்.

### 06. காயங்கள் (Wounds)

காயங்கள் 6 வகையில் அடங்கும் :

1. சிராய்ப்பு (ABARATION)
2. அடிபட்ட தடிப்பு (கண்டல் காயம்) (CONTUSION)
3. வெட்டுக்காயம் (DNCISED WOUND OR CUTTING WOUND)
4. சிதைந்த அல்லது கிழிந்த காயம் (LACERATED WOUND)
5. குத்துப்பட்ட காயம் (STABBED WOUND)
6. குண்டடிப்பட்ட காயம் (FIRE ARM WOUND)

#### 1. சிராய்ப்பு (ABARATION)

அடிபட்டு விழுந்து மேல் தோல் தேய்ந்து குருதிக் கசிவு ஏற்படும். புண்ணானது விரைவில் ஆறும். புண்ணின் மேல் ஏற்படும் நிணநீர்க்கசிவால் அவ்விடத்தில் பசைபோன்று காணப்படும். இச் சிராய்ப்பில் பிற்காலத்தில் தழும்பு ஏற்படாது.

#### 2. அடிபட்ட தடிப்பு (கண்டல் காயம்) (CONTUSION)

ஒருவருக்கு கம்பு, கல், தடிமல் அடிபட்ட காரணங்களால் ஏற்படுவது இக்காயமாகும். இதில் குருதிக்குழல்கள் பாதிக்கப்படும் குருதிக் குழாய்களானது வெடித்து குருதி அவ்விடத்தில் தங்கி தடிப்புறும். இதில் பிற்காலங்களில் ஒரு கருத்த நிறத்தழும்பு ஏற்படும்.

#### 3. வெட்டுகாயம் (INCISED OR CUTTING WOUND)

தோலும் தசையும் வெட்டுப்பட்டுப் பிளவுபட்டு எலும்புக்கு மேலாக மிக அருகில் உள்ள தசை பாதிப்புற்றுக் காணப்படும். கூர்மையான கத்தி, சவர அலகு, இவற்றினால் இக்காயம் ஏற்படும். இதனால் தோல் பிளவுபட்டு, இரத்த நாளங்கள் வெட்டப்படுவதால் இரத்தமானது அதிகமாக வெளியேறும். காயத்தைச் சுத்தப்படுத்திய பின்பு தையல் போட வேண்டிய இடங்களில் தையல்போட்டு மருந்து கட்டி, உள்மருந்தும் கொடுத்து காயத்தை ஆற்ற வேண்டும். இதில் வரும் தழும்பு காலத்தால் அழியாததாக இருக்கும்.

#### 4. சிதைந்த/கிழிந்த காயம் (LACERATED WOUND)

தடித்த கம்பு, கம்பி இவற்றால் ஏற்படும் தாக்கத்தால் தோலானது பலமாகத் தாக்கப்பட்டு, குருதிக்குழல்கள் பலமாக நசுக்கப்பட்டு குருதிக்கசிவு ஏற்படும். இதில் குருதிக்குழல்கள் வெட்டப்படமாட்டாது. எனவே இக்காயத்தில் இரத்தப்பெருக்கு ஏற்படாமல் குருதிக்கசிவு மட்டும் ஏற்படும். இதற்கு தழும்பு இருக்காது.

#### 5. குத்துப்பட்ட காயம் (STABBED WOUND)

கூரியகத்தி, கூரிய அலவாங்கு, துவக்கு முனை இவைகளால் ஏற்பட்ட காயமாகும். இக்காயத்தில் வெளிப்புறத்தோலும், தசையும், உட்புற அவையவங்களும் பாதிக்கப்படும். இக்காயத்தில் அகலத்தையும்விட ஆழம் கூடுதலாகக் காணப்படும். இதில் அளவுக்கு மீறிய குருதிக்கசிவும் காணப்படும்.

---

# சமைப்போம் சுவைப்போம்

## தொகுத்துத் தருவது

ஏ. பற்றிமா, கொழும்பு

### ரின்பால் பிஸ்கட்



#### தேவையான பொருட்கள்

ரின் பால் - 1 ரின் (397 கிராம்)
கோதுமை மா - 500 கிராம்
பட்டர் - 300 கிராம்
பேக்கிங் பவுடர்- 3 தேக்கரண்டி

#### செய்முறை

ரின் பாலையும் பட்டரையும் சேர்த்து நன்கு அடித்துக்கொள்ளுங்கள். மாவுடன் பேக்கிங் பவுடரைக் கலந்து அதனை ரின்பால் பட்டர் கலவையுடன் சேர்த்து மென்மையாகும் வரை அடியுங்கள். தட்டு அல்லது கடினமான மேற்பரப்பின் மீது சிறிது மாவைத் தூவி அதன்மீது முன் தயாரித்த கலவையைப் பரப்பி 1/8 அங்குல தடிப்பில் தட்டையாக உருட்டுங்கள். பின் வேறுபட்ட வடிவங்களில் அவற்றை வெட்டி எண்ணெய் பூசிய தட்டின்மீது வைத்து 160°C வரை வெப்பமாக்கப்பட்ட அவனில் 15-20 நிமிடம் வைத்த பின்னர் பேக் செய்துகொள்ளுங்கள்.

# நாம் ஏன் குடிக்கவேண்டும்?

- A.A. குலாஸ் - பேசாலை -

மனித வாழ்வில் தொடர்ச்சியாக போராட்டங்களும், சிக்கல்களும் முரண் - பாடுகளும் வந்துகொண்டே இருக்கின்றன. வெற்றிகரமாக இவற்றிற்கு முகம்கொடுத்து வாழ்க்கையில் வெற்றி பெறுபவர்கள் ஒரு சிலரே. மறுபுறத்தில் முகம் கொடுக்க முடியாத கோழைகளாகி வாழ்ந்து வருவது மட்டுமல்ல, தன்னைச் சார்ந்தவர்களுக்கும் சுமையாக வாழ்ந்துகொண்டு வருபவர்களையும் நாம் சந்திக்கின்றோம்.

இவ்வாறு நமது அன்றாட வாழ்வில் நிகழும் துர்ப்பாக்கிய சம்பவங்களால் மனமுடைந்து போகும் நிலைகளினால் மனிதன் பின்வரும் விளைவுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. தாழ்வுணர்ச்சி, எதிர்மறைச் சிந்தனை, தனிமைப்படுத்தப்பட்ட உணர்வு, பாதுகாப்பின்மை, தன்னையே நிராகரித்தல், அடிக்கடி மனச்சோர்வு, மன்னிக்கமுடியாத நிலை போன்றவையே இந்த விளைவுகள். அத்துடன் வாழ்வில் ஈடுபாடு குறைந்து எந்த விடயத்திலும் முயற்சியற்ற நிலை, உறக்கம் இன்மை, நிம்மதி இன்மை போன்றவை இருக்கலாம். இதன் உச்ச நிலையாக வாழ்வே தொல்லையாக மாறிய நிலையில் இவர்கள் தம்மை மாய்த்துக்கொள்ளவும் துணிந்து விடலாம்.

நமது உடலைக் காயப்படுத்திய உணர்ச்சித் தழும்புகளில் இருந்து உடனே எம்மால் மீண்டும் வெளிவர முடியாது இருப்பினும் நாம் எத்தகைய நிலையில் வாழுகின்றோம் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். இதுவே நாம் அந்த நிலையில் இருந்து விடுதலை பெறுவதற்கு முதல் படியாகும்.

கடந்த 30 வருடங்களாக போர் என்பது நாம் அன்றாட உணவு அருந்துவதுபோல் எப்பொழுதும் கேட்கிற, பேசுகின்ற, வாசிக்கின்ற அனுபவமாக மாறிவிட்டது. இதன் தாக்கங்களை நன்றாக உணர்ந்துவிட்டோம். இவைகள் எமது உள்ளத்தில் வ்டுக்களை ஏற்படுத்தியுள்ளன. இடப்பெயர்வுகள், வேலையில்லாத் திண்டாட்டம், ஏழ்மை, சமூகச் சீரழிவுகள், சிறுவர் துஷ்பிரயோகம் இவைகள் அனைத்தும் நமது நாட்டில் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. இந்த அனர்த்தங்களின் தாக்கம் குடும்பத்தில்தான் முதலில் உணரப்படுகிறது.

இந்த யுத்தத்தினால் சாதாரண பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். யுத்தம் காரணமாக சொத்துக்களையும் உடமைகளையும், உறவு களையும் இழப்பதால் உள ரீதியான பாதிப்பிற்கு உள்ளாகி வருகின்றனர். வறுமை, இருப்பிட மின்மை, தொழிலின்மை போன்ற பிரச்சினைகளால் பல ஆண்கள் தமது வேதனைகளைத் தீர்ப்பதற்கு மதுபாவனையை ஆரம்பித்திருக்கின்றார்கள்.

**மது அருந்துவோர் கூறும் காரணங்களும் அவற்றிற்கான பதில்களும்**

எதற்காக மது அருந்துகின்றீர்கள் என்று கேட்டால், "பிரச்சினைகளுக்கு முடிவு காண - முடியவில்லை, பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க முடியாத நிலையில் குடிக்க வேண்டியுள்ளது" என்கின்றனர். இதில் ஏதாவது உண்மையுண்டா என்றால் இல்லையென்பதுதான் உண்மை நிலையாகும்.

இன்னும் உளரீதியான பிரச்சினைகளுக்கு விடை காணமுடியாத நிலையில் மதுவை நாடுகின்றார்கள். இது பிரச்சினைகளைக் குறைப்பதற்குப் பதிலாக பிரச்சினைகளை அதிகரிப்பதாக அமைகின்றது.

இன்னும் உடல் பிரயாசையினால் ஏற்படுகின்ற களைப்பையும், உடல் அசதியையும் போக்கு முகமாக சிலர் மதுவை நாடுகின்றார்கள். இப்பழக்கம் மேலும் மேலும் நிலமையைச் சிக்கலாக்குகின்றது. மது அருந்துவதால் தற்காலிகமாக அசதி இல்லாமல் போனாலும் ஆனால் அது மேலும் அசதியையும் அலுப்பையும் உண்டாக்குகிறது.

மேலும் சிலர் தமது நண்பர்களைப் பகைக்கக்கூடாது என்பதற்காக அவர்களுடைய உறவு நீடிக்க வேண்டும் என்பதற்காக, அவர்களைத் திருப்தி செய்யவேண்டுமென்ற நோக்கத்திற்காக மது அருந்துகின்றார்கள். இதன் மூலம் உறவை வலுப்படுத்த முனைகின்றார்கள். இது உண்மையில் தவறான சிந்தனையும் செயற்பாடுமாகும். இது உறவை வளர்ப்பதற்குப் பதிலாக உறவில் பிரிவையும், பகைமையையும் ஏற்படுத்துகின்றது. இப்படியாக நண்பர்களைச் சம்பாதிப்பதில் நன்மைக்குப் பதிலாக தீமையே மேலோங்கி இருப்பதைக் காணுகின்றோம்.

இன்னும் சிலர் அசட்டுத் தைரியத்தை ஏற்படுத்துவதற்காக - அதாவது பேசுவதற்குக் கூச்சப்பட்ட நிலையில் அல்லது குறிப்பிட்ட நபருக்கு எதிராக சுடு வார்த்தைகளைப் பேச வேண்டுமென்ற எண்ணத்தோடு அல்லது பழிவாங்கும் எண்ணத்தை வரவழைப்பதற்காக மது அருந்துகின்றார்கள்.

இன்னும் சிலர் மனைவி ஏதும் முரண்பட்டால் நல்ல பாடம் கற்பிக்க வேண்டுமென்று நோக்கத்தோடு குடியை நாடுகின்றார்கள். ஆனால் ஈற்றில் எஞ்சி இருப்பது ஒன்றுமில்லை. மாறாகக் கவலையும் கண்ணீரும்தான்.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

## நீங்காத நினைவுகள்

### 25ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15 - 02 - 1927

உதிர்வு 09 - 02 - 1984

**திருமதி. செபமாலை சத்தியசீலன்**
**(வீடத்தல்தீவு)**

**அம்மா!**

**வாழ்வில் உங்களை**
**நேசித்தோம் மரணத்திலும் மறவோம்!**

அம்மா என்ற சொல்லுக்கு இலக்கணமான தெய்வமே
அன்பின் வடிவாக எம்மை அரவணைத்த தாயே!
சும்மா நாங்கள் மொழியவில்லை சொற்களில் அர்த்தம் உண்டு
சுகந்த நறுமணமாய் உம் வாழ்வு இன்றும் கமழ்கிறது

எத்தனை துன்பங்கள் வந்தாலும் எத்தனை தடைகள் நேர்ந்தாலும்
எத்திசையும் புகழ்பரப்பும் வண்ணம் எங்களை ஆளாக்கினீர்கள்
சத்திய தேவனின் ஆறுதலில் அமைதிபெற வேண்டுகின்றோம்
சமர்ப்பணம் செய்கின்றோம் எங்கள் அன்பைக் காணிக்கையாய்!

**என்றும் உங்கள் நினைவில்**
கணவன், பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்

### 2ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 03 - 08 - 1926

உதிர்வு 06 - 02 - 2007

**அருட்பணியாளர்**
**ச. சாமிநாதன் சோசை**
**(வங்காலை)**
(துறவு 06 - 09 - 1947)

சத்திய வேதத்தின் சத்தியங்கள் சாற்றிட
முற்றும் துறந்த சாமிநாதன் சற்குருவே!
ஆண்டுகள் அறுபது ஆண்டவன் அடியானாய்
அர்ப்பணித்து ஆற்றிட்ட அருட்பணிக்காய்
நிலையான விண்ணக வாழ்வுதனையே
வழங்கிட எம் இறைவா வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்**

### 2ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 12 - 03 - 1920

உதிர்வு 06 - 01 - 2007

**சீமான் பிரான்சீஸ் குரூஸ்**
இளைப்பாறிய தபால் அதிபர்
**(முள்ளிக்குளம்)**

அன்பின் உருவாய்! எம் உறவின் வேராய்! ஆற்றல் அறிவுடன் தபாலதிபராக, கலா கவிதா ரசிகனாக! தார்மீகக் கடமையாற்றி சீரும் சிறப்புடனும் குன்றா மகிழ்ச்சியுடனும் ஆறு கனிகளைப் பெற்று - அதில் ஒன்றை இறைவனுக்கு பணிசெய்ய அனுப்பி பதினேழு பேரப்பிள்ளைகளைக் கண்டு இன்புற்றிருக்கும் வேளை - இது போதும் என்றா இறைவன் உம்மைத் தம்மிடம் அழைத்துக்கொண்டார்?

"இறைவன் கொடுத்தார். அவரே எடுத்துக்கொண்டார்"

இவரின் பிரிவால் துயருறும் :
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

### 1ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 18 - 02 - 1984

உதிர்வு 29 - 01 - 2008

**சூ. ஸ்ரான்லி சுரேஸ் லெம்பேட்**
(பெரிய பண்டிவிரிச்சான்)

நினையாத நேரம் அணைந்த - எம் இதய தீபமே! உன் புன்னகை தெரிகையிலே எம் கண்கள் கண்ணீர் வடிக்கிறதே! உன் பேச்சொலி கேட்கையிலே எம் இதயம் இரண்டாய் பிளக்கிறது. விதியின் சதியால் உன் உயிர் விலை பேசப்பட்டதடா! - உன் உயிருக்கு யமனாய் கிளைமோர்தான் வெடித்ததா? மடுப்பதியே கலங்கி நிற்க விண்ணுலகை நீ அடைந்துவிட்டாய்! நாம் மண்ணுலகில் உன் நினைவால் மரணிக் - கின்றோம். நிதமும் உன் நினைவு நெஞ்சை வருடிச் செல்கின்றன. வருடங்கள் சில சென்றாலும் யுகங்கள் பல எடுத்தாலும் எம் மனங்களில் உன் நினைவு வந்து செல்லும்.

இவரின் பிரிவால் துயருறும் :-
மனைவி, பெற்றோர் சகோதரங்கள், மாமி குடும்பம், உற்றார் உறவினர் நண்பர்கள்

### 31ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 05 - 07 - 1918

உதிர்வு 26 - 12 - 2008

கொஸ்தந்தீன் செபஸ்ரியான் கூஞ்ஞ
(இளைப்பாறிய தபால் ஊழியர்)
(தலைமன்னார் மேற்கு)

நினைவெல்லாம் எம்மோடு நிறைந்திருக்கும் எம் செல்ல ஐயாவே! பாசமாய் எம்மை அரவணைத்து பண்பிலே, பக்தியிலே பக்குவமாய் வளர்த்து, கருத்தாய் கல்வி அளித்து, கடமையில் கண்ணியமாய், கருணையின் வடிவமாய், கண்ணின் மணிபோல் காத்த எங்கள் அன்பு ஐயாவே! உங்கள் அரவணைப்பும், ஆதரவும் இல்லாமல் தவிக்கின்றோம் ஐயா!

(இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 26.01.2009 அன்று காலை 6.00 மணிக்கு தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.)

இவரின் பிரிவால் துயருறும்: அன்புப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.81 எசாயா 12-22

உங்கள் விடைகளை 15. 02. 2009க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | 03 | | | | | | 04 | | | |
| | | ✸ | | | | | | 05 | ✸ | |
| | | | | | | 06 | | | | |
| | | | | | ✸ | | | | | 07 |
| ✸ | | | | 08 | | | | | | 09 |
| | | | 10 | | | | 11 | | | |
| | | 12 | | | | | | | 13 | |
| | | | | | 14 | ✸ | 15 | | | |
| | 16 | | | 17 | | | | | | 18 |
| 19 | | | | | ✸ | | | | | 20 |

## இடமிருந்து வலம்

01. மீட்பருளும் ஊற்றுக்களிலிருந்து நீங்கள் .................. தண்ணீர் முகந்துகொள்வீர்கள்.
03. தீங்கிழைப்போரின் ..................என்றுமே பெயரற்றுப்போகும்.
04. ..................த் தோட்டங்களில் பாடல்களிள் பாடுவார் யாருமில்லை. (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
06. அவர்கள் வில்வீரர் .................. மோதியடிப்பார்கள்.
10. தங்கள் கைப்படச்செய்த..................க் கம்பங்களையும் மரச்சிலைகளையும் நோக்கமாட்டார்கள்.
11. இரு..................களுக்கும் இடையே பழைய குளத்துத் தண்ணீருக்கென்று ஒரு நீர்த்தேக்கத்தை அமைத்தீர்கள்.
15. எஸ்போனின்..................வெளி நிலங்கள் வாடுகின்றன.
17. நான் சிபிமானின்..................த் தோட்டத்திற்காகக் கண்ணீர் விடுகின்றேன்.
19. அந்நாளில் எகிப்திலிருந்து அசீரியாவிற்குச் செல்ல ஒரு ..................உருவாகும்.

## மேலிருந்து கீழ்

01. அழுது புலம்புங்கள் ஆண்டவரின் நாள் ..................உள்ளது.
02. நான் தீட்டிய.................. நிலைத்து நிற்கும்.
03. படைகளின் ஆண்டவர் தீட்டிய திட்டத்தைச் சீர்குலைக்க.................. எவன்?
06. மண்ணுலகம் முழுவதும்.................. அமைதியில் மூழ்கியிருக்கின்றது.
09. கொடுங்கோல் மன்னன்.................. அவர்களை ஆள்வான்.
10. படரும் கொடிகளை.................. அகற்றிவிடுவான்.
12. நான் மனம்கசந்து..................யழ விடுங்கள்.
13. மோவாபின்..................யெங்கும் கதறியழும் குரல் எட்டுகிறது.

## வலமிருந்து இடம்

02. ஒருவர் மற்றவரைப் பார்த்துப்..................நிற்பர்.
05. அவற்றை அச்சுறுத்த ..................இரார்.
06. ஆண்டவர் யாக்கோபின்மீது.................. காட்டி இஸ்ராயேலை மீண்டும் தேர்ந்துகொள்வார்.
07. அவற்றில் ஒன்று 'கதிரவன்..................' என்று அழைக்கப்படும்.
09. அதன்மேல் தாவீதின் கூடாரத்தைச் சார்ந்த .................. வீற்றிருப்பார்.
13. அதன் போர்வீரருள் கோழை .................. இல்லை (2வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே உள்ளது)
18. நண்பகலில் உங்கள்.................. இரவு போலாக்கி விரட்டியடிக்கப் - பட்டவர்களுக்கு மறைத்து வையுங்கள். (2ம்,3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
20. அவர்களுக்காக .................. அவர்களுக்கு விடுதலை பெற்றுத்தரும் மீட்பர் ஒருவரை அவர் அனுப்புவார்.

## கீழிருந்து மேல்

06. தோன்றும்போதே கதிரவன் .................. போவான்.
08. சிந்திய கதிர்களைப் .................. எடுக்கும்பொழுதும் இருபாயிம் பள்ளத்தாக்கு இருப்பதுபோல யாக்கோபின் நிலைமை இருக்கும்.
10. அழிக்க வருபவனின் பார்வையிலிருந்து தப்ப அவர்களுக்கு .................. மாய் இருங்கள்.
12. ஒவ்வொருவனும் மனக் .................. அடைகிறான்.
14. ஓர் அரசுக்கு ..................மற்றோர் அரசும் மோதிக்கொள்வர்
16. தேர்ப்படையோடும் குதிரை.................. புறப்பட்டனர். (4வது எழுத்து 1வது எழுத்துக்குமுன் உள்ளது)
17. அந்நாளில் தாவீது குடும்பத்தாரின் .................. கோலை அவன் தோளின்மேல் வைப்பேன்.
19. எகிப்தின் குலமுதல்வர்கள் அதை..................ச் செய்தார்கள்.

# விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 79ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:**

**முதலாம் பரிசு:**
*கத்தரின் சேவியர்*
*பெரியகடை*
*மன்னார்*

**இரண்டாம் பரிசு:**
*க. கமிலஸ்*
*எல்.சி. இ.எஸ். இல. 25,*
*கோவில்வீதி*
*கொழும்பு –15*

**மூன்றாம் பரிசு:**
*ஜெ.எம். ஜெயந்தன்*
*நறுவிலிக்குளம்,*
*வங்காலை*

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 175 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 170 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.79ல் சரியான விடைகளை அனுப்பிவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. அ. யோ. தனுசாந், தரம் - 7, குழந்தை இயேசுபுரம், மன்னார்.
2. செ. டினுசன், தரம் 04, களிமோட்டை முகாம், முருங்கன்.
3. அ. சுகந்தன் குரூஸ், அரிப்பு, முருங்கன்.
4. எஸ். யூலின் சியாணி, 88 சிறியகுருமட வீதி, மன்னார்.
5. ஆர். றொபின் இறம்பைக்குளம், வவுனியா.
6. பீ. யுஸ்ரின், பொன்தீவுகண்டல், முருங்கன்.
7. த. பர்வின் நிலாந்தினி, சின்னப்பண்டிவிரிச்சான், மடுக்கோயில்
8. எஸ். லியோன் யோயல், எச். என். 198, பூண்டி. வீதி, 5ம் வட்.
9. எஸ். மெரின்ரன் பெனாண்டோ, புனித சவே. ஆண்க்ள் பாட.
10. லீ. டெய்சி, பெற்றா, மன்னார்.
11. யோ. மிலேசா, முதலைகுத்தி, உயிலங்குளம்.
12. எ. கே. எரோண்சி, கங்காணிதீவு, நானாட்டான்.
13. பி. ஜெ. சிந்தூஜா, எழுத்தூர், மன்னார்.
14. செ. றொபின்சன், மளுவராயர் கட்டையடம்பன், மடுறோட்.
15. மி. சுதர்ஷன், முருங்கன் பிட்டி, முருங்கன்.
16. ஜெ. எட்சரண் காகு, அரிப்பு, சிலாவத்துறை, மன்னார்
17. யோ. அஜித், ஜேர்மனி.
18. ச. மேரி டிபோட்டா, நொச்சிக்குளம், உயிலங்குளம்
19. ரி. எஸ். டக்ஷன், இல. 76/100 சாந்திபுரம், மன்னார்
20. பொ. பிரியதர்ஷினி, தரம் 5 றோ.க.த.க.பாட. முதலியார்குளம்
21. எம். எம். சுதர்ஷினி, புதுக்கமம், உயிலங்குளம்,
22. பற்றசன், இல. 113, பெரியகமம், எழுத்தூர், மன்னார்.
23. செ. யுனிஸ்ரன் கொடுதோர், கற்கிடந்தகுளம், முருங்கன்.
24. ச. லின்ரா கீளியன்குடியிருப்பு, தலைமன்னார்
25. என். அகிலா வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை
26. வ. மதுஷன், 464, பிரதானவீதி, நீர்கொழும்பு
27. ஜெ. விதுனேஷ், இறம்பைக்குளம், வவுனியா
28. எம். பிரான்சிஸ்கா, புதுக்கமம், உயிலங்குளம்
29. தே. ஜெயசீலன், ஸ்டேசன், தலைமன்னார்
30. சூ. பத்திநாதன் சராம் சுகிர்தசீலி, பரிகாரிகண்டல், முருங்கன்
31. ஜோ. யூ. பிரியதர்சினி, கங்காணிதீவு, நானாட்டான்.
32. எஸ். டேவிற் சஜீவன் கூஞ்ஞ, தலைமன்னார் கிராமம்.
33. அ. கிறேசியன், சின்னப்பண்டிவிரிச்சான், மடுக்கோயில்.
34. அஞ்சலா பிரான்சிஸ், உப்புக்குளம், மன்னார்
35. திருமதி. கலிஸ்ரா. ஆர். வ. இ. ம. ம. வ. வவுனியா
36. யே. ஜஸ்மின், பள்ளக்கமம், முருங்கன்
37. எஸ் நதின், 88, சிறியகுருமட வீதி, மன்னார்
38. மேரி கலாநிதி செபமாலைதாசன் லோகு, சாவற்கட்டு, மன்.
39. ச. ஜெயந்திமாலா, கல்நாட்டி, முருங்கன்
40. ஆர். மேரிக் கெலன் பிகிறாடோ, பள்ளிமுனை, மன்னார்.
41. ஞா. மருதாகேமினி, மாதிரிக்கிராமம், வங்காலை.
42. எஸ்.டிலக்சன், இல3 கற்குழி வவுனியா.
43. ரா.அகிலா, பாவிலுப்பட்டான் கட்டுக் குடியிருப்பு, தலைமன்0.
44. எஸ் ஆன் ஷர்மி சோசை, தோமஸ்புரி, வங்காலை
45. அ. ஜோர்ஜ் மேரி, கொன். குடியிருப்பு, தாராபுரம், மன்னார்
46. பி.நவரெட்ணம், இல 180 ஒலிமோட்டை, மன்னார்.
47. இதய றூபன் பரிகாரிகண்டல், முருங்கன்
48. அ. ஜெ. இவான்சலின், முதலைகுத்தி, உயிலங்குளம்
49. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்
50. எம்.ரவிந்தன்,எஸ்.சுஜித்தா,கெ.மியூரின் சிலுவைநகர், த.மன்னார்.

# நாம் ஏன் குடிக்க வேண்டும்?
## (18ம் பக்கம் தொடர்ச்சி)

இந்நிலமைகள் "குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு" என்பதாகவே இருக்கின்றது.

மது அரக்கனின் கோரப்பிடியில் சிக்கி பல குடும்பங்கள் நிம்மதியிழந்து வருவதைக் கண்கூடாகக் காணுகின்றோம். கஸ்டப்பட்டு உழைத்த பணம் மதுப்பாவனையால் வீணே விரயமாகிறது.

மதுப் பாவனை உடலில் 60% வீதமான நோய்களைத் தோற்றுவிக்கின்றது. குறிப்பாக இரத்தவாந்தி, ஈரல் கரைதல், நரம்புத்தளர்ச்சி, இருதய வியாதி, குடல் புண் இன்னும் பற் பல....! மனைவியுடன் சண்டை பிடிப்பதால் பிள்ளைகள் மதிப்புக் கொடுப்பதில்லை. சிறு வயதில் பிள்ளைகள் முறையற்ற திருமணம் செய்வதற்கு இவர்களுடைய குடி காரணமாக அமைகிறது. சிறுவர் துஸ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம் புரிவதற்கும் இது ஏதுவாக அமைகிறது. உள்ளத்தில் அமைதியற்ற நிலை, வீண் சந்தேகம், பொறுமை இழத்தல், வாக்குவாதப்படல், துர்வார்த்தைகள் போன்றவை அன்றாட அனுபவமாக மாறுகின்றன. மற்றும் இவர்களுடைய பேச்சுக்கள், செயல்கள் என்பன மற்றவர்களுக்கு வெறுப்பையும், ஆத்திரத்தையும் விளைவிக்கின்றன. சமூகத்தில் இருந்து இவர்கள் ஒதுக்கப்படுகின்றார்கள். மற்றவர்கள் இவர்களைக் கேலி பேசி கை கொட்டிச் சிரிக்க ஏதுவாகின்றது.

ஒருவர் மதுவில் தங்கியிருக்கின்றார் அல்லது மதுவிற்கு அடிமையாகியுள்ளார் என்பது கீழ்வரும் அறிகுறிகளைக் கொண்டதாகும். 1. மது அருந்தவேண்டும் என்னும் கட்டுப்படுத்த முடியாத பேராவல். 2. அருந்தும் மதுவின் அளவைக் கட்டுப்படுத்த முடியாமை 3. உடல் மதுப் பழக்கத்துக்குப் பழகிப்போதல். 4. எவ்வளவு மது அருந்தினாலும் திருப்தி ஏற்படாது மேலும் அருந்த வேண்டுமென்ற உணர்வு. 5. மதுப்பழக்கம் தீயது என உணர்ந்தும் அதிலிருந்து விடுபடமுடியாமை.

போன்ற நிலமைகள் அவர் மதுவில் தங்கியிருத்தல் அல்லது மதுவிற்கு அடிமையாதல் எனக் கொள்ளப்படலாம். இதனால் மதுப்பாவனைக்கு உட்பட்டவர்களாக அவர்கள் சிகிச்சைக்கு உட்பட வேண்டியுள்ளார்கள்.

"குடி குடியைக் கெடுக்கும்" என்று குடிகாரர்களை மேலும் பிரச்சினைக்குள்ளே தள்ளுகின்றோம். இவ்வாறு அவர்களை வெறுப்பதால் பிரச்சினைகள் தீருமா? இதற்கு என்ன செய்யலாம் என்ற கேள்வி எமது மனதில் எழத்தான் செய்கிறது. இதற்குத் தீர்வு உண்டு என்றால் நம்புவீர்களா? இதற்கு தீர்வு உண்டு என்பதுதான் எமது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

AA என்றதொரு அமைப்பு (Alcoholic Annonymous - பெயர் கூறப்படாததொரு அமைப்பு) இப்படிப்பட்டவர்களுக்கு உதவுகின்றது. 1935ல் நியூயோர்க் நகரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பில் இன்று உலகத்தில் 170 நாடுகளில் உள்ள பல இலட்சம் மக்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இது கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டு முதலில் பேசாலையிலும் தற்போது "திருப்புமுனை' என்ற பெயரில் தோட்டவெளியிலும் இயங்கிகொண்டிருக்கின்றது. இது மன்னார் மறைமாவட்டத்தின் பணிசார்ந்த அமைப்புக்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. இது மன்னாருக்குக் கிடைத்த மாபெரும் அருட்கொடையாகும்.


# மன்னா சந்தா விபரம்


**உள்நாடு : ரூபா 600.00** (இலங்கை ரூபா)
**வெளிநாடு : ரூபா 2500.00** (இலங்கை ரூபா)

சந்தாப்பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ செலுத்தலாம்.
காசோலை மூலம் செலுத்துவதாயின்;
வங்கியின் பெயர் :
Hatton National Bank Ltd. (Mannar Branch)
பணம் பெறுபவரின் பெயர்:
The Editor - 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம்:
S/A No. 02 -1678001-5



## நீத்தார் நினைவு, பிறந்த நாள், திருமண யூபிலி போன்றவற்றைப் பிரசுரிப்பதற்கான
# புதிய கட்டண விபரம்

கறுப்பு வெள்ளை நிறத்தில் : - ரூபா 4000.00
பல நிறத்தில்: - ரூபா 7500.00
(பெப்ரவரி மாதம் 15ம் திகதியில் இருந்து புதிய கட்டணம் நடைமுறைக்கு வரும்.)
முக்கிய குறிப்பு: உங்கள் விடயங்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்படவேண்டும் என விரும்புகிறீகளோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக விடயங்களை அனுப்ப வேண்டும்.
- பதிப்பாசிரியர்

# நன்றி நவிலல்



"சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்"

தற்காலிக முகவரியான வட்டக்கச்சியில் நடைபெற்ற எனது மகன் பத்திநாதன் வளன்ராஜ் என்பவரது மரணச்சடங்கில் கலந்துகொண்டு செப வழிபாடுகள் செய்து எங்களுக்கு ஆறுதல் கூறிய யாழ், மன்னார் மாவட்டக் குருக்கள், அமலமரித் தியாகிகள் சபைக் குருக்கள், குருமட மாணவர்கள் (OMI) திருக்குடும்ப சபை அருட்சகோதரிகள், அன்புக்கன்னியர்கள், மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள், உணவளித்தவர்கள் மற்றும் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றியை செபத்தின் மூலமாகவும் அன்பாகவும் மன்னா பத்திரிகை மூலமாக தெரிவித்துக்கொள்கின்றோம்.

ச. பத்திநாதன் மற்றும் குடும்பத்தினர்,
சகாயவீதி, அடம்பன்

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 79இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இ[1] | ர | ச | த் | தி | லு | ம் | ண | ம | று | ந[2] |
| ளை | அ[3] | ப் | பா | ல் | னி | டி | ட் | தா[4] | ✸ | டு |
| ப் | னு | ஏ[5] | வ் | வ | கை | ✸ | டை | ன | தே[6] | வி |
| பா | னை | து | த் | ர் | ளி | து[7] | லை | மு | டி | ல் |
| ற | கொ[8] | ஞ் | ளை | ம | ள் | ஞி | கு | ✸ | னே | மே |
| ✸ | து | பு | று | அ[9] | க | து் | க் | ம் | ன் | ர் |
| ம் | லு | டு | க[10] | ரு | ணி | து | ழ | ள | தே | க[11] |
| கு | ளி | வ[12] | லி | மை | ம[13] | ✸ | ப[14] | து | த் | னி |
| க் | ள் | ள | ஆ[15] | ங் | கே | ளை | து | மா[16] | டி | க |
| ரி | வெ[17] | மை | ம[18] | கி | ழு | ம் | ✸ | ன் | பி[19] | ள் |
| எ[20] | மு | ந் | து | ந் | னி | க[21] | சை | ட் | ரா | தி[22] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.80றக்கான முடிவுகளை 2009ம் ஆண்டு பெப்ரவரி மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

# மன்னா

## மண வாழ்வில் பொன் விழா

28-01-2009



திரு. திருமதி. மரியதாஸ் மேரி மடுத்தீன்
தலைமன்னார் கிராமம்

இல்லற சோலைதனில்
ஐம்பது ஆண்டுகள் விழாதனில்
மகிழ்வுடன் தடம் பதித்த இந்நாளில்
உம் பிள்ளைகள் நாமும்
நற்சகோதரர் சுற்றத்தாரும்
வாழி நலம் வாழ்க என
வாழ்த்துகின்றோம்.
இந்நாள்வரை காத்த இறைவன்
இனி வரும் எந்நாளும்
இனிதே உங்களை காத்திடவேண்டி
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

வாழ்த்தும் பிள்ளைகள், பக்கோவாள், சேவியர், தார்சியூஸ், தேவதாஸ், சீலி, சந்திரா,
மற்றும் மருமக்கள், கார்லஸ், பிறேமசீலி, பேரன்மார், பேத்திமார், அருட் சகோதரி லோறன்சியா,
சகோதர சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள்.

## திருமண வாழ்வில் 50 ஆண்டுகள் பொன்விழா



திரு திருமதி ஞானப்பிரகாசம் பேர்ணடேத்
சுமணராம வீதி, கல்கிசை, கொழும்பு-7

10-01-1959
10-01-2009

சின்ன றோமாம் சில்லாலையில் பிறந்து
திருமண வாழ்வைத் தொடங்கி
ஏழு பிள்ளைச் செல்வங்களைப் பெற்று
இறை அருளால் சீரும், பண்பும்,
பக்தியும் கொண்ட நல் மக்களாக
மாநிலத்திலே வாழ வைத்திருக்கிறீர்கள்.
நன்றி!

இறையாசீருடன்
உடல் உள்ள நலம் பெற்று வாழ
மடு அன்னையை வேண்டி உங்களை
வாழ்த்தி நிற்பவர்கள்.

உங்கள் பிள்ளைச் செல்வங்கள்

தகவல் - மகள் கிறேஸ்

# நீங்காத நினைவுகள்

### 10ம் ஆண்டு நினைவு

மலர்வு: 5 – 5 – 1908
உதிர்வு: 21 – 12 – 1998



**எம்மா ம.றோ. எதிர்மனசிங்கை**
(பெரிய நாவற்குளம்)

### 26ம் ஆண்டு நினைவு

மலர்வு: 01 – 04 – 1900
உதிர்வு: 15 – 10 – 1982



**அ. றோசாயிறோ எதிர்மனசிங்கை**
(பழைய விதானையார்)

"எனது வாழ்நாள் மாலை நிழலுக்கு ஒப்பாயிற்று நானும் புல்லைப்போல் உலர்கின்றேன்" (தி.பா. 101:11)

ஒரு நாளும் எம்மைவிட்டுப் பிரிந்திருக்க மாட்டீர்கள்
ஓயாமல் அறிவுரை வழங்கி நெறிப்படுத்தினீர்கள்
இத்தனை ஆண்டுகள் எப்படியோ மறைந்துவிட்டன!
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு மறையாது.
இறைவனின் சன்னிதானத்தில் நீங்கள் என்றும் வாழ்ந்திட
இருகரம் கூப்பி இறைவனை வேண்டுகின்றோம்.

**செபம்**
இறைவா உமது அரசு வருக! உம்மால் அழைக்கப்பட்ட எமது பெற்றோருக்கு
முடிவில்லா நித்திய வாழ்வை உம் சன்னிதானத்தில் கொடுத்தருளும் ஆமென்.

**அன்புடன் நினைவுகூரும்**
பிள்ளைகள் அன்னபூபதி, ஜெயவதி, செல்பவதி, புனிதவதி, கிறிஸ்தோஸ்திரம்,
யோகானந்தம் மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் உறவினர்.
(தகவல்- பேரன், அருட்பணியாளர் ம. க. அருள்பிரகாசம்)

### 1ம் ஆண்டு நினைவு

மலர்வு: 04 – 12 – 1970
உதிர்வு: 01 – 02 – 2008



**செல்வி**
**செபஸ்ரியான் எட்வீஜ் டெலினா பீரிஸ்**
(ஆசிரியர் மன்/ ஆனாள் மகாவித்தியாலயம்)

பூ மகளைப் போலனையாய் புன்னகையால்
நா மலர போதியவை செய்த பூங்கொடியே
எம் குலம் விளங்க வந்த முதற்கனியே திருமகளே
ஆண்டவனை அணைத்து
ஓராண்டைநிறைவு செய்தாய்.
வற்றாத பேரூற்றாம் கல்விச் செல்வத்தை
மற்றோருக்கு வழங்கி வந்த கலைமகளே
ஆண்டவரில் அகமகிழ்ந்து
அடியோர்க்காய் வேண்டிடுவீர்.
உங்கள் ஆன்மா அமைதிகொள்ள
என்றும் இறைபதம் இறைஞ்சும்

குடும்பத்தார் உற்றார் உறவினர் நண்பர்கள்
பாடசாலைச் சமூகம்

### 5ம் ஆண்டு நினைவு

மலர்வு: 28 – 10 – 1939
உதிர்வு: 04 – 02 – 2004



நெடுங்கண்டல் அடம்பன்
வத்தளை

**அமரர் செலஸ்ரினம்மா பிரான்சிஸ் பொன்னையா**

அன்பு மனைவியாக ஆவியுள்ளவரை
பண்புடன் நடந்துகொண்டீர்!
பாசநேசமுடன் அனைவரையும்
ஆசைமுகம் காட்டி அணைத்துக்கொண்டீர்!
அருமை அன்னையாக நாமெல்லாம்
பெருமை பெற வளர்த்திட்டீர்!
அன்புக்கோர் அடையாளமாய்
ஆசை அத்தையாகத் திகழ்ந்திருந்தீர்!
குன்றின் மேலேற்றிய ஒளிச்சுடரே
நாமினி உங்களை என்று காண்பதுவோ
இதயம் பதைக்குதம்மா!
பாவம் போக்கிடவே பாருக்குவந்த தெய்வம்
பாதம் சேர்ந்திடவே செபிக்கின்றோம் அனுதினமே

ஆறாத்துயரில்
அன்புக்கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தகவல்: மகன் லெஸ்ரர் பொன்னையா - ஜேர்மனி

### 2ம் ஆண்டு நினைவு

மலர்வு: 03 – 11 – 1948
உதிர்வு: 01 – 01 – 2007



**அமரர்**
**சிங்கராயர் மேரிபோசப்**
(நிர்வாக உத்தியோகஸ்தர், மடுக்கல்வி வலயம் - மாந்தை)

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்" (யோவான் 11:25)

என் தேவைகளை அறிந்து செயற்பட்டு
என்னை வாழ வைத்து மகிழ்ந்த
என் அன்புருவே!
மண்ணைவிட்டு மறைந்தாலும் - என்
நெஞ்சைவிட்டு அகலாது வாழ்கின்ற
உங்கள் ஆன்மா விண்வீட்டில் மகிழ்ந்திருக்க
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

திருப்பலி 02.01.2009 அன்று காலை 6.15 மணிக்கு
பட்டித்தோட்டம் மாதா கோவிலில்
ஒப்புக்கொடுக்கப்பட்டது.

குடும்பத்தினர்

### 1ம் ஆண்டு நினைவு

மலர்வு: 16 – 01 – 1935
உதிர்வு: 30 – 01 – 2008



**திரு. செபமாலை சந்தியோகு**
(பெரிய பண்டிவிரிச்சான்)

அன்பே உருவான எங்கள் தந்தையே!
வருடம் ஒன்று கடந்தாலும்
உங்கள் நினைவு எம்மைவிட்டு அகலாது.
ஏங்குகிறோம் உங்கள் அன்புக்காக
காத்திருக்கின்றோம் உங்கள் அறிவுரைக்காக.
பயன்மிகும் இறைவனின் கருவியாக
எம்மோடு வாழ்ந்தீர் ஐயா!
இறப்பிலும் இறைவனோடு வாழ
இறைஞ்சுகின்றோம் இறைவனை நிதம்
நின் ஆன்ம சாந்திக்காக!

இவரின் பிரிவால் துயருறும் :
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
உற்றார், உறவினர்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பு 14, பிறின்ஸ் ஒப் வேல்ஸ் அவனியூ, 784ஷ1 இலக்கத்திலுள்ள கிறேஸ் என்ரபிறைசஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது